Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 13 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 நவம்பர் 2021




தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
- Purchase
- Refinance
- First | Second Mortgage
- Equity Line of Credit

Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும் Sri Lanka, India, Germany போன்ற நாடுகளில் தையல் கலையில் பிரபலமான புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிப்பிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின் மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு $100 மட்டும்
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாலராசா
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
- All General Home Repairs
- Basement Renovation
- Carpet Installation
- Drywall Installation
- Hardwood Flooring Installation
- Washroom Remodeling
- Kitchen Cabinets
- Kitchen Cabinets Installation
- Painting
- Plumbing
- Tiling

www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We' ve definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும் 7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
CPA CA
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8


## முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**இன்று மாவீரர் நாள்.**
**தமிழீழச் சுதந்திரப் போரை இந்தப் பூமிப்பந்திலே முதன்மையான விடுதலைப் போராட்டமாக முன்னிறுத்திய எமது மாவீரச்செல்வங்களை நினைவுகூரும் தூய நாள். ஆயிரமாயிரம் அக்கினிப் பந்துகளாக, எரி நட்சத்திரங்களாக எரிந்து, எமது விடுதலை வானை அழகுபடுத்தி, அலங்கரித்து நிற்கும் எமது சுதந்திரச் சிற்பிகளை நினைவுகூரும் புனிதநாள்.**



# கனடாவில் திரிபு படுத்தப்படும் "மாவீரர் நாள்"




தாயக மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் 4,00,000 ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் தாயக நினைவுகளை சுமந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தங்களையும் மிஞ்சி, எவ்வளவே குடும்பசுமைகளுக்கு அப்பாலும் (2004ற்கு முன்) தமிழனுக்கு நாடு வேண்டும், தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் காலத்தில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காகவும் தங்களையும் மீறி தங்களுடைய சக்திக்கு மேலாகவும் உதவிகள் புரிந்தார்கள். ஆனால் அவற்றில் முழுமையாக சென்றடையாவிட்டாலும் 75 வீதம் சென்றடைந்ததாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 2005ம் ஆண்டுக்குப்பின் கனடாவில் மக்களிடம் சேகரிக்கப்பட்ட பணத்தில் 20 வீதம் ஆன பணம் கூட நாட்டுக்கு சென்றடையவில்லை என்பதே உண்மை.

**தற்போதைய விடயத்திற்குவரு வோம்.**

2009ம் ஆண்டுவரை ஒவ்வொரு நவம்பர் மாத்திலும் தமிழீழ விடுதலைக்காக தங்கள் இளமைக் காலங்களை துறந்த, தாய் தந்தையர் உறவுகளை விட்டு, சகல ஆசாபாசங்களையும் விட்டு விட்டு, உயிர் தமிழிற்காகவும் - உடல் மண்ணிற்காகவும் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் வழிகாட்டிலில் களமாடி வீரச்சாவை தழுவியவர்கள் எங்கள் மாவீரர்கள். அந்த வகையில் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் முதலாவது மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டது. 1989ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்பில் முழுத் தமிழீழ மண்ணும் இருந்த போதும் கூட மணலாற்றுக் காட்டில் வைத்து தலைவர் அவர்களால் தமிழீழ தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டே தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவை தழுவியவர்களுக்கான "மாவீரர் நாள்" வீர வரலாற்று முறை நடைமுறைக்கு வந்தது.

அந்தவகையில் உலகம் பூராகவும் தலைவர் காட்டிய வழியில் "மாவீரர் நாள்" என்ற சொற்பதத்துடனேயே ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 27ம் நாளில் மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களின் நிளைவுகளை தாங்கி மாவீரர் நாள் நடைபெறுகிறது... ஆனால் 4,00,000 ஈழத்தமிழர்கள் வாழும் கனடாவில், நான்கு அல்லது ஐந்து பேர்களால் மட்டும் முடிவெடுக்கப்பட்டு "நினைவெழுச்சி நாள்" என்று 2009க்கு பிற்பட்ட காலத்தில் இச் சொற்பதம் இறுக்கமாக பாவிக்கப் பட்டு வருகிறது.

இந்த நாட்டில் "மாவீரர் நாள்" என்ற சொற்பதம் பாவிப்பதற்கோ அல்லது எமது பாரம்பரிய, தமிழருக்கே உரித்தான, தமிழரின் தேசியக் கொடியான புலிக் கொடியை ஏற்றி மாவீரர் நாள் மட்டுமல்ல எந்த செயற்பாட்டை செயவதாற்கும் இந்த கனடா நாட்டில் எந்த தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். ஆகவே கனடா வாழ் தமிழ் மக்களை ஏமாற்றி, இவர்களுக்கு அச்ச உணர்வை ஏற்படுத்தி தாங்கள் நினைத்தபடி மாவீரர் நாளையும் கொச்சைப்படுத்தி நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் மக்களையும், மாவீரர்களையும் ஏமாற்றாதீர்கள்.

நினைவெழுச்சி அகவம் கனடா என்று ஒரு குழுவை நியமித்து, அவர்கள் எடுப்பத தான் முடிவு என்றும் அதன்படி தான் செயற்படுவோம் என்று கூறுவதும் தமிழீழ மண்ணிற்காக வீரச்சாவடைந்த மாவீரர்களை சொச்சைப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

இப்படியான பெயர் மாற்றங்களும் - தான் தோன்றித்தனமான ஒரு சிலர் முடிவுகளும், தலைவரின் சிந்தனைகளுக்கும், தமிழீழத்திற்கும், மாவீரர்களின் கனவுகளுக்கும் செய்யப்படும் துரோகங்களாகவே கருத வேண்டியுள்ளது.

அகவம் என்ற போர்வையில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் நாட்டின் நலன் சார்ந்தவைகளாகவும், மாவீரர்களின் கனவுகளுக்கும், தலைவரின் சிந்தனைகளுக்கும் செயல் வடிவம் கொடுப்பவையாக இருக்க வேண்டுமே தவிர அவற்றை சிதைப்பவையாக இருக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோள்.

இவ்வளவு காலமும் நாட்டிற்காக மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் எவ்வாறு நாட்டிற்கு போய் சேரவில்லையே அதேபோல், தலைவரின் பிறந்தநாள் விழா என்ற போர்வையில் சேகரிக்கப்படும் பணமாக இருந்தாலும் சரி, மாவீரர் நாளை நினைவெழுச்சி நாள் என்ற போர்வையில் கொண்டாடுபவர்களாக இருந்தாலும் சரி மக்களை ஏமாற்றாதீர்கள். மாவீரர் நாளில் சேரும் பணம் கொஞ்சமல்ல என்பதை கனடா வாழ் தமிழ் மக்களும் சரி, வியாபாரா நிலையங்களும் சரி புரிந்து கொள்ளுங்கள்.

ஆகவே, நினைவெழுச்சி அகவம் என்ற போர்வைக்குள் இருப்பவர்களே, மக்கள் மத்தியில் உங்கள் சுய இலாபத்திற்காக, சுய நலத்திற்காக மக்கள் மத்தியில் பய உணர்வை துாண்டாதீர்கள். கனடாவை பொறுத்தவரை எமது மாவீரர்களை கௌரவிப்பதையோ, தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை செய்வதற்கோ எந்தத் தடையும் இல்லை என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்கிறோம். ஆகவே 2021க்கான மாவீரர் நாளை "மாவீரர் நாள் 2021" என்ற பெயருடனே மாவீரர்களின் கனவை சுமந்தும், தமிழீழ மண்ணின் விடுதலைக்காக மடிந்த மாவீரர்களையும் கௌரவிப்போம். தமிழீழத் தேசியக் கொடி தமிழீழ மண்ணின் அடையாளம். தேசியக் கொடி ஏற்றத்துடன் நிகழ்வுகளை தொடங்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். இவ் இரண்டையும் செய்ய முடியாதவர்கள் என்றால் எதுவுமோ செய்யாதிருங்கள். இவை இரண்டும் தமிழனுடைய அடையாளங்கள். தமிழனுடைய முகவரியை தொலைக்காதீர்கள். சிங்கள அரசின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் குழுவாக செயற்படதீர்கள் என்பதே எமது வேண்டுகோள்.

-குமரன்-




# அணையாத சுடர் லெப்டினன்ட் சங்கர்

சத்தியநாதன் (கம்பர்மலை – வடமராட்சி)




ஒரு நாள் அதிகாலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப் பட்டதாகத் தகவல் கிடைத்ததைத்தொடர்ந்து இராணுவத் தினரால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது.

அவ்வேளையில் அங்கீரந்த ஒரு இளைஞன் முற்றுகை யிட்டவர்களை நோக்கி, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டுமதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான். அவனை நோக்கிச் சிங்கள இராணுவத் தினரின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளை ஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலுங்கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல்தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத்துப் பாக்கியை ஒப்படைத்து விட்டு கீழே விழுந்து மூர்ச்சையா கிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியமையினால் இரும்பையொத்த அவனது கட்டுடல் சோர் வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட் டமாகையால் அப்போது அங்கு போதிய மருத் துவ வசதி ஏற்படுத்தப் படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனை தோழர்கள் விசைப படகுமூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். இராணுவத் தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத்தாண்டி தமிழகம் செல்ல ஒரு வாராமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும்வரை அவன் நினைவு தப்பவில்லை. இருந்தபோதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோச மடைந்தது. அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்றிகள் வெற்றியளிக்கவில்லை.

தலைவரும், தோழர்களும் கண்கலங்கி நிற்க (27.11.1982ல் அன்று மாலை 6:05 மணிக்கு) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற்களப் பலியாகும் பெருமையை இணைத்துக்கொள் கிறான். (இதே நாள் இதே நேரமே தமிழீழ மாவீரர் நாளாக நினைவு கூரப்பட்டு, மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றப்படுகிறது.)

அவன்தான் வடமராட்சி கம்பர் மலையைப் பிறப்பிடமாக கொண்ட லெப்டினன்ட் சங்கர். சிங்கள இராணுவப் படையினர் வலை விரித்துத் தேடிவந்த செ. சத்தியநாதன்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லா வீரன். தமிழீழ விடுதலைப் புலி களின் தாக்குதற் பிரிவுத் தலைவன். ஒரு சின் னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்துவிடக்கூடிய வெடிகுண் டகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடு படுவான். அரசபடைகளின் தீவிரக் கண் காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்றுகொண்டிருக்கும் அவன் வழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணக் கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தை ஏற்படுத்தும் என் பதில் சங்கர் எப்போதும் வழிப்பாயிருப்பான். அரச படைகளின் கைகளில் சிக்க நேரு மானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த் திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப்போராளி கள் எனப்படுபவர்கள், ஆயுதங்களோடு பிடி படும் செய்திகளைப் பத்திரிக்கையில் வாசிக் கையில் குமுறுவான். அமைதியான தன்மை யும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தச் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த் தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு, அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப்போராளி சரணடைவது என்பது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப்போராட்டத் தின் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப் போராளிகளை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனு மதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்துவிடுவதில் நம்பிக் கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்த மானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிட முடியும் என்று பாசிச சர்வாதிகாரி ஜே.ஆர். ஜெயவர்த் தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது. நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது. ஓயாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத்திறந்து சாரதியை ஒரு கையில் வெளியே இழுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்த்த லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக் கும் அவனது சாதுரியம் அலாதியானது. நெல்லியடியில் அரச படையினர் பீதியுற்ற நிலையில். சங்கர் கால்களை அகலவிரித்து பக்கவாட்டில் நின்று அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில் லாத்தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு, பிரதான வீதி யிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந் திருந்த சாவகச்சோரிப் பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக் கும் சங்கர், சீலன் போன்ற போராளிகளின் முன்னே அபாயங்களும், தடைகளும் என்ன செய்துவிடமுடியும்? ஜி.3 சகிதம் படுத்துக் கிடந்த சங்கர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலை யத்தாக்குதலில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடத்திய தாக்குதல் இப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக்கை யிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக்கட்சி (ஜெயவர்த் தனா கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பா பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகித்தான்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும்



ஆற்றலும் சங்கரின் பன் முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான் றாகும். ஒரு கெரில்லா தாக்குதலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு. எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில் மிகுந்த வேகத் துடன் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.



சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்று விக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விடயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பிணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத்தலை மையிலேதான் வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமுச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத் திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவன் அறவே வெறுத்தான். அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக் கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார் கள்.

இயக்கத்தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற தூய்மைமிக்க விடு தலைப் போராளிகளால்தான் தலைமை யேற்று நடத்தப்பட வேண்டும் என்று அவன் எப்போதும் சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமை தியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந் திருக்கிறான்.

சாகும் தறுவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றோரை நினைக்க வில்லை. தம்பி தம்பி என்றுதான் அந்த வீர னின் உதடுகள் வார்த் தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண் கலங்கி நிற்க அந்த வீர மகன் சாவிலே வீழ்ந்து போனான்.

ஒரு உண்மை மனிதனின் கதை என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக்கொண் டிருந்த சங்கர் அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில் லை. சங்கர் என்ற உண் ணமை மனி தனின் கதையே ஒர வீர காவியம் தான்.




## போராட்டத்தின் முதல் இழப்பும்; தலைவரின் உணர்வலையும்!

**எமது முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த உடனே, தலைவர் அவர்கள் தம் கைப்பட தனது உணர்வுகளை எழுதியிருந்தார்; அதைக் கீழே தருகிறோம்.**

**சத்தியநாதன் (சங்கர்)**

**மறைவு : 27. 11. 82**

**இரவு 6. 05 மணி**

அதர்மத்தை அழிக்க எழுந்த மகாபாரத தர்மப் போரிலே தர்மத்தைக் காக்க முதல் களப் பலியாகிய அரவாணைப் போல், சிங்கள அதர்மர்களிடத்தில் தர்மயுத்தம் நடாத்தி எமது தமிழீழ நாட்டை மீட்கப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் களப்பலியாகிய சத்தியநாதனே! நீ உனது பெயருக்கேற்ப சத்தியத்திற்காகப் போராடி வீரமரணம் அடைந்துவிட்டாய். இதையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய். இல்லை, இல்லை. ஒரு வீரனின் வீரமரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம். தொடர்வோம் உன்பாதையில்; அடைவோம் உன்னைப்போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை.






# யாழ். போதனா வைத்தியசாலையின் அறிவிப்பு

**யாழ. போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி**

நவம்பர் 09, 2021

கன மழையின் தாக்கத்தினால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சாதாரண சிகிச்சை பெற வருவோர் சற்று தாமதமாக வருமாறு யாழ் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் பெய்துவரும் கனமழை மற்றும் தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத் தர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தின் காரணமாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் கிளினிக் பிரிவு மற்றும் சாதாரண பிரிவுகளில் செயற்பாடு மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் எனவே பொதுமக்கள் தற்போதுள்ள மழை குறைவடைந்த பின்னர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளதோடு அத்தோடு சாதாரண சிகிச்சை பெறுவோர் தற்போதைய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்காது.

கிளினிக் பகுதி மற்றும் இது இருதய சிகிச்சை கிளினிக் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதன் காரணமாக தற்போது சிகிச்சைகள் இடம் பெறாத நிலை காணப் படுகின்றது.

எனவே பொதுமக்கள் சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழை முடிந்த பின்னர் வருகை தந்து சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனினும் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் ஏனைய விசேட வைத்திய சேவைகள் அனைத்தும் இடம்பெறுவதாகவும் எனினும் சாதாரண சிகிச்சைகள் மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட் டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# "சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்" எனும் அறிவித்தலை வடக்கு கிழக்கு ஆயர்கள் மீளப்பெறவேண்டும்

**கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர்**
**அருட்தந்தை மா. சத்திவேல்**

நவம்பர் 08, 2021



இறந்தவர்களை நினைவு கூருவோம் எனும் அறிவித் தலை வடக்கு கிழக்கு ஆயர்கள் மீளப்பெற வேண்டும், சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம் " எனும் அறிவித்தலை வடகிழக்கு ஆயர்கள் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கௌரவத்தோடு வேண்டுகோள் விடுக்கின் றோம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற் கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:- இம்மாதம் 20ஆம் திகதி "மதங்களைக் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்" என வடகிழக்கு ஆயர்கள் கூட்டாக அறிவித்திருப்பது தமிழர் தாயகம் மீது அரசியல் தாகம் கொண்டவர்களை, மாவீரர்களை தியா கிகளாக ஆத்மீக ரீதியில் உணர்வுபூர்வமாக அர்ச்சித்து எழுச்சியோடு நினைவு கூருபவர்களை பல்வேறு சந் தேகத்திற்கும் வேதனைக்கும் கோபத்திற்கும் உள்ளாக்கி இருப்பதால் இவ்வறிவித்தலை மீளப் பெற்றுக் கொள் ளுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

மே மாதம் 18ஆம் திகதி யுத்தத்தில் கொல்லப்பட்ட தம் உறவுகளை வடகிழக்கு மக்களும் , புலம்பெயர் தமிழர் களும் அஞ்சலி செலுத்துகின்றனர். அத் தினத்தில் அர சியல் நீதிக்கான அவசரத்தையும் வலியுறுத்தி செயற் படுகின்றனர். கத்தோலிக்கத் திருச்சபை அருட்தந்தையர் களும் நினைவு கூர்தலில் துணிச்சலோடு முன் நின்று செயல்பட்டு கொள்கின்றனர். அதுமட்டுமல்ல முன்னாள் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளார் தமிழர்களின் அரசியல் குரலாக ஒலித்தவர் இவர்களை நன்றியோடு பார்க்கின்றனர் தமிழர்கள்.

இந்நிலையில் மாவீரர் வாரம் என்பது இறந்தவர்களை நினைவு கூறும் காலம் அல்ல. தமிழர்களின் தாயக அரசியலுக்காக உயிர்த்தியாகமானவர்களை, தமிழர் தாயக மண்ணில் வித்தாகி தமிழர் உள்ளங்களில் உயிர்ப் போடு வாழ்ந்து எமது அரசியலை இன்னும் கூர்மைப்படுத் தகின்ற தியாகிகளுக்கு தியாகச் சுடரை ஏற்றி கௌரப்படுத் துகின்ற வாரமாகும்.

இத்தகைய புனித வாரத்தின் முதல் நாள் இறந்தவர்களை நினைவு கூருவோம் என அழைப்பு விடுப்பது மாவீரர் குடும்பங்களையும், அவர்களை தியாகிகளென, புனிதர் களென நினைக்கன்றவர்களை மட்டுமல்ல மாவீரர் களையும் அவர்கள் எந்த அரசியலுக்காக தியாகமானார் களோ அந்த அரசியலையும் அவமதிக்கின்ற செயலு மாகும்.

தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் உயிர்த் தியாகிகள் ஆன அருட்தந்தையர்கள் போராட்டக் களத்தில் நின்றவர்கள் என நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர்கள் உள்ளனர் அதேபோன்று காணாமற்போன கத்தோலிக் கர்களும் உள்ளனர் இவர்களுக்காக நினைவுநாளை அறிவிக்காத திருச்சபை மாவீரர் வாரத்தின் முதல் நாள் நினைவு நாளாக அறிவித்தது ஏன்?

தமிழர் தாயகத்தையும் தமிழர் தாயக தேசிய அர சியலையும் சிதைக்க சர்வதேச சக்திகளும் உள்ளூர் சக்திகளும் கைகோர்த்து நிற்கின்ற காலம் இது தமிழர்கள் 30 வருடங்களுக்கு முன்பே ஏற்றுக்கொள்ளாத மாகாண சபையை முழுமையாக உட்படுத்துமாறு அழிவு சக்திகள் கூடுகின்ற காலங்களில் இன்னும் ஒரு பக்கம் ஒரே நாடு ஒரே சட்டம் என இனவாத காவியின் கையில் இன அழிப்பை தீவிரமாக திட்டமிடுகின்றனர்.

இந்நிலையில் இறந்தவர்களை நினைவு கூர மாவீரர் வாரத்தின் முதல் நாளை அறிவிப்பதன் மூலம் ஆயர் களும் எமக்கு எதிரான சக்திகளோடு மறைமுகமாக கை கோர்த்து எனது அரசியல் உணர்வையும் தியாக வரலாற் றையும் நீர்த்துப்போகச் செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்களா என சந்தேகம் கொள்ள வைக்கின் றது.

அத்தோடு வேறு சமயத் தலைமைகளையோ, பொது அமைப்புக்களையோ கலந்துரையாடாது இத்தகைய பொது அறிவித்தலை விடுப்பது அவர்களை அவமதிப்பதாக அமைந்திருப்பதோடு தன்னிச்சையாக அறிவிப்பு செய் திருப்பது தமிழர்கள் மத்தியில் இன்னுமொரு பிளவையும் ஏற்படுத்திவிடலாம் என்பதையும் சிந்திக்க தவறியது வேதனைக்குரியது.

ஆதலால் மாவீரர் வாரத்தின் புனிதம், மாவீரர்களின் தியாக வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் செயற் பாடு, தாயக அரசியலுக்கான கூட்டு செயற்பாடு என்பன கருதி "சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூரு வோம்" எனும் அறிவித்தலை வடக்கு கிழக்கு ஆயர்கள் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கௌரவத்தோடு வேண்டு கோள் விடுக்கின்றோம் என குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவகத்தில் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு பணிகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தம்!



நவம்பர் 08. 2021

யாழ். தீவகம் வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட தனியாருக்கு சொந் தமான அல்லைப்பிட்டியில் 7 பரப்பு காணியும் மண்கும் பானில் 8 பரப்பு காணியும் புங்குடுதீவு வல்லன் பகுதி யில் 14 ஏக்கர் காணியுமாக ஒரே நாளில் மொத்தமாக மூன்று இடங்களில் உள்ள தனியாருக்கு தொந்தமான குடி மகனை மற்றும் தோட்ட நிலங்களை இலங்கை கடற் படை யினருக்கு நிரந்தரமாக முகாம் அமைப்பதற்கு அளந்து சுவீ கரிக்க யாழ் நில அளவை திணைக்களம் எடுத்துக்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.





# வேலணை, அல்லைப்பிட்டியில் தமிழர்களின் காணிகளை சுவீகரிகரிக்கும் கடற்படையின் முயற்சிக்கு எதிராக மக்கள், தமிழ் அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டம் – நவம்பர் 07, 2021









# அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்றுதிரட்டி, இலங்கையை சிங்கள பௌத்த நாடு என நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சி

### நாடளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

நவம்பர் 07, 2021



அரசாங்கம் தனது அரசியல் பலத்தையும் படைகளின் ஆதிக்கத்தையும் ஒன்றுதிரட்டி, இலங்கையை சிங்கள பௌத்த நாடு என நிறுவுவதற்கான முயற்சி செய்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

அதன்பிரகாரம் தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களில் பௌத்த சிதைவுகள் இருப்பதாகக்கூறி முன்னெடுக்கப்பட்டுவரும் அகழ்வாராய்வுகள் இதற்கு முக்கிய சான்று என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெடுக்குநாறி மலையில், காரைநகர் பகுதி என வடக்கு கிழக்கில் பல பகுதிகளிலும் பௌத்த சின்னங்களும் சிதை வுகளும் இருப்பதாகக்கூறி தொல்பொருள் திணைக்களத் தினால் அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதா கவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் கடந்த காலங்களில் வரலாற்றாசிரியர்களாலும் தொல்லியலாளர்களாலும் நாட்டின் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று ரீதியான ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்வுக்குச் சமளவிலான ஆய்வுகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சிறிதரன் சுட்டிக்காட்டினார்.

அதுமாத்திரமன்றி தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்கள் குறித்த தொல்லியல் சான்றுகளையும் ஆதாரங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்குப் பலரும் தயங்கும் நிலையில் இவ்விடயங்கள் குறித்தும் கரிசனை கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மாவீரர் மாதத்தின் புனிதத்தை பேணுவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோருகின்றோம்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

நவம்பர் 12, 2021

ஆயர்மன்றமானது தமது முடிவை பரிசீலனைசெய்து அறிவித்தலை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உரிமையுடனும் பணிவன்புடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

மாவீரர் மாதத்தின் புனிதத்தை பேணுவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பையும் கோருவதாக வேண்டுகோள் விடுத்துள்ள தமிழ்தேசிய மக்கள் முன்னணி நவம்பர் 21-27 திகதிவரை நினைவிருத்தும் வகையிலும், வடக்குக் கிழக்குத் தழிழர் தாயகமெங்கும் நவம்பர் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணியொலி எழுப்பி வரலாற்றைக் கடத்துவதுமே வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பதையும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளது. தமிழ்தேசிய மக்கள் முன்னணி மேலும் தெரிவித்துள்ளதாவது மாவீவர் மாதத்தின் புனிதத்தை பேணுவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோருகின்றோம். எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 27 திகதி வரையான காலப்பகுதி தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் முக்கியமான வாரமாகும். அக்காலப்பகுதி தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மை ஆகுதியாக்கிய மாவீரச் செல்வங்களை நினைவு கூரும் நாட்களாகும். இந்நாட்கள் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து மறைக்கப்படமுடியாததும், திசைதிருப்பப்பட முடியாததுமாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்களாகும். இனவிடுதலை நோக்கிய, ஆயுதப் போராட்டம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டதன் பின்னணியையும், தமிழ் மக்கள் ஆயுதமேந்தியதன் நியாயத்தன்மைகளையும், அதிலிருந்த தியாகங்களையும், அடுத்த சந்ததியினரும் தேடிப்பார்க்கக் கூடியவாறு வரலாற்றுக் கடத்திகளாகவும் இருக்கக் கூடிய நாட்களாகும்.

இந்நாட்கள் இறந்தவர்களை நினைவுகூருகின்ற சாதாரண நாட்களுமல்ல. தமிழின விடுதலைக்காக வித்தாகிப்போன வீரமறவர்கள், தமிழர் தாயகக் கனவோடு துயில்கொள்வதாகக் கருதி, தமிழினத்தின் விடுதலை இலக்கு திசை மாறாமல் செல்ல, தமிழ்த் தேச மக்கள் சபதம் செய்யும், தமிழ்த் தேசியப் போராட்டத்தின் ஆணிவேரான நாட்களாகும்.

எனவே இறந்தவர்களை நினைவு கூருவது என்கின்ற சொல்லாடல் ஊடாகவும், வேறுநாட்களைக் குறிப்பிட்டும், சாதாரண மரணங்களோடு, தமிழின விடுதலைக்காக வித்தாகிப் போனவர்களின் தியாகங்களையும் இணைத்து, வட கிழக்கு கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் மதிப்பீடு செய்து பொதுமைப் படுத்துவதென்பது, மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், தமிழ்த் தேசிய தாகம் கொண்டவர்களிடத்தில் பாரிய அதிருப்தியை ஏற்படுத்திய செயற்பாடாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலுக்காக தம்மைத் தியாகம் செய்த ஆயர்கள், குருக்களை உருவாக்கித் தந்த கத்தோலிக்க திருச்சபை இறந்தவர்களை நினைவு கூரும் நாட்களாக நவம்பர் 20ம் திகதியை பொதுமைப்படுத்தும் வகையில் மேற்கொண்ட முடிவு ஆரோக்கியமானதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். கெடுபிடிகள் நிறைந்த சிறீலங்கா அரச இயந்திரத்தால், மாவீரர்களை நினைவுகூர்வதற்கு பல்வேறு வழிகளிலும் தடைகளை ஏற்படுத்த முற்படும் வேளையில், தமிழின தாயக விடுதலைக்காக வித்தாகிப்போன மாவீரர்களின் வாரத்தை, நவம்பர் 21-27 திகதிவரை நினைவிருத்தும்வகையிலும், வடக்குக் கிழக்குத் தழிழர் தாயகமெங்கும் நவம்பர் 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும் மணியொலி எழுப்பி வரலாற்றைக் கடத்துவதுமே வரவேற்கத்தக்க விடயமாக அமையும் என்பதையும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எனவே ஆயர்மன்றமானது தமது முடிவை பரிசீலனைசெய்து அறிவித்தலை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உரிமையுடனும் பணிவன்புடனும் கேட்டுக்கொள்கின்றோம்.




# வரதலெட்சுமி சண்முகநாதன் 87ஆம் வயதில் கனடாவில் முதமாணி பட்டம்

நவம்பர் 03, 2021

இலங்கையில் பிறந்த வரதலெட்சுமி தனது 87 வயதில் கனடாவில் முதுமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

வேலணையில் பிறந்தவர் வரதலெட்சுமி சண்முகநாதன். வரதா என்று அழைக்கப்படும் வரதலெட்சுமி சண்முகநாதன் பட்டம் பெற்ற 4,000க்கும் மேற்பட்ட மாணவர்களில் ஒருவராவார்.

4 கண்டங்களில் கற்பித்தவரான ஆசிரியை வரதலெட்சுமி தனது முதலாவது முதுமாணி பட்டத்தை லண்டனின் பிரிக்பேக் கல்லூரியில் பூர்த்தி செய்திருந்தார்.

தற்போது கனடிய பல்கலைக்கழகத்தில் தனது இரண்டாவது முதுமாணிப் பட்டம் பெற்ற மிக வயதான நபர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.



# சிங்கள அரசின் அடிவருடிகளாக நினைவெழுச்சி அகவம் மற்றும் NCCT & Ex-WTM? மாவீரர் நாள் பரப்புரை சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டுள்ளது














# தமிழக செய்திகள்



## “பள்ளி முதல்வரை கைது செய்யுங்கள்” கோவை மாணவியின் உடலை வாங்க மறுத்து போராட்டம்

நவம்பர் 13. 2021

கோவையில் ஆசிரியர் பாலியல் தொல்லை செய்ததாக தற்கொலை செய்து கொண்ட மாணவியின் உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கோவையில் தற்கொலை செய்து கொண்ட பள்ளி மாணவியின் உடலை வாங்க மறுத்து மாணவியின் வீட்டின் முன்பாக மாணவர்கள், பல்வேறு அமைப்புகள், சக மாணவர்களுடைய பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக போராட்டக்காரர்கள், “மாணவி புகார் கொடுத் தும் பாலியல் அத்துமீறலுக்கு எதிராக எந்தவொரு நடவடிக் கையும் எடுக்காமல், மாணவியை மிரட்டி அக்குரூரத்தை மூடிமறைப்பு செய்து மாணவி தற்கொலை செய்ய முக்கிய காரணமாக இருந்த பள்ளி முதல்வர் மீரா ஜாக்சன் கைது செய்யப்படும் வரை மாணவி உடலை பெற்றுக்கொள்ளாமல் போராட்டம் தொடர்ந்து நடத்தப் படும்” என்று தெரிவித்தனர். 12 மணி வரை கைது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் உக் கடம் சாலையில் மறியல் போராட்டத்தை தொடங்க இருப் பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.




## ஜனவரியில் நடைபெறும் உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் “தமிழ் காமன்வெல்த் உருவாக்கம்”

நவம்பர் 07. 2021



உலகத் தமிழ் வர்த்தக சங் கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இரண் டும் பல்வேறு துறை சார்ந்த வல் லுனர்களை உள்ளடக்கி துறை சார்ந்த தமிழ் அமைப் புகளை உருவாக்கி வரு கிறது. முக்கியமானவை கல் வி, கலை மற்றும் கலாச் சாரம், உணவு, உடை போன்றவைகளை அனைத் து நாடுகளிலும் நம் பாரம் பரியத்தை கட்டிக்காக்க விதமாக செயல்பாடுகள் அமைந் துள்ளது. மேலும் தமிழ் மெடிக்கல் அசோசியேஷன் என்ற அமைப்பை உருவாக்கி உலகெங்கும் உள்ள தமிழ் மருத்துவர்களை இணைந்து செயல்படவும், நம் தமிழ் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவத்தை அனைத்து நாடுகளிலும் பயன்படுத்த ஏதுவாக அரசாங்க அனுமதிகளை பெற்றுத்தர வழிவகை செய்து வருகிறது.

நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டு சட்டத்திற்கு உட் பட்டு வாழ்கின்ற போது, அந்த நாட்டு சலுகைகளை நாம் அடைய அரசியல் மற்றும் சமூக சிந்தனைகள் உள்ளவர் களை உள்ளடக்கி ஒரு நாட்டுக்கு நான்கு பேர் வீதம் 764 பேரும் முன்னாள் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாநில மத்திய அமைச்சர்கள், துணை முதல்வர் கள், முன்னாள் பிரதமர் மற்றும் துணை ஜனாதிபதி அவர்கள் 236 பேரும் மொத்தம் 1000 உறுப்பினர்களாக கொண்ட தமிழ் காமன்வெல்த் என்ற அமைப்பை உருவாக்க உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு முன்னெடுக்கவுள்ளது.

இதன் மூலம் ஆளப்போறான் தமிழன் என்ற கூற்றுக் கிணங்க அனைத்து நாடுகளிலும், அரசியலில் ஆளமை மிக்க தமிழர்கள் வரவேண்டும் என்பதே இதன் நோக்கம் என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் கூறினார். 12 நாடுகளில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி உலகத் தமிழ் பாராளுமன்றம் உறுப்பினர்களும் எட்டாவது உலகத் தமிழர் திருநாள் விழா மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தொழில்துறை அமைச்சகத் துடன் இணைந்து இவ்விழா நடைபெற உள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தொழிலதிபர்கள், தொழில்துறை சார்ந்த வல்லுநர்கள் மூலம் உலகெங்குமுள்ள அனைத்து தமிழர்களும் பயன்பெறும் வகையில் இந்நிகழ்வு நடைபெற உள்ளது.

### தமிழ் காமன்வெல்த் அமைப்பின் நோக்கங்கள்

உலகெங்குமுள்ள தமிழர்கள் தாய்த் தமிழ்நாட்டின் உற வோடு இருக்கவும், உலகெங்கும் உள்ள தமிழர்கள் இணைந்து செயலாற்றவும், தமிழ் காமன்வெல்த் பேருதவி யாக இருக்கும். இதன் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள முன்னணி தொழிலதிபர்களை தமிழ்நாட்டின் வர்த்தக தூது வராகவும், மருத்துவத்துறையில் செயலாற்றும் மருத்துவர் களை மெடிக்கல் டூரிசம் தூதுவர்களாகவும் வெல்னஸ் தூதுவர்களாகவும், ஆன்மீகம் மற்றும்

தொல்லியல் சார்ந்த தூதுவர்களாக ஆசிரியர்களை மொழி தூதுவர்களாக சட்டத்தரணிகளை சட்ட தூதுவர்கள், தினந் தோறும் ஊடகம் மூலம் தமிழை வளர்த்துக் கொண்டுள்ள ஊடகவியலாளர்களை ஊடக தூதுவர்கள் போன்ற அனைத்து துறை சார்ந்த வல்லுனர்களை ஒன்றிணைத்து தமிழகத்தில் தொழில் துறைகளை பெருக்கவும், தமிழக அரசுடன் இணைந்து நம் தமிழர்களுக்கு பல்வேறு நாடுகளில் உள்ள அனைவருக்கும் உதவிகள் சலுகைகள், முன்னேற்றத் துக்கான வழிமுறைகள் போன்றவைகளை உள்ளடக்கி தமிழ் காமன்வெல்த் உருவாக்க பட உள்ளது. இதன் மூலம் எந்த நாட்டில் தமிழருக்கு எந்த ஒரு உதவி என்றாலும் இவ்வமைப்பு செயல்படும் வகையில் உருவாக்கப்படுகிறது.

உலகத் தமிழர் திருநாள் விழா உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு உலக தமிழ் பாராளுமன்ற கூட்டம் போன்றவைகள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தொழில் துறையுடன் இணைந்து இவ் நிகழ்வு நடைபெற உள்ளது என உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்

நவம்பர் 11, 2021

**பாகிஸ்தான் கடற்படையினரால் கொல்லப்பட்ட மராத்திய மீன வரது மரணத்திற்கு அளிக்கப் படும் முக்கியத்துவம் சிங்களக் கடற்படையி னரால் கொல்லப்படுகிற தமிழக மீனவர்களுக்கு அளிக்கப்படாததேன்? தமிழர்கள் இந்நாட்டின் குடிமக்கள் இல் லையா?** – சீமான் காட்டம்

குஜராத் அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த மராட்டியம், டையூ பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீது பாகிஸ்தான் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மராட்டிய மீனவர் உயிரிழந்ததற்கு இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசு உடனடியாக ஆற்றிய எதிர்வினை வியப்பளிக்கிறது. மராட்டிய மீனவரது படு கொலைக்கு விரைந்து நடவடிக்கைகளை எடுக்கத் துணிகிற பாஜக அரசு, தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்படும் போதும், படுகொலை செய்யப்படும்போதும் எவ்வித வினையு மாற்றாது வாய்மூடிக்கிடப்பது கடும் கண்டனத்திற்குரியது. மராட்டிய மீனவரது படுகொலைக்காக பாகிஸ்தான் நாட்டுத் தூதரை நேரில் அழைத்துக் கண்டனம் தெரிவிக்கும் பாஜக அரசு, தமிழக மீனவரது படுகொலைக்குச் சிறுகண்டனமோ, வருத்தமோ, பாதிக் கப்பட்ட மீனவரது குடும்பத்தினருக்கு ஆறுதலோ தெரிவிக் காதிருப்பது தமிழர்கள் மீதான மாற் றாந்தாய் மனப்பான்மை யையே காட்டுகிறது.

இந்தியாவைத் தங்களது சொந்த நாடென்று கருதி, வரிசெலுத் தி, வாக்குச்செலுத்தி வாழ்ந்து வரும் தமிழர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கைக்கடற்படையினரால் தாக்கி அழிக்கப் படுகையில், இந்நாடு அதனைக் கண்டும் காணாதது போலக் கடந்துசெல்வது ஒட்டுமொத்த தமிழர்களையும் அவமதிக்கும் கொடுஞ்செயலாகும். இதுவரை 850 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் நடுக்கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கொலைசெய்யப்பட்டுள்ளனர். எத்தனை முறை இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது? எத்தனை முறை இலங்கை நாட்டுத்தூதரை அழைத்து இந்திய அரசு கண்டித் துள்ளது?

எத்தனை முறை தாக்க வரும் கடற்படையைத் தடுத்து தமிழக மீனவர்களை இந்தியக்கடற்படை காப்பாற் றியுள்ளது? மராட்டிய மீனவர் உயிர் மீது காட்டும் அக்கறை யில் நூற்றில் ஒருபங்கு தமிழ்நாட்டு மீனவர் உயிர்மீது காட்டியிருந்தால்கூட இத்தனை மீனவர்கள் கொலை செய்யப் பட்டிருக்க மாட்டார்களே! பாகிஸ்தானென்றவுடன் உடனடியா கப் பாய்ந்து அந்நாடு மீது நடவடிக்கை எடுக்க முனையும் ஒன்றிய அரசு, தமிழர்களை இனவெறிகொண்டு படுகொலை செய்யும் இலங்கை மீது அணுவளவும் கடுமையைக் காட் டாதது ஏன்? 130 கோடி மக்கள் வாழும் இந்நாட்டில் இமயம் முதல் குமரி வரை ஒவ்வொரு மனித உயிரும் சரிசமமாகக் கருதப்பட வேண்டாமா? இந்திய அரசியலமைப்புச்சட்டம் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமமானதில்லையா? மராத்திய மீனவர்கள் மட்டும்தான் மனிதர்களா? தமிழக மீனவர்கள் உயிரற்ற வெறும் பொம்மைகளா? தமிழ்நாடு



இந்தியாவின் ஒரு மாநிலம் இல்லையா? தமிழர்கள் இந்நாட் டின் குடிமக்கள் இல்லையா? எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறினால், அந்நாட்டுடன் மட்டைப்பந்து விளையாட்டைக்கூட விளையாட மறுக்கும் இந்திய நாடு, இரண்டு இலட்சம் தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களை அழைத்து வந்து விருந்து வைப்பது நியாயம்தானா? இலங்கையின் மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் இலங்கை ஆட்சி யாளர்கள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டு மெனக்கோரி, தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றியிருக்கும் நிலையில், அதனைத் துளியும் மதியாது இலங்கையோடு கொஞ்சிக்குலவுவது தமிழர்களைச் சீண்டிப் பார்க்கும் ஆரியத்திமிர் இல்லையா? பத்துகோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டைவிட இரண்டுகோடி சிங்களர்கள் வாழும் இலங்கையின் நட்புறவுதான் இந்தியாவிற்கு முதன் மையானதென்றால், அது ஒவ்வொரு தமிழரின் உள்ளத் திலும் இந்நாட்டின் மீதும், அதன் ஆட்சியாளர்கள் மீதும் வெறுப்பையும், வன்மத்தையும் ஏற்படுத்தாதா? இதன் மூலம், வருங்காலத் தமிழ்த்தலைமுறையினருக்கு ‘இந்தி யக்குடிமகன்’ எனும் உணர்வே (11ஆம பக்கம் பார்க்கவும்)

# உலக செய்திகள்

## காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தை இளைஞர்கள் சீற்றத்துடன் தொடர்வது அவசியம் – மு. அ. ஜ. பராக் ஒபாமா



நவம்பர் 08, 2021

காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்கள் சீற்றத்துடன் காணப்படவேண்டும் என அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாற்றங்களை உருவாக்குவதற்காக இளைஞர்கள் அரசியல் அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பராக் ஒபாமா அதேவேளை இந்த பயணத்தின் போது இளைஞர்கள் விட்டுக்கொடுப்புகளை செய்வதற்கு தயாராக யிருக்கவேண்டும் என அவர் தெரிவித் துள்ளார். எதிர்கால பேரழிவை தடுப்பதற்காக உலகம் நாம் இருக்க வேண்டிய இடத்திற்கு அருகில் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலநிலை விஞ்ஞானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்காக முன்னாள் ஜனா திபதி டொனால்ட் டிரம்பை கடுமையாக சாடியுள்ள பராக் ஒபாமா ஆனால் அமெ ரிக்கா மீண்டும் தலைமை வகிப்பதற்கு தயார் என குறிப்பிட்டுள்ளார்.

கொப்26 உச்சிமாநாட்டில் கலந்துகொள் ளாதமைக்காக சீன ரஸ்ய தலைவர்களை அவர் கடுமையாக சாடியுள்ளார். தனது உரையில் ஒபாமா இளம் செயற்பாட்டாளர்கள் குறித்து அதிகம் கவனம் செலுத்தியுள்ளதுடன் அவர்கள் விரக்தியடைவதற்கான காரணங்கள் உள்ளன என தெரிவித்துள்ளார்.

இளைஞர்களை நோக்கி உரையாற்றிய அவர் இளைஞர்கள் அரசியலை புறக்கணிக்க முடியாது அவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் அதேவேளை ஹாஸ்டாக் செயற்பாடுகளில் ஈடுபடும் அதேவேளை அரசியலிலும் ஈடுபடவேண்டும் என தெரிவித்துள்ளார். நீங்கள் அரசியல் குறித்து மகிழ்ச்சியடைவேண்டியதில்லை ஆனால் நீங்கள்அதனை புறக்கணிக்க முடியாது நீங்கள் அரசியலிற்காக மிகவும் நேர்மையானவராகயிருக்கவும் முடியாது என பராக் ஒபாமா தெரிவித் துள்ளார்.

அனைத்து இளைஞர்களும் சீற்றத்துடன் விளங்கவேண்டும் - விரக்தியுடன் காணப்படவேண்டும் என நான் தெரிவிக்க விரும்புகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அந்த சீற்றத்தை விரக்தியை சரியான பாதையில் திருப்பிவிடுங்கள் இன்னும் இன்னும் கடுமையாக முயற்சி செய்யுங்கள் இந்த சவாலை எதிர்கொள்வதற்கு அதுவே அவசியம் நீங்கள் மரத்தன் ஒன்றிற்கு தயாராகுங்கள் என பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

கிரெட்டான தன்பேர்க் போன்றவர்களின் அர்ப்பணிப்பை பாராட்டியுள்ள பராக் ஒபாமா காலநிலை மாற்றத்திற்கு எதிராக செயற்படும்

## சித்திரவதைகளில் ஈடுபடும் சிறீலங்கா பொலிசாருக்கு ஸ்கொட்லாந்து பயிற்சி வழங்குவதற்கு எதிராக - நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள போர்க்கொடி

நவம்பர் 07, 2021

ஸ்கொட்லாந்து நாடாளுமன்றம் விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா.வின் முன்னாள் அதிகாரி வேண்டுகோள்

சிறீலங்காவில் அரசாங்கத்தின் ஆதரவுடன் சித்திரவதைகள் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கை அதிகாரிகளிற்கு பயிற்சி வழங்குவதை ஸ்கொட்லாந்து நிறுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகளின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பேராசிரியர் மன்பிரெட் நொவாக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையிலிருந்து ஸ்கொட்லாந்திற்கு தப்பிவந்த அகதிகள் சிறீலங்கா பொலிஸாரின் ஈவிரக்கமற்ற தன்மை குறித்து தெரிவித்துள்ள விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகதிகள் தெரிவித்தது உண்மை என்பது உறுதியானால் சிறீலங்கா பொலிஸாரிற்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் வழங்கும் பயிற்சியை ஸ்கொட்லாந்து நிறுத்த வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்கொட்லாந்து பொலிஸார் தங்களது பயிற்சிகள் சர்வதேச மனித உரிமை தராதரத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துகின்றது என தெரிவித்துள்ளனர். எனினும் ஸ்கொட்லாந்து பொலிஸார் சிறீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் விவேகத்துடன் செயற்படவில்லை என விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் உட்பட பலர் ஸ்கொட்லாந்தின் டுலியாலன் தலைமையகத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

ஸ்கொட்லாந்தின் தொழில் கட்சி அரசியல்வாதி மேர்செடெஸ் விலால்பா இது குறித்து கரிசனை வெளியிடும் கடிதமொன்றை இலங்கைக்கான பிரிட்டிஸ் தூதரகத்திற்கு எழுதியுள்ளார்.

சிறீலங்கா பொலிஸாரிற்கான ஸ்கொட்லாந்து பொலிஸாரின் பயிற்சி தேவையற்ற பாரம்பரியம் ஒன்றை சிறீலங்கா அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது அது மனித உரிமை மீறல்களை மறைக்க உதவுகின்றது என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2007 இல் தான் ஐ.நா.விற்கு அம்பலப்படுத்திய சித்திரவதை முறைகள் தொடர்ந்தும் பயன்படுத்தப் படுவது அச்சத்தை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவித்துள்ள மனித உரிமை சட்டத்தரணியும் மனித உரிமைகளிற்கான சர்வதேச கம்பஸ் அமைப்பின் செயலாளர் நாயகமுமான நொவாக் இலங்கை அகதிகளின் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகளை ஸ்கொட்லாந்து பொலிஸார் ஆரம்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்கொட்லாந்து நாடாளுமன்றம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், ஸ்கொட்லாந்து பொலிஸாரும் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை தண்டிப்பதில் சிறீலங்கா பொலிஸாருடன் இணைந்து செயற்படவேண்டும் என அவர் சண்டே போஸ்டிற்கு தெரிவித்தார்.



நபர்களை தலைகீழாக கட்டித் தொங்க விடுவது போன்றவை 14 வருடங்களிற்கு முன்னர் நான் எதிர்கொண்ட விடயங்கள் எனக் குறிப்பிட்டுள்ள அவர் பெட்ரோல் நிரம்பிய பிளாஸ்டிக் பைகள் குறித்தும் நான் கேள்விப்பட்டேன் என தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் பொலிஸார் இவ்வாறான சித்திரவதைகளை பயன்படுத்துகின்றார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளது என்றால் ஸ்கொட்லாந்து பொலிஸார் சிறீலங்கா பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்குவதை கைவிடவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நொவாக் விடுத்துள்ள வேண்டுகோள்களிற்கு ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

ஸ்கொட்லாந்து பொலிஸாருக்கும் சிறீலங்கா பொலிஸாருக்கும் இடையிலான பயிற்சி ஏற்பாடுகள் தொடர்வது, பாரிய அளவில் பாலியல் வன்முறை சித்திரவதைகளில் ஈடுபடுகின்றனர் என நாங்கள் அறிந்துகொள்பவர்களிற்கும் ஸ்கொட்லாந்து பொலிஸாருக்கும் இடையிலான குழப்பமான கவலைதரும் உறவுகளை வெளிப்படுத்துகின்றன என ஸ்கொட்லாந்தின் லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவர் அலெக்ஸ் கோல் ஹமில்டன் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைக்கு உள்ளானவர்களிடமிருந்து மேலும் தகவல்களை பெற விரும்புகின்றேன் விசாரணைகள்







ஸ்கொட்லாந்தின் மௌனம் இலங்கையின் சிறுபான்மை தமிழர்கள் சித்திரவதைகளிற்கும் கடத்தலிற்கும் படுகொலைகளைகளிற்கும் உள்ளாவதை மூடிமறைப்பதற்கு உதவுகின்றன என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன.

சிறீலங்கா பொலிஸார் படைப்பிரிவினரிற்கான நீண்ட கால பயிற்சி திட்டம் தற்போது முட்டுக்கட்டை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இது குறித்து வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்துவருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் திட்டமிட்டு சித்திரவதைகளில்

சிறீலங்கா அரசாங்கம் ஒத்துழைக்காவிட்டால் அல்லது விசாரணைகளை முன்னெடுக்காவிட்டால் கடந்த காலங் களை போல இதனையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தங்களின் உயிருக்கு பயந்து ஸ்கொட்லாந்திற்கு தப்பிவந்துள்ள அகதிகளின் வாக்குமூலங்கள் 14 வருடங்களிற்கு முன்னர் இலங்கையில் தான் கண்டுபிடித்த விடயங்களை போல உள்ளன என நொவாக் தெரிவித்துள்ளார்.

# சித்திரவதைகளில் ஈடுபடும் சிறீலங்கா பொலிசாருக்கு ஸ்கொட்லாந்து பயிற்சி வழங்குவதற்கு எதிராக - நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை ஆர்வலர்கள போர்க்கொடி

இடம்பெறவேண்டும் என விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களை ஆதரிக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகள் மனித உரிமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் செவிமடுக்கின்றோம் என்பதை அறிவது முக்கியமானது எனத் தெரிவித்துள்ள தொழில் கட்சியின் போலின் மக்நெய்ல் ஸ்கொட்லாந்துமனித உரிமைகள் தொடர்பில் நிலைப்பாட்டை எடுப்பதற்கு உறுதியான ஆதரவு அனைத்து கட்சிகள் மத்தியிலும் காணப்படும் என கருதுகின்றேன எனத் தெரிவித்துள்ளார்.

நொவாக்கின் கருத்தினை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வரவேற்றுள்ளனர்.

பக்ஸ் கிறிஸ்டி ஸ்கொட்லாந்து என்ற சமாதான அமைப்பின் தலைவர் மரியன் பலிஸ்டெர் இலங்கையில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியை பெற்றுத் தருவதை நோக்கிய முதல் நடவடிக்கையாக இது காணப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டத்தின் பிரான்சிஸ் ஹரிசன் ஸ்கொட்லாந்து முன்னொருபோதும் எடுக்கப்படாத இந்த நடவடிக்கையை ஸ்கொட்லாந்து முன்னெடுத்தால் அது சித்திரவதையில் ஈடுபட்டவர்கள் தப்பமுடியாது என்ற செய்தியை உலகிற்கு தெரிவிப்பதாக அமையும் என குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற விசாரணை என்பது உலகின் பல பகுதிகளில் மௌனமாகவும் அச்சத்துடனும் வாழும் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக் கானவர்களிற்கு கலங்கரை விளக்காக அமையும் - இலங்கை அவர்களின் நடவடிக்கைகளை இனிமேலும் சகித்துக்கொள்ளப்போவதில்லை என்ற செய்தியை தெரிவிப்பதாக அமையும் என தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிற்கு பயிற்சி வழங்குவதற்கு முன்னர் மனித உரிமைகளை ஸ்கொட்லாந்து பொலிஸார் கருத்தில் எடுத்தனர் என்பதற்கான ஆதாரங்களை நாங்கள் கோரியுள்ளோம்.

ஆனால் இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை என சர்வதேச மன்னிப்புச்சபையின் யுகே ஸ்கொட்லாந்திற்கான இயக்குநர் நயோமி மக்காலிவ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பொலிஸார் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்களா என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். அதேவேளை ஸ்கொட்லாந்து பொலிஸாரின் பங்களிப்பு ஏனைய தரப்பினர் தங்கள மனித உரிமை மீறல்களை மறைப்பதற்கு உதவலாம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் வாகனம் வெடித்துசிதறியதில் சியராலியோனில் 90க்கும் அதிகமானவர்கள் பலி

நவம்பர் 06, 2021

சியராலியோனில் எரிபொருள் வாகனமொன்று வெடித்துச் சிதறியதில் 90க்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

விபத்தொன்றின் பின்னர் வாகனத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த எரிபொருளை பிடிப்பதற்காக பெருமளவு மக்கள் திரண்டிருந்தவேளை வாகனம் வெடித்துச் சிதறியதில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பெருமளவு உயிரிழப்பு நிகழ்ந்துள்ளது எரிகாயங்களுடன் பல பிரேதங்கள் காணப்படுகின்றன என தேசிய பேரிடர் முகாமைத்துவ பிரிவின் அதிகாரி தெரிவித்துள்ளார்.





# தமிழினப் படுகொலையாளி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஸ்கொட்லாந்தில் அணிதிரண்டனர் தமிழ் மக்கள்

நவம்பர், 01 2021








# நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்

(09ஆம் பக்கத் தொடர்ச்சி) பட்டுப்போய்விடாதா என்று அடுக்கடுக்காக எழும் கேள்விகளுக்கு விடையளிப்பார்களா இந்த நாட்டின் ஆட்சியாளர்கள்?



இதனையெல்லாம் சுட்டிக்காட்டி, இந்திய ஒன்றிய அரசைக் கண்டித்திருக்க வேண்டிய திமுக அரசு, வழக்கம் போல அமைதி யையே நிலைப் பாடாக எடுத்து பாஜக வோடு இணங்கிப் போனது வெட்கக் கேடானது. குஜராத் மாநில அரசின் காவல்துறை பாகிஸ்தான் கடற்படையினர் மீது வழக்குத் தொடுக்கிறபோது அதே மாநில அதிகாரத்தைப் பயன்படுத்தி, இலங்கை கடற்படையினர் மீது தமிழக அரசு வழக்குத் தொடுக்க முடியாதா? ஏன் அதனைச் செய்ய வில்லை? கேரளாவில் இரு மீனவர்கள் இத்தாலிக்கடற்படை யினரால் கொல்லப்பட்டபோது அம்மாநில அரசு இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அப்படுகொலை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றம்வரை கொண்டு சென்றது. இங்குக் கோட்டைப்பட்டினம் மீனவர் ராஜ்கிரணின் உடலை மறு உடற்கூராய்வு செய்யகூட மாநில அரசு மறுத்ததோடு, அவரது உடலை உறவினர்களுக்குக் காட்ட மறுத்து பெருங்கொடுமையை அரங்கேற்றியது. தமிழக மீனவர்களைப் படுகொலை செய்யும் சிங்கள அரசோடு உறவுகொண்டாடும் பாஜக அரசையும், அதனைக் கண்டிக்காது, அநீதிக்குத் துணைபோகும் திமுக அரசையும் வரலாறு ஒருபோதும் மன்னிக்காது. மீண்டும் மீண்டும் இந்நிலையே தொடருமானால், 'தமிழ்நாடு எங்கள் தாய்நாடு இந்தியா எங்கள் அண்டை நாடு' எனக்கருதுகிற மனநிலைக்கு அது தமிழர்களைத் தள்ளிவிடும் என எச்சரிக்கிறேன்.

ஆகவே, தமிழக மீனவர் ராஜ்கிரண் படுகொலைக்கு உரிய நீதியைப் பெற்றுத்தர இந்திய ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும், மீனவர் ராஜ்கிரண் உடலைத் தோண்டியெடுத்து மறு உடல்கூராய்வு செய்ய வேண்டுமெனவும் தமிழக அரசை நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
⇒ ரீபைனான்ஸ், Title Transfer, ரினிவல்
⇒ Private 1st Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4


# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி** (TP)
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**முகநூல்** (Facebook)
Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழுங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.






Alan Maniam
Director
647 299 2450
235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3
boroscanadianpaper@gmail.com

"உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன."
- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -



# மாவீரர் விதைப்பும் இறுதிச் சடங்கும்

நீத்தாரைச் சிறப்பிக்கும் இயல்பு மனித இனத்தின் பொதுப்பண்பு. மனிதகுலம் தோன்றிய காலத்திலேயே இறுதிச் சடங்குகளும். கிரியைகளும் ஓரளவு தொடங்கிவிட்டன. காலப் போக்கில் அவை விரிவடைந்து மனித நாகரிகத்தின் முக்கிய பகுதியாக இன்று இடம் பெறுகின்றன. நீத்தாரின் உற்றார், உறவுகள் நிறைவேற்றும் கட்டாயச் செய்கடனாகவும் சரம கிரியைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. வாழ்விடம், மதநம்பிக்கை, இனப் பாரம்பரியம், வாழ்க்கை நிலை போன்றவை இவ்விதிமுறைகளின் அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. அவற்றில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் உயிர்பிரிந்த மனித உடலுக்கு காட்டப்படும் அஞ்சலி வணக்கத்தில் மாத்திரம் மாற்றம் ஏற்படவில்லை.

நீத்தார் உடலுக்கு மனிதன் காட்டும் உளமார்ந்த மரியாதையும் சாவிற்குப்பின் மறுவாழ்வும் தொடர்ச்சியான பிறப்பும் இறப்பும் உண்டு என்ற தளராத நம்பிக்கையும் இறுதிச் சடங்குகளும் சரம கிரியைகளுக்கும் மூல காரணமாக அமைகின்றன. புதைத்தல், எரித்தல் என்ற இருவிதமாக மனித உடல் சிறப்பிக்கப்படுகின்றது. எது முதற் தொடங்கியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. புதைத்தல் முறைதான் மிகக்கூடுதலாக உலக மக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. புதைத்தல், எரித்தலைவிட வேறுமுறைகளும் கைக் கொள்ளப்பட்டாலும் அவை விதிவிலக்காகவே உள்ளன.

உலகின் முக்கிய மதங்களில் சாவீட்டிலும் அடக்கம் செய்யும் இடத்திலும் இறந்தவரின் ஆன்ம ஈடேற்றத்திற்கான விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடத்தப்படுகின்றன. இவை மனிதர்களுக்கு ஆன்மா உண்டு என்ற அடிப்படையில் செய்யப்படுகின்றன. மனிதன் புதைக்கப்படுவதற்கும் இக்கோட்பாடு காரணமாக அமைகின்றது. உலகின் மிகப் பழைமை வாய்ந்த நாகரிகத்தைக் கொண்டிருக்கும் சீனர்கள் புதைக்கப்பட்ட உடலுக்குமேல் எழுப்பப்படிருக்கும் கட்டிடத்திற்கும் அதன் ஆன்மாவுக்கும் இடையில் நேரடித்தொடர்பு இருப்பதாக நம்புகின்றனர். இக்கட்டிடத்திற்குச் சேதம் ஏற்பட்டால் அந்த ஆன்மாவுக்குச் சஞ்சலம் ஏற்படும் என்று அவர்கள் நம்புகின்றனர். சீனர்கள் மண்ணில் தமது சடலங்களைப் புதைத்து அதன்மேல் மிகவும் ஆடம்பரமான நினைவுக் கட்டிடங்களை எழுப்புகின்றார்கள். செஞ்சீனாவின் தோற்றத்தின்பின் ஆடம்பரத்தைக் குறைக்கும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று எரிப்பதற்கும் புதைப்பதற்கும் பிரத்தியேகமான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவர்கள் தமது புதைநிலங்களை தேவாலயங்களுக்கு அருகாமையில் வைத்திருக்கின்றனர். இட நெருக்கடி காரணமாக தூர இடங்களிலும் புதைக்கின்றனர். யூதர்களும், இஸ்லாமியர்களும் புதைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இறந்த அதேநாளில் அல்லது இயன்றளவு வேகமாக முஸ்லிம்கள் தமது சடலங்களை அடக்கம் செய்கின்றனர். முஸ்லீம்களனி சடலங்கள் வலதுபக்க உடல் சரித்துக் கீழ்ப் புறமாகவும் முகம் மெக்காவை நொக்கிய திசையிலும் சரித்துக் கிடத்தி அடக்கம் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் முதுகுப்புறம் நிலத்தில் படும்படி அடக்கம் செய்கிறார்கள். கிறிஸ்தவமதம் ஆரம்பித்த காலத்தில் சடலத்தின் கால்கள் கீழ்த்திசையைப் பார்த்தபடி இருக்கும் நிலையில் புதைத்தனர். சூரியோதயத்தோடு மீள்பிறப்பு ஆரம்பிக்கும் என்ற அர்த்தத்தில் இவ்வாறு செய்யப்பட்டது.

புத்த மதத்தினர் தமது சடலங்களை ஒரு காலத்தில் புதைத்திருக்கிறார்கள். அப்போது தலையை புத்தர் பிறந்த வடக்குப் பக்கமாக வைத்துப் புதைத்தார்கள். ஆபிரிக்கவாழ் பழங்குடி மக்கள் பலர் இறந்த உடலை கருப்பையில் கிடக்கும் சிசுவைப்போல் முழந்தாளை மார்பு வரை இழுத்து மடக்கிய பின் புதைக்கின்றனர். பிறப்பும் இறப்பும் தொடர் நிகழ்ச்சிகள் என்ற அரிய தத்துவம் இதனால் உணர்த்தப்படுகின்றது. இன்னும் சில பழங்குடி மக்கள் உடல்களை பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணவாக்கும் நோக்கில் வெளியில் போட்டு வைக்கின்றனர். தீயை வணங்கும் பார்சி மதத்தினர் அமைதிக்கோபுரம் என்று (TOWER OF SILENCE) அவர்கள் அழைக்கும் உயரமாக கட்டிடத்தில் அதேநோக்கி தமது சடலங்களைவிட்டுச் செல்கின்றனர்.

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ்மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர், உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றெண்ணி
உம்வாசலில் வந்துமே வணங்குகின்றோம்.
உங்கள் கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்.
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும்வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரைநிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்.
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிர்வோம், உங்கள்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

மனிதவாழ்வு நிலையானதல்ல. ஆனால் மனித உடல்மீது எழுப்பப்படும் நினைவுக் கட்டிடங்களும், உடலை அடக்குவதற்காக ஒதுக்கப்பட்ட புனித நிலங்களும். இவைபற்றி எழுந்த பன்மொழி இலக்கியங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. புராதனகால ஏழு அதிசயங்களில் ஆறு அழிந்து விட்டன. எஞ்சியது எகிப்தின் கூபூ (KHUFU) மன்னனின் கீசா (GIZA) பிரமிட் கல்லறை மாத்திரமே. பதின்மூன்று ஏக்கர் அடிப்பாகத்தைக் கொண்ட எகிப்தின் கீசா பிரமிட் உலகின் மிகப்பெரிய கற்கட்டிடமாகக் கணிப்பிடப்படுகிறது. இதன் காலம் 5,000 வருடத்திற்கு முந்தியது. எகிப்திற்குப் புகழ் சேர்க்கும் பிரமிட்டுக்கள் யாவும் கல்லறைகளே.

ஜோர்தான் நாட்டின் பெற்றா (PETRA) நகர்ப்புறத்திலுள்ள பாறை மலை உச்சியில் குடையப்பட்ட கற்குழிகளில் புராதன கால உடல்கள் அடைக்கம் செய்யப்பட்டுள்ளதை 1812 இல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கிறிஸ்தவமதம் தொடங்கிய காலத்தில் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்காத காரணத்தால் மிகவும் மறைவாக கிறிஸ்தவர்கள் தமது சடலங்களைப் புதைத்தனர். நிலத்தின் கீழ் மூன்றடி அகலமான சுரங்கப் பாதைகளை வெட்டி, பாதைச் சுவர்களில் குடைந்த பகுதிகளில்



அவர்கள் சவப்பெட்டிகளை மறைத்துவைத்தனர். சுரங்கப் பாதைகள் கிளைவிட்டு நெடுந்தூரம் சென்றன. படிக்கட்டுக்களை அமைத்தவாறு மென்மேலும் ஆழமான சுரங்கப் பாதைகளை அவர்கள் வெட்டினார்கள். இந்த அதிசய புதைப்புச் சுரங்கங்கள் "கற்றகோம்ஸ்" (CATACOMBS) என்று அழைக்கப்படுகின்றன. கி.பி. 313 இல் கிறிஸ்தவத்திற்கு அரசு அங்கீகாரம் கிடைத்தாலும் கி.பி. 410 வரை சுரங்கப் புதைப்புக்கள் தொடர்ந்தன. 10ஆம் நூற்றாண்டில் அவற்றின் இருப்பை மக்கள் மறந்துவிட்டார்கள். 16ஆம் நூற்றாண்டில் அவை தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ரோமாபுரியிலும் பிற ஐரோப்பிய நகரங்களிலும் காணப்படும் கற்றகோம்ஸ் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கணிப்பிடப்படுகின்றன.

உலகம் பூராகவும் இடு நிலங்களும் சுடுகாடுகளும் தேசிய உடமையாகவும் வணக்கத்தலங்களாகவும் மதிப்பிடப்படுகின்றன. இறந்த உடல்களுக்குமேல் எழுப்பப்பட்ட கோயில்கள் இந்தியா, தமிழீழம் உட்பட உலகின் பல பாகங்களில் உள்ளன. மகாத்மா காந்தி எரிக்கப்பட்ட இடத்தில் வருடாவருடம் ஆராதனைகளை நடத்தப்படுகின்றன. பிறநாட்டு முக்கியஸ்தர்கள் அங்குசென்று வணக்கம் செய்வதை முக்கிய கடமையாகக் கொண்டள்ளனர்.

இங்கிலாந்தின் வெஸ்ற்மினிஸ்ரர் அபே (WEST-MINISTER ABBEY) என்ற பிரமாண்டமான கிறிஸ்தவ தேவாலயத்தின் உடற்புறத்தே 3000 வரையிலான கல்லறைகள் இடம்பெறுகின்றன. அரச பரம்பரையினரின் முடிசூட்டுவிழா தொடக்கம் நல்லடக்கம் வரை இத்தேவாலயத்தில் நடைபெறுகின்றன. இங்கிலாந்தின் புகழ்பெற்ற அரசினர், அரசுத் தலைவர்கள், விஞ்ஞானிகள், புலவர்கள், படைத்தலைவர்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

போர்வீரர்களுக்கென்று பிரத்தியேகமான இடு நிலங்களை ஒதுக்கி மிகவும் உன்னதமான நிலையில் பராமரிக்கும் வழமை 1880 இல் நடந்த உள்நாட்டுப் போரின்பின் அமெரிக்காவில் ஆரம்பமாகியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும் அமெரிக்கப் போர்வீரர்களின் இடுநிலங்கள் பராமரிப்பதற்குப் பொறுப்பாக ஒரு திணைக்களம் அமெரிக்காவில் இயங்குகிறது. அமெரிக்கப் போர் வீரர்களின் சடலங்கள் அடங்கிய பேழைக்கு செய்யும் மரியாதைகளும் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பேழையும் தேசியக்கொடியினால் போர்த்தப்பட்டு, பேழைக்கு நான்கு போர்வீரர்கள் என்ற விகிதத்தில் மரியாதைக் காவல் செய்யப்படுகின்றது. இடுகுழியில் இடமுன்பு மிகவும் உணர்வு பூர்வமாகத் தேசியக் கொடி அகற்றப்பட்ட இறந்தவரின் உரித்தாளருக்கு வழங்கப்படுகிறது.

உடலைத் தகனம் செய்யும் மின்சார அடுப்பு கண்டுபிடிக்கப்பட்டபின் புதைத்தல் பெருமளவில் குறைந்துள்ளது. உலகின் முதலாவது இந்த அடுப்பு அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் 1876 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சிறீலங்காத் தலைநகர் கொழும்பிலும் இந்த அடுப்பு இன்று இயங்குகின்றது. மேற்குநாடுகள் யாவற்றிலும் சிறெமெற்றோறியம் (CREMATORIUM) என்ற இந்தவசதி காணப்படுகின்றது. புதைப்பதைத் தேசியப் பாரம்பரியமாகக் கொண்ட சீனாவில் வசதி குறைந்த மக்கள் எரிக்கும் அடுப்புக்களைப் பயன் படுத்துகின்றனர். இந்த அடுப்புக்களில் 3000 பரன்கைற் பாகை வெப்பம் ஏற்றப்படுகிறது. ஒரு மணிநேரத்தில் பெட்டியும் உடலும் எரிந்து சாம்பலாகின்றன. மேற்குலகில் இந்தவகை எரிப்பு பொது வழமையாகிவிட்டாலும் கத்தோலிக்க மதபீடம் தனது மத்தினருக்கு இதற்கான அனுமதியை வழங்க மறுத்துள்ளது.

தமிழினத்தின் மூத்த குடிகள் இறந்தோரை ஈமத்தாழியில் இட்டுப் புதைத்தனர். ஈமத்தாழிகள் முதுமக்கட்டாழி என்றும் அழைக்கப்படுவதுண்டு. பெரும்பாலான ஈமத்தாழிகள் நெல் பயிரிடப்பட்ட நதியோரங்களில் வாழ்ந்த விவசாயச் சமூகத்தினரின் எச்சமாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் முடிவு. ஈமத்தாழி வசதி அற்றவர்கள் மண்ணில் புதைத்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. காவேரி, பொன்னையாறு, பாலாறு போன்ற நதியோரங்களில் பெருமளவு ஈமத்தாழிகள் கிடைத்துள்ளன. அடுத்ததாகத் தென் தமிழ்நாட்டின் தாமரபர்ணி, சித்தாறு, வைப்பாறு போன்றவை ஓரமாகவும் ஈமத்தாழிகள் மீட்கப்பட்டுள்ளன. வைப்பாறின் ஓரமாகவுள்ள சிவகிரி, பனையூர், வாசுதேவ நல்லூர் என்ற கிராமங்களிலும், சித்தாறின் அண்மையிலுள்ள இலஞ்சி, குற்றாலம் பகுதிகளிலும், தாமரபரணியின் சிவசைலம், அகஸ்தியமரை வெளிகளிலும். இதே நதி வந்துசேரும் பாம்பன் கரையோரத்திலும் ஈமத்தாழிகள் வெளி வந்துள்ளன. உலகப் பிரசித்திபெற்ற ஆதிச்ச நல்லூர் ஈமத்தாழிக் கிராமம் பாம்பன் கரையோரத்தில் காணப்படுகிறது.

பாம்பன் கரையோரத்திற்கு நேராக இருக்கும் இலங்கையின் புத்தளம் தொடங்கி மன்னார் வரையிலான வடமேற்கில் பெருமளவு ஈமத்தாழிகள் காணப்படுகின்றன. பாம்பனில் வாழ்ந்தோர் இங்கும் வாழ்ந்தார்கள் என்பதை இது காடடுகிறது. புத்தளத்தின் பொம்பரிப்பில் 8000 வரையிலான ஈமத்தாழிகள் இருப்ப

தாக மதிப்பிடப்படுகிறது. வடமராட்சி வல்லிபுரப் பகுதியிலும் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட தேக்கம், அளுத்பொம்பை, கரம்பன்குளம் பகுதியிலும் பெருமளவு ஈமத்தாழிகள் புதையுண்டு கிடக்கின்றன. ஆதிச்ச நல்லூருக்கும் பொம்பரிப்புக்கும் இடையில் மிகநெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு இருப்பதை ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.



யாழ்ப்பாணத்து ஆனைக்கோட்டையில் ஈமத்தாழிகளும் மண்ணில் புதைக்கப்பட்ட உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. வேலணை சாட்டியில் ஈமத்தாழிகள் எடுக்கப்பட்டுள்ளன. போராசிரியர் இரகுபதி குழுவினர் ஆனைக்கோட்டையில் செய்த ஆய்வின்போது 2500 வருட பழைமை வாய்ந்த இரு எலும்புக்கூடுகள் மத ஆசாரங்களுடன் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு எலும்புக்கூட்டின் கைவிரலொன்றில் பிரம்மி எழுத்தில் பொறிக்கப்பட்ட இலச்சினை மோதிரம் வெளிக்கொணரப்பட்டது. யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் பாதுகாப்பில் இருந்த இந்த மோதிரம் இப்போது காணாமற்போய்விட்டது. மோதிரத்திலுள்ள தமிழ் பிரம்பி எழுத்துக்கள் அதுவொரு அரசனுக்குரியது என்ற செய்தியைக் கூறுகின்றன. மோதிரத்தைப்போல் மேற்கூறிய எலும்புக்கூடுகளும் காணாமற்போய்விட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது மாவீரர்களின் வித்துடல்களைப் புதைப்பதற்கு எடுத்த தீர்மானம் எமதினத்தின் முதுபெரும் வரலாற்றை அடியொற்றியது. புதைத்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தாது “விதைத்தல்“ என்ற சொல்லையும் உடலுக்கு ‘வித்துடல்“ என்ற பதத்தையும் நாம் பயன்படுத்துகின்றோம். மாவீரர்கள் மீண்டும் எழுவார்கள் அவர்கள் சடப்பொருள் அல்லவென்ற அர்த்தத்தில் விதைத்தல். வித்துடல் என்பவை பயன்படுகின்றன. 11, 12 நூற்றாண்டுகளில் தோன்றிய தமிழ் வீரத்தையும் தேசியத்தையும் உணர்த்தும் பரணி நூல்களில் “களம்“ என்றநெற் களத்தையும் போர்க்களத்தையும் குறிக்கும் சொல் பயன்பாட்டில் உள்ளது. ஜெயங்கொண்டார் பயிர்த்தொழிலையும் போர்த்தொழிலையும் கலிங்கத்துப் பரணியில் இணைத்துப் பாடியுள்ளார்.

விடுதலைப்போரின் ஆரம்பகட்டத்தில் களப்பலியான புலிவீரர்களின் உடல்கள் புதைத்தல் எரித்தல் என்ற இரு வகையாகவும் சிறப்பிக்கப்பட்டன. பெற்றாரின் மதநம்பிக்கை மற்றும் தனி விருப்பத்திற்கு அமைவாகவும் போராளிகளின் வித்துடல்கள் எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் வந்தன. பொதுமயானங்களில் அப்போது போராளிகளின் வித்துடல்கள் தகனம் செய்யப்பட்டன. அல்லது நல்லடக்கம் செய்யப்பட்டன. போராட்டகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வித்துடல்களைப் புதைக்கவேண்டிய கட்டாயதேவை ஏற்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் போரிட்ட காலத்தில் தேசியத் தலைவரும் அவருடைய புலிப்படையினரும் மணலாறுக் காடுகளில் நிலையெடுத்திருந்தனர். களப்பலியான வீரர்களைத் தகனம் செய்தால் இந்திய இராணுவத்தினர் புகை எழும் திசையையும் புலிகளின் மறைவிடங்களையும் கண்டறிந்து விடுவார்கள் என்ற காரணத்திற்காக ஆங்காங்கே காடுகள் தோறும் வித்துடல்கள் புதைக்கப்பட்டன. இப்போது மணலாற்றில் புதைக்கப்பட்ட புலிவீரர்களின் புனித எச்சங்கள் ஒரே இடத்தில், அதாவது மணலாறு துயிலும் இல்லத்தில் உணர்வு பூர்வமாக மீண்டும் விதைக்கப்பட்டுள்ளன. இத் துயிலும் இல்லத்திற்கு ஒரு தனிப்பட்ட வீரவரலாறு உண்டு என்பது வெளிப்படை.

போர் நடந்த இடங்களில் கைவிடப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட வீரர்களின் எச்சங்களை சாதகமான நிலை தோன்றிய பின்பு மீட்டெடுத்துத் தாயகம் எடுத்துச்செல்லும் இராணுவப் பாரம்பரியம் உலகில் உண்டு. சென்றகொலானா தீவில் இறந்த (1821) நெப்போலியனின் உடல் பலகாலத்தின் பின் பிரான்சு நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. அவருடைய எச்சங்கள் இன்வலிடே கட்டிடத்திலுள்ள தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. வலுவிழந்த போர்வீரர்களின் தங்குமிடமாக 1870 இல் பதினான்காம் லூயி மன்னன் இன்வலிடே (INVALIDES) கட்டிடத்தை எழுப்பினான். 1950 இல் நடந்த கொரிய தீபகற்பப் போரில் வடகொரியாவினால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க இராணுவத்தினரின் சில உடல்கள் மிக அண்மையில் அமெரிக்க இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. 1975 ஆம் ஆண்டு முடிவுற்ற வியற்நாம் போரில் மடிந்த அமெரிக்க வீரர்களின் எச்சங்கள் கடந்த சில வருடங்களாக அமெரிக்காவுக்கு அதியுயர் இராணுவ மரியாதையுடன் அனுப்பப்பட்டன.



“துயிலும் இல்லம்“ என்ற சொற்றொடரை தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாக்கியுள்ளனர். புலிவீரர்களின் வித்துடல்கள் ஆண், பெண் வித்தியாசமின்றி இங்க விதைக்கப்படுகின்றன. மாவீரர் பற்றிய புலிகளின் எண்ணக்கருவை இச்சொற்றொடர் உணர்த்துகிறது. முதலாவது துயிலும் இல்லம் கோப்பாயில் துயிலுமில்ல மண்ணில் போராளிகளின் வித்துடல்கள் புதைக்கப்பட்டதோடு எரிக்கப்பட்டும் வந்தன. 1991இல் வித்துடல்கள் எரிக்கப்படமாட்டாது. புதைக்கப்படும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இதுபற்றி 1991 அம் ஆண்டின் ஐப்பசி – கார்த்திகை விடுதலைப் புலிகள் ஏடு “மாவீரர்களைத் தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்போது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக்கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்” என்று கூறுகிறது. “அம்முடி வானது போராளிகளுள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது” என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

வித்துடல்கள் புதைக்கப்படும் என்ற முடிவு எடுக்கப்பட்டபின் முதன் முதலாகக் கப்டன் சோலையின் வித்துடல் கோப்பாய் துயிலும் இல்லத்தில் 14 ஜுலை 1991 ஆம் நாள் விதைக்கப்பட்டுள்ளது. வித்துடல் கிடைக்காது போனால் நினைவுக் கற்கள் நாட்டும் வழமை புலிகளாகிய எம்மிடம் உண்டு. அதே சமயத்தில் வித்துடல் ஒரு துயிலும் இல்லத்திலும் அவருக்கான நினைவுக்கல் இன்னுமோர் துயிலும் இல்லத்திலும் வைப்பது எமது இன்னுமொரு வழமையாகும். தென்தமிழீழ மாவீரர் பலரின் வித்துடல்கள் விஸ்வமடு மாவீரர் துயிலும் இல்லத்திலும் முள்ளியவளை துயிலும் இல்லத்திலும் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய நினைவுக்கற்கள் தென் தமிழீழத் துயிலும் இல்லங்களில் நிறுவப்பட்டுள்ளன. மாவீரர்களான லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் வித்துடல்கள் பாரிஸ் பொது மயானத்தில் விதைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான நினைவுக் கற்கள் விசுவமடு துயிலும் இல்லத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. எமது துயிலும் இல்லங்களின் எண்ணிக்கை 25. மாவீரரின் கல்லறை மற்றும் நினைவுக்கல் (கார்த்திகை, 2005 வரை) ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை 20,000 மேலதிக விரபத்தை பட்டியலில் பார்க்கலாம்.

களப்பலியான போர்வீரர்களுக்கும் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பிரத்தியேக இடங்களுக்கும் விசேட மரியாதை செலுத்தப்படுவது உலக வழமை. தலைத்தொப்பியை அகற்றியவாறு சிரம் தாழ்த்தி ஒரு கணம் துதிப்பது பொதுவான நடைமுறை. மிகவும் நேர்த்தியாகக் கலையுணர்வோடு பேணப்படும் பொது இடங்களில் ஒன்றாக போர் வீரர்கள் அடக்கம் செய்யப்பட்ட நிலங்கள் அமைகின்றன. இரண்டாம் உலகப்போரில் 9,386 அமெரிக்கன், 17,769 பிரிட்டிஸ், 5,002 கனேடின் மற்றும் 650 போலந்து வீரர்கள் 1944 இல் நடந்த நொர்மண்டி தரையிறக்கத்தில் இறந்தனர். இவர்களுடைய உடல்கள் 27 இடுநிலங்களில் புதைக்கப்பட்டுள்ளன. 2.5 மில்லியன் ஜப்பானிய போர்வீரர்களின் அன்மாக்கள் நினைவாக தலைநகர் தொக்கியோவில் யசுக்குனி போர் நினைவாலயம் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கண்டியில் பிரிட்டிஸ், பிரான்சு, கனடா, கிழக்கு ஆபிரிக்கா, தெற்கு ஆசியாவைச் சேர்ந்த இரண்டாம் உலகப்போர் வீரர்களுக்கான கல்லறைகள் கட்டப்பட்டுள்ளன. எதிரிகளுடைய கல்லறையாக இருந்தாலும் அவற்றிற்கு மரியாதை செலுத்தியவாறு பேணிவருவது உலகப் போரியல் பண்பு. சிங்களப் படைகளின் யாழ். மீதான ரிவசெர படையெடுப்பின்போது கோப்பாய், கொடிகாமம் துயிலும் இல்லங்கள் புல்டோசர் மூலம் சிதைக்கப்பட்டன. இது உலகப் பாராம்பரியத்தை மீறிய காட்டுமிராண்டித்தனம் என்பதில் ஐயமில்லை.



அடுத்ததாக, எமது வீரச்சாவு நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். களப்பலியான மாவீரனின் வித்துடல் கிடைக்கப்பெற்றதும். அது ஓரிடத்திற்குக் கொண்டவரப்படுகிறது. பதனிடப்பட்ட அந்த உடலுக்குச் சீருடை அணியப்படுகிறது. அதே நேரத்தில் அந்த மாவீரனுடைய விவரங்கள் உறுதிசெய்யப்பட்டு அவனுக்கான பதவிநிலை வழங்கப்படுகிறது. பின்பு வித்துடல் பேழையில் வைக்கப்படுகிறது. மாவீரன் பெயரும் பதவிநிலையும் பேழையில் பொறிக்கப்படுகின்றன. மாவட்ட அரசியல் துறை ஊடாக வித்துடல் அடங்கிய பேழை இராணுவ மரியாதையுடன் பெற்றார் அல்லது உறவினர் வீட்டிற்கு எடுத்துவரப்படுகிறது. வீட்டு அஞ்சலி முடிந்தபின் வீரவணக்க நிகழ்வுக்காக வித்துடல் ஒரு பொதுமண்டபம் அல்லது மாவீரர் மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

அதன்பின் வீரவணக்கக் கூட்டம் மண்டபத்தில் நடத்தப்படுகிறது. முதற்கண் பொதுச்சுடர் ஏற்றப்படுகிறது. அடுத்ததாக ஈகைச்சுடர், பின்பு வித்துடலுக்கு மலர்மாலை அணிவிக்கப்படுகிறது. பெற்றார், மனைவி, கணவன், பிள்ளைகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. நினைவுக் கல் நாட்டும் நிகழ்வுக்கும் இதுபோன்ற நடைமுறை பின்பற்றப்படுகின்றது. நினைவுக்கல் நிகழ்வில் மாவீரனின் படம் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்ட பின் உரித்தாளரிடம் கொடுக்கப்படுகிறது. வித்துடலுக்கு மலர்மாலை மலர் வணக்கம செலுத்தப்பட்ட பின் ஆகவணக்கம் செலுத்தப்படுகிறது. நினைவுரைகள் அடுத்ததாக நிகழ்த்தப்படுகின்றன.

## கல்லறை நினைவுக்கல் விபரம் 2005

| துயிலும் இல்லம் | கல்லறை | நினைவுக்கல் | மொத்தம் |
|---|---|---|---|
| விசுவமடு | 2,118 | 610 | **2,728** |
| முள்ளியவளை | 1,670 | 905 | **2,575** |
| கிளிநொச்சி | 1,213 | 755 | **1,963** |
| வன்னிவிளாங்குளம் | 621 | 235 | **856** |
| ஆலங்குளம் | 533 | 130 | **663** |
| முழங்காவில் | 602 | 357 | **959** |
| ஆட்காட்டிவெளி | 360 | 300 | **660** |
| பண்டிவிரிச்சான் | 208 | 64 | **272** |
| அளம்பில் | 74 | 73 | **147** |
| உடுத்துறை | 14 | 200 | **214** |
| கோப்பாய் | 648 | 1,184 | **1,832** |
| சாட்டி | 04 | 150 | **154** |
| கொடிகாமம் | 463 | 505 | **968** |
| எள்ளங்குளம் | 309 | 486 | **795** |
| ஈச்சங்குளம் | 392 | 315 | **707** |
| மணலாறு | 81 | - | **81** |
| டடிமுகாம் | 90 | - | **90** |
| தரவை | 1,488 | 964 | **2,452** |
| தாண்டியடி | 485 | - | **485** |
| கண்டலடி வாகரை | 284 | - | **284** |
| மாவடி முன்மாதிரி | 62 | - | **62** |
| கஞ்சிகுடிச்சாறு | 686 | - | **686** |
| ஆலங்குளம், திருமலை | 130 | 132 | **262** |
| பெரியகுளம் | 65 | - | **65** |
| தியாகவனம் | 35 | - | **35** |
| **மொத்தம்** | **12,635** | **7,365** | **20,000** |

இறுதியாக இராணுவ மரியாதையுடன் வித்துடல் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு மலர் வணக்கம் செய்யப்படுகிறது. அதன்பின் விசேட பீடத்தில் வைக்கப்பட்ட பேழையும் உடலும் மேடைக்கு கொண்டுசெல்லப்பட்டு அதில் வைக்கப்படுகிறது. இப்போது உறுதிமொழி வாசிக்கப்படுகிறது.

உறுதிமொழி வாசிக்கப்பட்ட பின் இராணுவ மரியாதை வேட்டு தீர்க்கப்படுகின்றது. தாயகக் கனவுப் பாடல் ஒலித்தபின் அனைவரும் அகவணக்கம் செலுத்துகின்றனர். வித்துடல் புனித விதைகுழிக்கு இராணுவ மரியாதை யுடன் எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப் படுகிறது. அனைவரும் கைகளால் மண் எடுத்து விதைகுழியில் போடுகின்றனர். நடுகல்லானால் மலர் வணக்கம் செய்கின் றனர்.



ஈழத்தமிழினத்தால் மாவீரர் நாளாகக் கொண டாடப்படும் நவம்பர் 27. தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச்சாவடைந்த எமது இயக்க வேங்கை லெப். சங்கர் (சத்தியநாதனின்) நினைவாக அமைகிறது. 1989ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாட்தொட்டு நாம் ஆண்டு தோறும் மாவீரர் நாளைக் கடைப்பிடித்து வருகிறோம். முதலாவது மாவீரனின் வீரச் சாவுதான் அனைத்து மாவீரர்களின் நாளாகக் கொண்டாடப்படுவதால் அதற்கு மிகப்பெரிய முக்கியத்துவம் உண்டு. தமிழீழத்தின் மிகப் பெரிய நிகழ்வு என்ற சிறப்பு மாவீரர் நாளுக்கு உண்டு.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரை நவம்வர் 21 தொட்டு 27 வரை யிலான ஒருவாரம் மாவீரர் வாரமாகச் சிறப் பிக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25, 26, 27 ஆம் நாட்கள் மாவீரர் எழுச்சி நாட்களாகக்கடைப்பிடிக்கப்படுகின் றன. 1994 ஆம் ஆண்டுதொட்டு மாவீரர் நாள் நள்ளிரவிலிருந்து மாலை 6:05 மணிக்கு மாற்றப்பட்டது. முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நேரமும் அதுவாகும். 6:05 மணிக்கு தமிழீழம் எங்கணும் அனைத்துத் தேவாலய மணிகளும் ஒரு நிமிடம் ஒலி எழுப்பும். அதன்பின் அகவணக்கம் செலுத்தப் படும். மாவீரர் துயிலும் இல்லங்கள் யாவற் றிலும் ஒவ்வொரு கல்லறைக்கும் நடுகல்லுக் கும் முன்னால் பெற்றார், உரித்தாளர்கள் போன்றோரால் சுடர் ஏற்றப்படும். துயிலு மில்லம் வராத உள்ளூர் மக்களும். புலம் பெயர்ந்த உடன்பிறப்புக்களும் தத்தம் இல் லிடங்களில் விளக்கேற்றி வணக்கம் செய் வார்கள்.

மாவீரர் நாளின்போது அந்த நாளுக்கென்று பாடப்பட்ட மாவீரர் பாடல் துயிலும் இல்லங் களில் ஒலிக்கவிடப்படும். முதலாவதாக இது 1991 ஆம் ஆண்டு கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒலித்தது. இதை எழுதியவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

கார்த்திகை, 2005 – விடுதலைப்புலிகள்



THEN: Jaffna, Koappaay War Cemetary - November 2005




NOW: SL Army 51 Division New Headquarters - March 2011




# மாவீரர் துயிலும் இல்லம்




A Sri Lankan soldier stands outside the destroyed walls of what used to be a Tamil Tiger cemetery in Kilinochchi. Though journalists are barred from the northern war zone, some were taken on an escorted tour of the region as part of the government's 'victory celebrations'. *Photo Lakruwan Wanniarchchi / AFP / Getty Images*

# வேலை வாய்ப்பு

Whitby, Durham பகுதியில்

**வீட்டு பணிப்பெண் தேவை**

**தங்குமிட வசதியுடன் கூடிய பிள்ளைகளை பராமரிப்புடன் சமையல் செய்வதற்கு அனுபவமுள்ள பணிப்பெண் தேவை.**

**தொடர்புகளுக்கு:**

**416.616.6005**





**சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்**

**Shiva Sri S.JANARTHANA KURUKKAL**
**Priest (JANA IYA)**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கள வைபவங்களையும் ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி வைப்பதற்கு அழையுங்கள்

**Tel: 647.449.6542**

Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com









**1)கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம்**

**இருந்தவிடம்:** கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் அமைந்திருந்தது.

**முகையவிழ்த்தது:** ஏப்ரல் 7, 1991

**முதல் வித்து:** வீரவேங்கை மைக்கேல்

**1995** ஆம் ஆண்டு சிங்களத்தால் அழிக்கப் படும் வரை இருந்த ஒலிமுகம்:-




**2)எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம்**

**முகையவிழ்த்தது:** 1990

**இடிக்கப்பட்டது:** 1995

**புனரமைக்கப்பட்டது:** 2002

**முதல் வித்தும் விதைக்கப்பட்டதும்:** லெப்.செல்வம் சூன் 16, 1991

**2002 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 290
நினைவுக்கற்கள் - 490
தியாகசீலம் - 24

"அதன் சுற்றுச்சுவர்"





**3)கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்**

இங்குதான் முதன் முதலில் மாவீரர் ஒருவர் விதைக்கப்பட்டார்.

**முகையவிழ்த்தது:** சூலை 14, 1991

**முதல் வித்து:** கப்டன் சோலை

**மொத்த பரப்பளவு:** 12 ஏக்கர்

**2002 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 654
நினைவுக்கற்கள் - 1199





**4)முழங்காவில் மாவீரர் துயிலும் இலலம்**

**முகையவிழ்த்தது:** சூலை 28, 1991

**முதல் வித்து:** 2ஆம் லெப். சிகானு (ஆ.க.வெ இல்)

**மொத்த பரப்பளவு:** 15 ஏக்கர்

**இருந்தவிடம்:** கிளிநொச்சியில் இருந்து 51 கி.மீ இலும் மன்னாரில் இருந்து 70கி.மீ தொலைவிலும் உள்ளது.

**2002 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 603
நினைவுக்கற்கள் - 348





**5)கண்டலடி மாவீரர் துயிலுமில்லம்**

**முதல் வித்து:** லெப்.பரமசிவம்
**இருந்தவிடம்:** மட்டு-திருமலை வீதியில் வாகரைக்கும் கதிரவெளிக்கும் இடையில்
**2002 வரையிலான மொத்த மாவீரர் பீடங்கள்:** 279





ஒலிமுகம்"

**6)ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்**

**முகையவிழ்த்தது:** சூலை 18, 1998

**முதல் வித்து:** வீர. புரட்சிகா

**மொத்த பரப்பளவு:** 10 ஏக்கர்

**2002 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 533
நினைவுக்கற்கள் - 126






ஆழங்குளத்தில் பொதுச்சுடர் ஏற்றுமிடம்"




'ஆழங்குளம் ஒலிமுகம்"

**7)தரவை மாவீரர் துயிலுமில்லம்**

**முகையவிழ்த்தது:** பெப்ரவரி 25, 1991
**முதல் வித்து:** லெப்.விகடன் (கண்டலடி-கட்டுமுறிவு நோக்கிய சிங்களத்தின் முன்னேற்றத்திற்கு எதிரான எறிகணை வீச்சில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர். அவர்களில் முன்னவர் இவரே.)

**2002 வரையிலான மொத்த மாவீரர் பீடங்கள்:** 2500+






"தரவையில் பொதுச்சுடர் ஏற்றுமிடம் ; 180 பாகைக் காட்சி"




"பாதையும் தரவை ஒலிமுகமும் "

**8)மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லம்**



**9)தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம்**

**முதல் வித்து:** (நிலை அறியில்லை) சுதா

**2002 வரையிலான மொத்த மாவீரர் பீடங்கள்:** 487

**கல்லறைகள் கட்டும் முன்:-**



**கல்லறைகள் கட்டிய பின்:-**



**10)ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்**

**முகையவிழ்த்தது:** சனவரி 19, 1991

**முதல் வித்து:** லெப். நிக்ஸன் ஏ லெப். லவன்

**மொத்த பரப்பளவு:** 5 ஏக்கர்

**2002 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 391
நினைவுக்கற்கள் - 385




**11)வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம்**

**முதல் வித்து:** வீர. வாசுகி




**12)மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம்**



**13)மன்னாரில் இருந்த இரு மாவீரர் துயிலுமில்லங்களில் ஒன்று**




**14)கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்**

**2004 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 1,213
நினைவுக்கற்கள் - 755




'இங்கு இரு வித தோற்றங் கொண்ட நினைவுக்கற்கள் இருந்தன."





'இங்கு இரு மூ தோற்றங் கொண்ட கல்லறைகள் இருந்தன."

**15)முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம்**

2004 ஆம் ஆண்டில் இது தான் இரண்டாவது மிகப்பெரிய துயிலுமில்லமாகும்.

**2004 வரையிலான மொத்த**
கல்லறைகள் - 1,670
நினைவுக்கற்கள் -905




'இங்கு இரு வித தோற்றங் கொண்ட கல்லறைகள் இருந்தன."

**16)அளம்பில் மாவீரர் துயிலுமில்லம்**



'இங்கு இரு வித தோற்றங் கொண்ட கல்லறைகள் இருந்தன."

**17)மணலாற்றில் இருந்த இரு மாவீரர் துயிலுமில்லங்களில் ஒன்று**




ஜீவன் முகாமினதா இல்லை டடி முகாமினதா என்று எனக்குத் தெரியவில்லை!

**18)விசுவமடு மாவீரர் துயிலுமில்லம்**





ஏனைய 10 துயிலுமில்லங்கள் பற்றி என்னிடம் தகவல் இல்லை. ஆனால் மேற்குறிப்பிட்டவற்றைவிட பல்வேறு வடிவ கல்லறைகளின் படங்கள் இருப்பில் உள்ளது.

**19)சாட்டி மாவீரர் துயிலுமில்லம்**




**20)உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம்**



**21)கள்ளிக்காடு மாவீரர் துயிலுமில்லம்**





**22)ஆழங்குளம் மாவீரர் துயிலுமில்லம்**

**23)பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம்**

**24)கல்லடி மாவீரர் துயிலுமில்லம்**

**இறுதிப் போர்க்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டதில் துயிலுமில்லங்களாக விளங்கிய பகுதிகள்:**

-தேவிபுரம் “ஆ“ பகுதி குடியேற்ற திட்டம் (சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)

-இரணைப்பாலை பெருந்தோட்டம் (சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)

-வலைஞர் மடம் தெற்கு களித்தரைப் பகுதி (பெப்ரவரி இறுதியில் இருந்து மார்ச் முதலாவது கிழமை வரை)

-இரட்டைவாய்க்காலையும் வலைஞர் மடத்தையும் பிரிக்கும் கிரவல் வீதிக்கு அண்மையில் உள்ள வெளிப்பகுதி (மார்ச் இரண்டாம் கிழமையில் இருந்து ஏப்ரல் 20 வரை)

-வெள்ளா முள்ளிவாய்க்கால் கப்பல் வீதிக்கு அண்மையில் உள்ள இடம்.(ஏப்ரல் 21- மே 12 வரை)

-மே 13,14,15 அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றாற்போல விதைக்கப்பட்டது.

-மே 16,17,18 விதைக்கப்படவில்லை விடுபட்டன.

**இவ்வாறு இறுதிநேரத்தில் விதைக்கப்பட்டவை கீழ்க்கண்டவாறு தோற்றமளித்தன:**

சனவரி 20 பிற்பாடில் இருந்து மே 12 வரை



**வன்னியில் இருந்த மாவீரர் துயிலுமில்லங்களின் ஒலிமுகம்.**
இந்த முகப்பினை ஒலிமுகவாயில் என அழைப்பர். அதன் பொருள் புலி வாழும் இடத்தின் முகவாயில் என்பதாகும்.



**வட்டக்கச்சியில்(கிளி.) இருந்த “மாவீரர் நினைவு மண்டபம்”:**
வீடுகளில் வைக்க இடமில்லாதபோது, மாவீரர்களின் வித்துடல்கள் பொதுமக்களின் வீரவணக்க நிகழ்விற்காக வைக்கப்படும் இடம்.



**வளைவு:-**
இவை மாவீரர் வாரத்தின் போது தெருக்களில் அமைக்கப்படும், கூடுதலாக இயக்க கட்டடங்களிற்கு முன்னிருக்கும் சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும்.



கல்லறைகள் கட்டப்படாத மாவீரர் பீடத்தின் தோற்றம்



மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும் ஒரு வீரனின் வித்துடல் பேழையானது அங்குள்ள மேடையில்(இதற்கு ஒரு விதப்பான பெயர் உண்டு. மறந்துவிட்டேன்) வைக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்படும். இதுவொரு தமிழீழ பண்பாட்டுச் சடங்கு ஆகும்.



கடலிலே வீரச்சாவடைந்தோரிற்காக நினைவு வணக்கம் செய்து கடலினுள் வைத்து பொதுச்சுடர் ஏற்றி கடலினுள் விடப்படும் “பொதுச்சுடர் மிதவை“.

(2003 வரை (வுடைட முஉவ. 31, 2002) வீரச்சாவடைந்த மொத்த கடற்புலி மாவீரர்கள் 1066)

இப்பண்பாடானது(வசயனவைழைெ) இள பேரரையர்(டுவ. ஊழட.) மறவன் மாஸ்டர் அவர்களின் ஆலோசனையின் பேரில் கடற்புலிகளின் சிறப்புக் கட்டளையாளர் பேரரையர்(ஊழட.) சூசை அவர்களால் 2000 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு தமிழீழம் சிறீலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்படுவரை தொடரப்பட்டது.



**மாவீரர் துயிலும் இல்ல விபரம்.**

திருகோணமலை மாவீரர் துயிலுமில்லங்கள்
1. ஆலங்குளம்
2. வெளியகுளம்
3. தியாகவனம்
4. உப்பாறு

மட்டக்களப்பு மாவீரர் துயிலுமில்லங்கள்
5. தரவை
6. தாண்டியடி
7. வாகரை கண்டலடி

அம்பாறை மாவீரர் துயிலுமில்லங்கள்
8. உடும்பன்குளம்

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லங்கள்
9. முள்ளியவளை
10. விசுவமடு
11. துணுக்காய் ஆலங்குளம்
12. கிளிநொச்சி கனகபுரம்
13. முழங்காவில்

முல்லைத்தீவு மாவீரர் துயிலுமில்லங்கள்
14. வன்னி விளாங்குளம்
15. அளம்பில்
16. மணலாறு புனிதபூமி
17. மணலாறு உதயபீடம்
18. களிக்காடு

யாழ்ப்பாணம் மாவீரர் துயிலுமில்லங்கள்
19. வடமராட்சி கிழக்கு உடுத்துறை
20. யாழ்ப்பாணம் கோப்பாய்
21. தென்மராட்சி கொடிகாமம்
22. வடமராட்சி எள்ளங்குளம்
23. தீவகம் சாட்டி

மன்னார் மாவீரர் துயிலுமில்லங்கள்
24. ஆட்காட்டிவெளி
25. பண்டிவிரிச்சான்
26. மன்னார் முள்ளிக்குளம்

வவுனியா மாவீரர் துயிலுமில்லங்கள்
27. வவுனியா ஈச்சங்குளம்

மாவீரர் துயிலுமில்லங்கள் - இறுதியுத்தத்தில்
1. சுதந்திரபுரம்
2. தர்மபுரம்
3. இரணைப்பாலை
4. பச்சைபுல்வெளி
5. முள்ளிவாய்க்கால் கிழக்கு
6. முள்ளிவாய்க்கால் மேற்கு




# தமிழீழத் தேசியக்கொடி நாள்
# நவம்பர் 21
# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரகடனம்




## கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



**Suren Sornalingam**
Certified Insolvency Counsellor

DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

# தூயன விளங்கும் சோதி வாழ்க பல்லாண்டு



விண்தொட நிமிரும் வயத்தகு வீரம்
வழிகளில் அன்பெனும் ஈரம்.
விலைகொடுத் தெவரும் வாங்கிட முடியா
விடுதலை நெருப்பெனும் பாரம்.
மண்தொட இறங்கிப் பரவிடும் பாதம்
மழையினைச்சொரிந்திடும் மாதம்.
மானமே தலையில் மகுடமென்றான
மானுட விடுதலைக்கீதம்.
கண்படும் வண்ணம் கலக்கிடும் காற்று
கார்த்திகைப் பூக்களின் நாற்று.
காவிய மொன்றுக் கானதோர் கவிதை
கைவிளக் கானதை ஏற்று.
பண்தொடும் தமிழில் பாடுக வாழ்த்து
பாட்டுடைத் தலைவனைப்போற்று.
பாரெலாம் இன்று வாழ்த்திடும் நாளில்
பரவுது விடுதலைக்காற்று.

தூயன விளங்கும் செம்மைச
சோதியே; புலரிக் கான
நாயனக் குழலில் ஏறம்
நாதமே; திசைகள் யாவின்
வாய்களும் வாழ்த்திப் பாட
வந்தவா; வாகைச் செல்வா!
தேய்வன அறியா எங்கள்
தேசியத்தலைவா! வாழி.

- புதவை இரத்தினதுரை -

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School

* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
* Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268



# மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெறவேண்டிய ஒழுங்கு விதி முறைகள்

இதய கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்! மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை, அவர்கள் காலத்தை உருவாகிப்பவர்கள். -தமிழீழ தேசிய தலைவர்



எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டு இருக்கிறது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இறப்புக்கள் அல்ல.

இந்த வீரர்களின் சாவு, எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போரளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்க சக்தியாக அமைந்து விட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள், சுகந்திரச் சிற்பிகள், எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுகந்திரத்திற்காக, சுய கௌரவத்திற்காக, பாதுகப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையளர்கள் (தியாகிகள்) காலம், காலமாக எமது இதயக் கோவிலில் வைத்துப் பூசிக்கபடவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனித பிறவி அல்ல, அவன் ஓர் இலட்சியவாதி, ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன், மற்றவர்களின் விடிவிற்காக, விமோசனத்திற்காக வாழ்பவன், சுய நலமற்ற, அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுகந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தன் உயிரையும் அர்பணிக்க துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.

“புலிகளின் தாகம் தமிழ்ழீழ தாயகம்”

வே.பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலை புலிகள்.

## மாவீரர் நாள் கையேடு!

### மாவீரர் நாள் (நவம்பர் 27)

மாவீரர் தேச விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தும், எதிரி பாசறையை வெடிகுண்டு கொண்டு தகர்த்தும் சத்திய வேள்வியில் நித்தமும் வேகி கொடியது பறந்திட உயிரினை ஈய்ந்து உடலை உரமிட்டு செங்குருதியால் வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும் நினைவுச் சிலைகளாய், ஓவியமாய் வெள்ளை மலரேந்திய வேதங்களாய் ஈழமண்ணில் புது விதையாய் விடுதலையின் தீச்சுடராகி தேசமங்கும் சோதியாய் நிற்பவரே மாவீரராவார்.

### ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இன விடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறை போட்டவர்கள். தேச மக்களின் பாசப் பிணைப்புகளுக்காக தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள். பள்ளிப் பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள் ஊரெல்லாம் உறங்கும் வேளை உறக்கமின்றி விழித்தவர்கள். எல்லை சுற்றி வேலிச்சிலையாய் நின்றவர்கள். தமது மக்களுக்காய் கால்களை, கரங்கைளை இழந்து நின்றவர்கள்! தேச விடுதலைக்காய் மரணித்த மாவீரர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று. இவ்வெழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

விடுதலைப் புலி வீரர்களில் முதலாவதாக வீரச்சாவெய்திய மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவு நாளை நவம்பர் 27 ஐ தமிழீழ தேசம் மாவீரர் நாளாக பிரகடனம் செய்துள்ளது.

வருடந்தோறும் இப்புனித நாளினை தமிழினம் உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது. நினைவு கூருகின்றது. மாவீரர் நாளை எதிர்கொள்ளுதல் மாவீரர் நாளானது மாவீரர் எழுச்சி நாளாகத் தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுகிறது.

எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் எழுச்சி நாட்களானது நவம்பர் 25 இல் தொடங்கி நவம்பர் 27 இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களைக் கொண்டாடும் முகமாக நவம்பர் 25 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழீழம் எங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற்படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக் கூடங்கள் ,பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே, மக்கள் அனைவரும் தனித்தும், ஒருமித்தும் புனிதமாக்கி விடுகின்றனர்.

இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு தமிழீழ நாடு புதுப் பொலிவுடன் விளங்கும்.

### மாவீரர் நாள் எழுச்சி நாட்கள் 25 –27

ஆரம்ப நாள் காலை 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றத்தைத் தொடர்ந்து மாவீரர் எழுச்சி நாட்கள் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகும். தமிழீழம் முழுவதும் எழுச்சிக் கோலம் பூண்டு பொலிவுடன் விளங்கும். அனைத்துத் தமிழீழ மக்களும் அலங்கரிப்பு நிகழ்ச்சியிலும் வீரவணக்க நிகழ்வுகளிலும் கலந்துகொள்வார்கள்.

இந்த நாட்களில் வேறு களியாட்டங்கள், கொண்டாட்டங்கள், எதுவும் நடைபெற மாட்டாது. தேவையற்ற கேளிக்கைகள் வேண்டத்தகாத சூழ்நிலைகள் மறைந்து விடும். மதுச்சாலைகள் மூடப்பட்டு மது பாவிப்பதை நிறுத்திவிடுவார்கள்.

வீடுகள் தோறும் விடுதலைத் தேசிய கீதங்கள் ஒலிக்கும். மக்கள் பிரிவு, பிரிவாக, அமைப்புக்கள் ரீதியாக, ஆக்கபூர்வ வேலைத் திட்டங்களிலும், மற்றும், மாவீரர் நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வர்.

### பாடசாலைகள்.

ஆசிரியர்கள் மாவீரரின் மாண்பினையும் மாவீரர் நாளின் மகிமையையும் மாணவர்களுக்கு முன்கூட்டியே தெளிவினை ஏற்படுத்துவார்கள். பாடசாலைகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

நவம்பர் 25 ஆம் நாள் காலை 9.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலும், பாடசாலைகளில் வீரவணக்கக் கூட்டங்கள் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாவீரர் நினைவாக சமூக சேவைகளிலும் ஈடுபடுவர். மாவீரருக்கு மலர் வணக்கம் செலுத்தும் பணியினை மாணவர்கள், பொது மக்களும், பொது நிறுவனங்களும், முழுமையாக இணைவதில் தேசியப்பற்று உரமேற்றப்படுகிறது.

### தமிழீழ மாவீரர் நாள் நவம்பர்–27

தமது இன்னுயிரை ஈந்து தமிழீழ விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அருஞ் செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினர்களும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில், எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானது தான் மாவீரர் நாள்.

தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப்போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்து விட்ட நிலையில், ஒவ்வொரு மாவீரரையும் தனித்தனியாக ஆண்டு தோறும் அவரவர் நிறைவு நாட்களில் நினைவுகூர இயலாது என்ற நிலையில், அனைவரையும் ஒரே நாளில் நினைவு கூரக் கூடியதாக தமிழீழ விடுதலைப் போரில் முதல் களச் சாவடைந்த எமது இயக்க வீரர் லெப்ரினன்ட் சங்கர் (சத்தியநாதன்) அவர்களின் நினைவு நாளான நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமது தலைவர் 1989 ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் மண் மீட்புப் போரிலே பல வெற்றிகளைக் குவித்துவரும் அதே நேரம், நாட்டை எல்லாத் துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி வழிகாட்டி இயங்கி வருவதோடு தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி, வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும் குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவும் எனப், பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றனர்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப்பெரிய நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் தமிழீழ மக்களாலும், உலகாத் தமிழர்களாலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப் படுவதற்கும் தமிழீழம், மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பதற்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு.

ஏனைய நாடுகள் எல்லாம் விடுதலைக்குப் பின் அமைந்த அரசுகளால் விழா எடுக்கப் படுகின்றனவே தவிர போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படுவதில்லை. ஆனால் விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலும், எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கு மத்தியிலும், பல்வேறு நெருக்கடிகளுக்கு கிடையிலும், போராட்டத்தையும் நடாத்திக் கொண்டு, தமிழ் மக்கள் மண்ணின் விடிவுக்காகத் தம் இன்னுயிரை ஈய்ந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டு நடுகற்கள் நாட்டப்பட்டு வழிபாடியற்றப் படுகின்றன. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர் குடும்பத்தினர் மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப் படுகின்றனர்.

உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நினைவுபோல மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் அவர்களின் பெற்றொரும் குடும்பத்தினரும் போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

### மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும் நடைமுறை ஒழுங்குகளும்.

1989 ஆம் ஆண்டில் நவம்பர் 27 ஆம் நாள் மாவீரர் நாளாகவும் 1990 ஆம் ஆண்டிலிருந்து 1994 ஆம் ஆண்டுவரை நவம்பர் 21ஆம் நாளிலிருந்து 27 ஆம் நாள் வரை மாவீரர் வாரமாகவும் தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடைபெற்றுவந்த தமிழீழ மாவீரர் நாள் எழுச்சி



நிகழ்வுகள், 1995நவம்பர் மாதம் நிகழ் வின் நேரம் மாற்றப்பட்டது.

1995 ஆம் ஆண்டிலிருந்து, நவம்பர் 25 ஆம் நாளிலிருந்து 27ஆம் நாள்வரை மூன்று நாட்கள் தமிழீழ மாவீரர் நாள் எழுச்சி நாட்களாகக் கடைப்பிடிக்கப்பட விருக்கின்றன.

**தமிழீழ தேசியக் கொடி ஏற்றலுடன் மாவீரர் எழுச்சி நாள் ஆரம்பமாகும்.**

**மாவீரர் நாள் தொடக்க நிகழ்வுகள்!**

01. சுடரேற்றல்
02. தேசியக் கொடியேற்றல்
03. மலர் வணக்கம்
04. அக வணக்கம்
05. உறுதியுரை
06. நினைவுரை என்பன வரிசை ஒழுங் கில் மேற்கொள்ளப்படும்.

தொடக்க நிகழ்வுகள் மாவீரர் நாள் எழுச்சி நாட்களான மூன்று நாட்களிலும் நடை பெறும்.

தேசியக் கொடி ஏற்றல், மாவீரர் நாள் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நவம் பர் 25 ஆம் நாளன்று காலை 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன், ஆரம்பமாகும்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் 25 ஆம் நாள் காலை 8.00 மணிக்கு ஏற்றப்படும் தேசியக் கொடி நவம்பர் 27 ஆம் நாள் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும்.

இயக்கப் பணிமனைகள், தளங்களில் முதல் இரண்டு நாட்களிலும் மாலை 6.00 மணிக்கு கொடி இறக்கப்பட்டு, மறுநாள் காலை ஏற்றப்படும்.

நவம்பர் 27ஆம் நாள் காலையில் ஏற்றப் படும் கொடி, மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின் இறக்கப்படும். பொது நிறுவனங்களிலும் பள்ளிகளிலும் ஒவ்வொரு நாளும் பணி முடிந்த பின் பகல் 12.01 இன் பின்பாகவும் மாலை 6.00 மணிக்கு முன்பாகவும் தேசியக் கொடி இறக்கப்பட்டு மறுநாள் காலையில் ஏற்றப் பட வேண்டும்.

(தேசியக் கொடி ஏற்றுதல், இறக்குதல் தொடர்பான கூடுதலான விளக்கங்கள் தேசியக் கொடிப் பயன்பாட்டு விதிக் கோவை என்னும் நூலில் கொடுக்கப் பட்டுள்ளன.)

**நினைவொலி எழுப்பலும் சுடரேற்றலும்**

27ஆந் திகதி சுடரேற்றும் நேரத்தை தமிழீழ மக்கள் அனைவரும் எதிர்பார்த் துக் காத்திருப்பர். மாலை 6.05 மணிக்கு தமிழீழம் எங்கும் சமகாலத்தில் அனைத் து ஆலய, தேவாலய மணிகளும், ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பும். அந்த நேரத்தைத் தொடர்ந்து எல்லா மக்களும் அகவணக்கம் செலுத்துவார்கள்.

துயிலும் இல்ல மைதான நடுவில் - பீடத் தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப் பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வுக் கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத் திடத் தீச்சுடர் ஏற்றப்படும்.

அமைப்பின் முதன்மையானவர்கள் மத் திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையவர்கள் தீச்சுடரை சமகாலத் தில் ஏற்றுவர். சமகாலத்தில் ஒவ்வொரு இல்லங்களிலும் வாசலிலும் மாவீரரின் சுடரொளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ் வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங் கள் பிரகாசிக்கும். தமிழீழம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியா கிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழீழ மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவுகூரப்பட வேண் டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழீழமெங்கும் மாவீரர் சுடர்கள் இந்நேரத்தில் எங்கும் ஒளிர வேண்டும்.

சிட்டி விளக்கேற்றக் கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீப்பந்தங்கள் ஏற்றியும் பொது இடங்களில் பெரிய சுடர் களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது விடு தலைப் பாதைக்கு உறுதியையும் உணர் வையும் கொடுத்து நிற்கின்றது.

**மாவீரர் நாள் நவம்பர்–27**
**இரவு நிகழ்வுகள்"**

தேசியத் தலைவரின் மாவீரர் நாள் நினைவுரை! (மாவீரர் நாள் கொள்கைப் பிரகடன உரை)

நவம்பர்-27 மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்க கூடியதாக தேசியத் தலைவரின் மாவீரர் நாள் நினைவுரை 5.50, மணிக்குப் பின்னர் இடம்பெறும்.

**நினைவொலி எழுப்புதல் (6.05) மணி!**

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன் உட னடியாக துயிலும் இல்லங்களில் 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டு இடங் களிலும், வீடுகளிலும், மணி ஒலி ஒரு மனித்துளி நேரம் எழுப்பப்படும், உயிர் காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்வு தொடங்குவதுக்கு ஏற்ற வகையில் நிறுத் தபட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06) மணி!**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத் தபட்டவுடன் (6.06 ) மணிக்கு மாவீரர் களுக்கான ஒரு மணித்துளி அகவணக் கம் செலுத்தப்படும். இந்த நேரம் இல்லங் களிலும் ஏனைய இடங் களிலும் இருக்கும் தமி ழீழ மக்கள் எழுத்து நின் று, மாவீரர் களை நினை வில் நிறுத்தி அகவணக் கம் செலுத்துதல் வேண் டும்.

**ஈகை சுடர் ஏற்றுதல் (6.07) மணி!**

அகவணக்கம் நிறைவுற் றதும் ( 6.07 ) மணிக்கு ஈகைசுடர் ஏற்றப் படல் வேண்டும் (மாவீரர் களின் பெற்றோர் சுடர் ஏற்ற வேண்டிய கல் லறைகள், நினைவு கற் களுக்கு முன்னால் ( 5.15 ) மணிக்கு நிற்ககூடிய வகையில் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டிருக் கும்.)

மாவீரர் துயிலும் இல்லங் களில் உள்ள மாவீரர்களின் கல்லறைகள், நடுகற்கள் முன், மாவீரர்களின் பெற்றோர்கள், குடம் பத்தினர் அதே நேரம் மாவீரர் துயிலும் இல்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் களின் பெற்றோர்கள் அவர்களுக்கென ஒழுங்கு செய்யபட்ட பிரத்தியோக இடங் களில் ஈகைசுடர் ஏற்றுவார்கள்.

இவை தவிர துயிலும் இல்லங்களுக்கு வர இயலாத பொதுமக்கள் தமது இல்லங் களில், பொது இடங்களில், அலுவலகங் கள், விளையாட்டு இடங்கள், தொழிற் சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில், உரிய முறைப்படி ஈகைசுடர் ஏற்றுவார்கள், ஏற்றும் போது, மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகைசுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கம், அதன் புனிதம் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ, அல்லது வேறுவகையில் ஒலி, ஒளி, உருவாக் குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

**அலங்காரம் (சோடனை)**

எமது அமைப்பை சார்ந்த வீரச்சாவு, வீர வணக்க கூட்டம், துயிலும் இல்லம், மாவீரர் விசேட நிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக, சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல், எமது தேசியம் சார்ந்ததாக, தேசியக் கொடியின் நிறங்களைப் பிரதி பலிப்பதாக அமைதல் வேண்டும்.

**எமது அலங்கார முறையும், நிறங்களும்!**

சிவப்பு, மஞ்சள், கருப்பு - தேசியக் கொடி யைப் பிரதிபலிக்கும், கருப்பு நிறம், கரும் புலிகள் நாள், மற்றும் கரும்புலிகள் சம்மந் தமான நிகழ்வுகளுக்கு மட்டும் கலந்து பயன்படுத்தலாம்.

❖ வீரச்சாவு கால் நாட்டலுக்கு சிவப்பு, மஞ் சள் துணிகளை பாவித்தல் வேண்டும்.

❖ மேசை விரிப்பு, பீட விரிப்புக்களுக்கும் சிவப்பு, மஞ்சள் நிறங்களால் அமைக் கப்பட்டிருத்தல் வேண்டும். வெள்ளை நிற விரித்தல் பாவிப்பது தவிர்க்கப்படல் வேண் டும்.

❖ இவ் அலங்காரங்கள் தனித்துவமாக, மாவீரர்களின் தற்கொடை தியாகம், அமைப்பு, இலட்சியங்களை மக்கள் மனங்களில் பதிந்து எமது போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டு இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

**கடைப் பிடிக்க வேண்டிய சில நடைமுறை கள், ஆரம்ப நிகழ்வுகள்!**

1 பொதுச்சுடர்
2 தேசியக்கொடி ஏற்றல்
3 ஈகைசுடர்
4 மலர்வணக்கம்
5 அகவணக்கம்
6 உறுதியுரை
7 நினைவுரை
8 எமது மாவீரர் நிகழ்வுகள் அனைத் திலும் ஈகைசுடர் ஏற்றுதல் கட்டாயமாகும், மங்கள விளக்கு ஏற்றக் கூடாது, அக வணக்கத்திற்கும் நேரம் குறிக்கக் கூடாது.

**மாவீரர் நாள் கையேடு**

**தவிர்க்க வேண்டியவை!**

அஞ்சலி, மவுன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலிஉரை, அஞ் சலிக் கூட்டம், அகவணக்கம் -ஒருநிமிடம் இரு நிமிடம் என குறித்து குறுதல் போன் றவை தவிர்க்கப்பட வேண்டும்.

**சேர்க்கப்பட வேண்டியவை!**

வீரவணக்கம், அகவணக்கம், மலர் வணக்கம், ஈகைசுடர், வீரவணக்க உரை, வீரச்சாவு, வீரச்சாவுக் கூட்டம், வித்துடல் விதைப்பு. போன்ற சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**முக்கிய விடையம்!**

மாலை 6.00, மணிக்குப் பின்னர் எந்த நிகழ்வுகளிலும் தேசியக் கொடி ஏற்றுதல் தவிர்க்கபடல் வேண்டும், மாலை 6.00 மணிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படட நிகழ்வு இரவு நேரத்திலும் தொடர்ந்து நடைபெறுமானால் நிகழ்வு நிறைவில் தேசியக் கொடி இறக்குதல் வேண்டும், இரவு நேரத்தில் தேசியக் கொடிக்கு படும் வகையில் வெளிச்சம் பாய்ச்சுதல் வேண் டும்.

எக் காரணம் கொண்டும் தேசியக் கொடி கம்பத்துடன் மடித்துக் கட்டுதல் கூடாது, தேசியக் கொடியை மடித்து பீடத்திற்கு அருகில் ஒரு மேசையின் மேல் புனிதமான தட்டில் வைக்க வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடகட்டும்!**

எமது தாயகமாம், தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில், மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும், மாவீரர் நாள் என்பது தமிழ் ஈழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக் காகவும் உழைத்து, உயிரை தற்கொடை யாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகி விட்டவர்களினதும், எமது மூச்சுடன் ஒன் றாகக் கலந்து விட்டவர்களுடைய புனித மான நினைவு நாளாகும்.

உங்கள் உயிரினும் மேலான குழந்தை களும், எமது சக போராளிக்களுமான இம் மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால், என்றுமே மறைக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததும் ஆகும். காலம், கலாமாக நினைவு கூர்ந்து, என்றும் போற்றப்பட வேண்டிய வீரம் மிகு புனித நாளாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள், எம்மை வழிநடத்தும் உந்து சக்தியாக என்றும் எம் முடன் கூடவே இருக்கும், மாவீரர்களின் இத்தகைய நினைவு கூரல் என்பது ஒரு நிகழ்வாக மட்டும் இருந்து விடாது, எமது மக்களின் வரலாற்று சுவடியகவும், பண் பாட்டுக்கு உரியவையாகவும் வளர்ந்து நிற்கும்.

எமக்குரிய இந்த உயரிய நிகழ்வை தத்து வார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும் நிலை நாட்டுவதற்காக எமது மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங் கிணைந்த பங்களிப்புக்களின் ஊடாக, எழுச்சி கொள்ளும் வகையில் முன்னெடுக் கப்பட வேண்டும் எனவும் வேண்டி நிற்கிறோம்.

புலிகளின் தாகம் தமிழ்ழீழ தாயகம்

நன்றி!

பணி முதல்வர்,
தமிழீழ மாவீரர் பணிமனை,
அரசியல்துறை,
தமிழீழ விடுதலை புலிகள்,
தமிழீழம்.




தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன் லெப்டினன்ட் செ. சத்தியநாதன் (சங்கர், சுரேஷ்) வீரச்சாவடைந்த ஈராண்டு நிறைவுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துவதைச் சித்தரிக்கும் சுவரொட்டி.

# இறந்தவர்களைப் புதைத்துவிட்டு மீண்டும் எழுக!

**பாலஸ்தீனக் கவிஞர்: தௌபீக் சியாட் – ஆங்கிலம் வழி தமிழில்: மயன்**

இறந்தவர்களைப் புதைத்துவிட்டு மீண்டும்
எழுக!

கோப்பையின் அடிமட்டம் வரை,
எமக்கேயான சிவப்புநிற கசப்புப் பானத்தை
நாம்தான் முழுமையாகப் பருகவேண்டும்.

சரித்திரமே பிசகிப் போய்விட்ட இவ்
வேளையில்;
நாம்வதைபடப் போகிறோம்
---ஒருபெண்செம்மறி ஆடுபோல்
கொலைபடப் போகிறோம்.

ஒரு வாத்துக்கூட்டம் பறப்பதுபோல்
நாம் இங்கிரந்து ஓடிவிடத்தான் வேண்டும்...

இந்த வெளியேறல், தரும் அவமானம்,
எமது எலும்பிடை ஊளைக்கூடத்தொடலாம்.
இதனைப் பொருட்படுத்தாதீர்கள!
கோபங் கொண்ட அந்தநெடுங்கடலில்...
---எமது சடலங்கள் ஒரு பாலமாக அமையும்
நாம் அக் கடலின் கரைகளை
புறக்கணித்ததும் இல்லை,

அவை ஒருபோதும் எம்மை
கைவிட்டதும் இல்லை.

ஓ! பொன்னைப்போல் மின்னும்
எனது அன்னை பூமியே
சிவப்புக் கற்களும் யானைத் தந்தமும்
உடைய நாடே
உன்னில் நாம் கொண்ட பிரியம்
காதலைவிட மேலானது.
அது விலைமதிப்பற்றதும் கூட

இதனால், இறந்தவர்களைப் புதைத்துவிட்டு
மீண்டும் எழுக
நாளை, எம்மைவிட்டுப் பறந்துபோய்விடும்.
ஆனால் நாம் அதனை நழுவிப்போய்விட
விட்டுவிட முடியாது.
நாம் நிரந்தரமாகவே
ஓடிப்பொய்விட்டவர்களோ
அல்லது
தொலைந்து போய் விட்டவர்களோ அல்ல..
ஆனால் மிண்டும் ஒருமுறை...
நாம் உருக்கிவார்க்கப்பட்டு விட்டோம்.
புதியவர்களாகவே...








# தமிழினத்தின் மாசற்ற தலைவனுக்கு அகவை 67



தமிழ் எங்கள்
உயிர்
அவ்வுயிரே



# பிரபாகரன்

# தனிச் சிங்கள தேசமாகிறதா இலங்கை?

தீபச்செல்வன்




இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்ச அண்மையில், “ஒரே நாடு ஒரே சட்டம” எனும் சட்டத்தை இயற்றுவதற்கான செயற்குழுவை அறிவித்திருந்தார். இந்தக் குழுவில் ஒருவர்கூட தமிழர்கள் இல்லை என்று சில சிங்கள தரப்பினர்கூட கவலை வெளியிட்டிருந்தார்கள். இலங்கைத் தீவு இரண்டாக இருக்கிறதா அல்லது இலங்கைத் தீவில் இரண்டு சட்டங்கள் நடைமுறையில் இருக்கிறதா என்ற கேள்விகள் ஒருபுறம் எழுகின்றன. அத்துடன், இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான செயற்குழுவில் தமிழர்கள் இல்லை என்பது ஒரு பிரச்சினையல்ல என்பதும் இங்கே குறிப்பிட்டாக வேண்டியது. ஏனென்றால், தனிச் சிங்கள நாடு ஆக்குவதற்கான சட்ட மூலத்தை இயற்றுவதற்கு, தமிழர்கள் எவரும் தேவையில்லை என்று அதிபர் கோத்தபய நினைத்திருக்கலாம்.




இலங்கைத் தீவில் 12 வருடங்களுக்கு முன்னர் 2 ஆட்சிகள் இருந்தன. வடக்கு கிழக்கு புலிகளின் ஆட்சியில் இருக்க, தெற்கு இலங்கை அரசின் ஆட்சியில் இருந்தது. வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் காவல் துறை, பொதுநிர்வாகத் துறை, நிதித் துறை, வங்கி, பொருளாதாரத் துறை என்று ஒரு நாட்டுக்கான கட்டமைப்புக்கள் பலவற்றை உருவாக்கியிருந்தனர். 2009-ல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையுடன் விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு அகற்றப்பட்டது. அன்றுதான், இலங்கை ஒரு நாடு ஆகியதாக முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். இரண்டாகப் பிளவுபட்ட நாட்டை தாம் ஒன்றாக மாற்றியதாகவும் அவர் அடிக்கடி மகிழ்ந்து கொண்டார்.

அதற்குப் பிந்தைய காலத்தில் நடந்த தேர்தல்களிலும், இலங்கை அரசு நடத்திய ஆணைக் குழுக்களின் முன்னாலும் தமிழர்கள் தாம் தனித்த தேசத்தவர்கள் என்பதை வெளிப்படுத்தினார்கள். தேர்தலில் சிங்கள அரசுக்கு எதிராக அளிக்கப்படும் வாக்குகள் வழியாக இலங்கை வரைபடத்தில் வடக்கு கிழக்கு மக்கள் வேறாக நிறம் தீட்டிக் கொண்டனர். தமிழர்களின் முடிவு ராஜபக்ச தரப்பினருக்கும் ஆளும்கட்சிக்கும் எதிரான ஒற்றுமைப்பட்ட நிலைப்பாடாகத் தென்பட்டது. 2015-ல், அதிபர் தேர்தலில் ஈழம் தான் தன்னைத் தோற்கடித்தது என்றார் மகிந்த ராஜபக்ச. விடுதலைப் புலிகள் சிதைக்கப்பட்ட பிறகும்கூட, வடக்கு கிழக்கு தனித் தேசமாகவே தன் முடிவுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளை அழித்துவிட்டால், தமிழர்களின் தனிநாட்டுக் கனவை அழித்துவிடலாம் என்று இலங்கை அரசு நம்பியது. விடுதலைப் புலிகளை அழித்துவிடுவதால் தமிழர்களின் அபிலாஷையை அழித்துவிட முடியாது என்பதை, தமிழ் மக்கள் உணர்த்திவந்திருக்கிறார்கள். மாறாக, தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வை இலங்கை அரசு வழங்க வேண்டும். அதைச் செய்யாமல் தொடர்ந்து தமிழர்களை ஒடுக்கி அழிக்கும் வேலையில் ஈடுபட்டுவருகின்ற இலங்கை அரசு, இப்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறது. அதன் வாயிலாக இலங்கைத் தீவு இரண்டுபட்ட நிலையில் இருப்பதைத்தான் ஒப்புக்கொள்வதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் 33-வது உறுப்புரையின் அடிப்படையில், அதிபர் அதிகாரத்தின்கீழ் இந்தச் செயற்குழு உருவாக்கப்பட்டுள்ளது. 9 சிங்களவர்களும், சிங்களப் பேரினவாதிகளைவிடவும் பேரினவாதக் கொள்கைகளுக்குத் துணைபோகக் கூடிய முஸ்லிம்கள் 4 பேரும் இதில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில், தலைமைப் பொறுப்பை கலாகொட அத்த ஞானசார தேரருக்கு வழங்கப்பட்டுள்ளமைதான் நகைச்சுவையான அதே நேரம் பயங்கரமான தீர்மானமாகும். “ஒரே நாடு ஒரே சட்டம்“ என்ற விடயதானத்தை ஆராய்ந்து, அதற்கான சட்டங்களை மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளை முன்வைப்பதே இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும்.

அத்துடன் இலங்கைச் சட்டம் என்பது, அடிப்படையில் தமிழர்களுக்கு எதிராகவும் சிங்களவர்களுக்குச் சார்பாகவும்தான் இருக்கிறது. வடக்கு கிழக்கில் ஒரு சட்டமும் தெற்கில் ஒரு சட்டமும்தான் நடைமுறையில் இருக்கிறது. இலங்கையில் சைவம் மற்றும் இஸ்லாம் முதலிய சிறுபான்மை மதங்களுக்கு எதிராகக் கடும் குழப்பங்களை ஏற்படுத்தியவர் ஞானசார தேரர். சிறுபான்மை மக்களுக்கு எதிரான பேரினவாத நஞ்சைக்கக்கும் இவர், மகிந்த ராஜபக்ச காலத்தில்தான் ‘பொதுபலசேனா’ என்ற அமைப்பைத் தொடங்கினார். இது பவுத்த சிங்கள நாடு என்றும் தமிழர்கள் தமிழ்நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும் கூறுகின்ற இவரை அடிப்படையாகக் கொண்டுதான், ஒரே




நாடு ஒரே சட்டம் உருவாக்கப்படுகிறது என்றால், அது எவ்வளவு விசித்திரமானது?

அத்துடன் 2017-ல் இலங்கை நீதிமன்றம், ஞானசார தேரரைக் குற்றவாளியாக அறிவித்து, சிறைத் தண்டனை வழங்கியது. பிறகு, 2019-ல் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவருக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார். இந்த நிலையில், ஒரு குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்டு சிறையிருந்தவரைக் கொண்டு சட்டம் இயன்றுகின்ற நாடு என்ற விசித்திர அந்தஸ்தை இலங்கை பெறுகிறது. இலங்கையில் போராளிகள் பயங்கரவாதிகளாக தெரிவார்கள். இனப்படுகொலை செய்தவர்கள் நாட்டின் தலைவர்களாவார்கள்.

சுதந்திரத்துக்குப் பிந்தைய வரலாறு முழுவதும் இலங்கை யை மாறி மாறி ஆளுகின்ற கட்சிகள், தமிழர்களை பலி யாக்கியே தங்கள் அரசியலைச் செய்துவந்திருக்கிறார்கள்.

இன்றைய ஒரே நாடு ஒரே சட்டம், பண்டார நாயக்கா கொண்டு வந்த தனிச்சிங்களச் சட்டத்தைத்தான் நினைவு படுத்துகிறது. 1958-ம் ஆண்டில், தனிச் சிங்கள சட்டத்தை இயற்றினார் பண்டார நாயக்கா. இந்தக் கொடுமை நடப் பதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையில், இலங்கையின் சுதந்திரத்துக்காக தமிழர்களும் உழைத் தார்கள். பிரித்தானிய சிறையிலிருந்து பண்டார நாயக் காவை மீட்டுவந்தவர் சேர் பொன் இராமநாதன். இலங் கைத் தீவு இரண்டாகப் பிரிக்கக்கூடாது என்ற நிலைப்பாடு எடுத்த தமிழ் தலைவர்களுக்குப் பரிசாக(!) தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது, தனிச் சிங்களத்தைப் பிரகடனப்படுத்தும் சிங்கள தேசத்திடமிருந்து தமிழர் தேசத்தை விடுவித்துப் பிரிந்து செல்வதே வழி என்றும் அத்தகைய தீர்மானத்துக்கு தமிழர்களைத் தள்ளியது பண்டாரநாயக்கா என்றும் அன்றைய சிங்களத் தலைவர் களே குரலிட்டனர்.

இலங்கையின் பொருளாதார நிலைமை படுமோசமாகிக் கொண்டிருக்கிறது. நாள்தோறும் பொருட்களின் தட்டுப் பாடு அதிகரிக்கிறது. வடகொரியா போல வாழைப் பழத்தை மூவாயிரம் ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலை ஏற்படுமா என்று மக்கள் அஞ்சத் தொடங்கியுள்ளனர். சோமாலியா போல பசியில் மக்கள் மரணிக்க வேண்டி வந்துவிடுமா என்று சிங்கள மக்களே பீதி கொள்ளத் தொடங்கியுள்ளார் கள். கோத்தபய ராஜபக்சவுக்கு எதிராக அவரைச் சூழ்ந் துள்ள சிங்களப் பேரினவாதிகளே குரல் எழுப்பத் தொடங் கியுள்ளனர்.

இப்படியான சூழலில், தமிழர்களுக்கு எதிரான சட்டத்தை இயற்றி இனவாத அலையை ஏற்படுத்தி அதை வைத்து அதிபர் கோத்தபய அரசியல் செய்ய முயல்கிறார் என்றே தமிழர்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், சுதந்திரத்துக்குப் பிந்தைய வரலாறு முழுவதும் இலங்கையை மாறி மாறி ஆளுகின்ற கட்சிகள் தமிழர்களை பலியாக்கியே தங்கள் அரசியலைச் செய்துவந்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமை மற்றும் தமிழர்களை இனப்படுகொலை செய்தமை முதலிய அடிப்படைகளை வைத்து அரசியல் செய்யும் ராஜபக்ச தரப்பினர், தமிழர்களுக்கு எதிராக ஒரே நாடு ஒரே சட்டம் என்ற இன்னொரு யுத்தத்தைத் தொடங்குகிறார்களா என்பதே, ஈழத் தமிழர்களின் இன்றைய அச்சமாகும்!




# “ஒப்பறேசன் தவளைப் பாய்ச்சல்” நவம்பர் 11, 1993




படைபலத்தை வைத்துப் பேசப்பட்ட அரசியல் பேரத்திற்குக் கொடுக்கப்பட் அடி!

“11ம் திகதி ஒவ்வொரு புலிவீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன”

பூநகரி வெற்றியுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட பலத்தை தலைவர் பிரபாகரன் இவ்விதம் வெளிப்படுத்தினார்.

ஆனையிறவுச் சமரின் பின் சர்வதேசத்தின் கவனத்தைப் பெருமளவு ஈர்ந்த ஒரு செருக்களமாக, பூநகரி கூட்டுப் படைத்தளம் மீதான தாக்குதல் அமைந்துவிட்டது. முன்னையதைப் போன்றே இதுவும் புலிகள் இயக்கத்தின் இராணுவத் திறனை உலகிற்குப் புலப்படுத்தியுள்ளது. ஆனாலும் பூநகரியில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிழப்பு, சிங்களப் பேரினவாதத்தின் போர்வெறியை முனை மழுங்கச் செய்துவிட்டது.

பலமான கடற்படைத் தளத்தையும் சக்திவாய்ந்த கவச வாகனப் படைப்பிரிவையும் கொண்டபடி, புலிகள் தாக்கப் போகின்றார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த 2000 ற்கும் மேற்பட்ட சிங்களப் படைகளையும், 16 கி.மீ. நீளமும் 25 கி.மீ. சுற்றளவையும் கொண்ட பூநகரி கூட்டுத் தளத்தை அழித்தொழிப்பதென்பது, ஒரு இமாலய சாதனைதான்.

புலிவீரர்கள் அதனைச் சாதித்து பெருமளவு வெற்றியைப் பெற்றும்விட்டனர். பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் புலிகள பெற்ற பெருவெற்றியில் ஒன்றாக, அங்கிருந்து கைப்பற்றபப்ட்ட பெருமளவிலான சக்திவாய்ந்த ஆயதங்களைக் குறிப்பிடலாம். இவை சாதாரண ஆயுதங்கள் அல்ல; போரின் போக்கை புலிவீரர்களுக்குச் சாதகமாகத் திசை திருப்பப்போகும் ஆயுதங்கள், தாங்கி, 120 மி.மீ. சுடு கலன்கள், நீருந்து விசைப்படகுகள், 50 கலிபர் துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான கனரக ஆயுதங்களும் பெருந் தொகையிலான வெடிமருந்துகளும், எமது விடுதலைப் போராட்டத்திற்குப் புத்துணர்ச்சியையும் புதிய பலத்தையும் ஊட்டியுள்ளன. பூநகரியில் சிங்களப் படைகளுக்கு ஏற்பட்ட உயிரிழப்பும் பிரதானமானது.

அதேவேளை, பெரிய நாடுகளுக்கிடையில் பெருமெடுப்பில் நடைபெறும் போர்களைத்தவிர, ஒரே தாக்குதலில் 1000 படையினர் கொல்லப்படுவதென்பது, இதுதான் முதற்சம்பவமாக இருக்கும். இந்தப் பெருநாசத்தால் சிங்கள இனமே சோகத்தில் ஆழ்ந்துபோயுள்ளது. “எல்லா இடங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கின்றன” (துக்கத்தை வெளிப்படுத்த வெள்ளைக் கொடிகளையே சிங்கள மக்கள் பயன்படுத்துவர்) என்று, ஓர் ஆங்கிலப் பத்திரிகை சிங்கள தேசத்தின் இழப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

குடாநாட்டின் வாசலில் இருக்கும் பூநகரிப் பகுதியானது இராணுவ – அரசியல் – பூகோளரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தக் கேந்திர வலயத்தைக் கைப்பற்றுவதன்மூலம், இரண்டாவது ஈழப் போரிற்கென்று சிங்கள அரசு தயாரித்த புதிய போர்முறைத் திட்டத்தை அமுல்படுத்த, சிங்களப் படைத்துறை முனைந்தது. அதன்படி பூநகரியில் ஒரு கூட்டுப் படைத்தளத்தை அது அமைத்துக்கொண்டது.

சிங்கள ஆளும் வர்க்கம் வரைந்த புதிய போர்முறைத் திட்டத்தின் நோக்கம் யாழ். குடாநாட்டைப் பூரணமாக முற்றுகையிடுவதுதான். இந்த இராணுவ முற்றுகைமூலம் பொது மக்களின் போராட்டம் உறுதியை உடைப்பதும், புலிகள் – மக்கள் உறவைச் சிதைத்து புலிகளைத் தனிமைப படுத்துவதும், இறுதியில் குடாநாட்டைக் கைப்பற்றி புலிகளை அழித்துப் போராட்டத்தை நசுக்கிவிடுவதும்தான் சிங்கள அரசின் எண்ணம்.

ஆனால், சிங்கள அரசின் முற்றுகைத் திட்டத்தில் கடற்புலிகள் ஒரு ஒட்டையை ஏற்படுத்திவிட்டார்கள். கடற்புலிகளின் எழுச்சியும் அவர்களின் பலத்துடன் நடந்த நீரேரிப் படகுப் பயணமும், சிங்கள அரசின் புதிய போர்முறைத் திட்டத்திற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

இந்த நிலையில்தான் “பாதை திறப்பு” என்ற போர்வையில் இராஜதந்திரப் பொறியொன்றை அமைத்து, தனது போர் முறைத் திட்டத்தில் ஏற்பட்ட உடைவைச் சீராக்க சிங்கள அரசு முயன்றது.

குடாநாடுமீதான இராணுவ முற்றுகையால் எழுந்த பொது மக்களின் கஷ்டங்களை விவாதப் பொருளாக்கி, புலிகள் இயக்கத்திற்கெதிராகச் சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் அழுத்தங்களைக் கொடுத்து, புலிகளின் தலைமையைப் பணியச் செய்யும் யுக்தியை சிங்கள அரசு கடைப்பிடித்தது.

பாதை திறப்பதற்கு புலிகளைச் சம்மதிக்கச் செய்ததால் அதன்பின் பொதுமக்களின் நன்மைக்கென்று கூறி அந்தப் பகுதியை அமைதிவலயமாக்கி, பெரும் இராணுவ நன்மைகளைப் பெற்றுவிடலாம் என்று சிங்கள அரசு நினைத்திருந்தது.

பூநகரியை ‘யுத்த சூன்யப் பகுதி’ என்று புலிகளின் சம்மதத்துடன் பிரகடனம் செய்தால், அங்குள்ள படையினரிலிருந்து பெரும்பாலானோரை எடுத்து அவர்களையும் பயன்படுத்திக் குடாநாடுமீது பெரும் போர் ஒன்று தொடுக்கலாம் என்றும், அதற்கு முன் துரோகக் குழுக்களை பூநகரிக்கு அழைத்து அவர்களின் துணையுடன் உளவாளிகளை உருவாக்கி, அவர்களைக்கொண்டு பெரும் நாசவேலைகளைச் செய்வித்துக் குழப்ப நிலையை உருவாக்கிவிட்டுப் போரைத் தொடுக்கலாம் என்றும் சிங்கள அரசு திட்டமிட்டது.

தமிழீழ மக்கள்மீது கரிசனை கொள்வதுபோல சின்னஞ்சிறு சலுகைகளைக் கொடுத்து, அவர்களின் பென்னம்பெரு இலட்சியங்களை விழுங்கி ஏப்பம்விடுவது, சிங்களப் பேரினவாதத்தின் வழமையான வேலை ஆனால் விழிப்புணர்வுடன் செயற்படும் புலிகளிடம் அது எடுபடாமல் போய் விடுகின்றது.

பாதைதிறப்பு விவகாரத்தில் புலிகளின் விட்டுக்கொடாப் போக்கிற்குக் காரணம் கிளாலிக் கடல் நீரேரியில் கடற்புலிகள் வைத்திருந்த அசைவியக்க சக்திதான் (Mobility) என்று எண்ணிய சிங்களப் படைத்துறைத் தலைமை, கிளாலியைக் கைப்பற்றுவதன்மூலம் கடற்புலிகளின் அசைவியக்கத்தை நிறுத்தி, புலிகள் இயக்கத்தைத் தனது காலடியில் வீழ்த்த முயற்சி செய்தது.

ஆனால், சிங்களப் படைகள் மேற்கொண்ட அந்த இராணுவ நடவடிக்கை (யாழ்தேவி) ‘ஆப்பிழுத்த குரங்கின் கதைபோலவே’ தோல்விகண்டுவிட்டது.

சிங்கள அரசின் இராணுவ அழுத்தங்களுக்கு அடிபணித்து அல்லது தனது இராணுவ நன்மைகளுக்காக சிங்களப் பேரினவாதம் அமைத்த இராஜதந்திர சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்கி, பாதை திறப்பிற்குப் புலிகள் இயக்கம் சம்மதித் திருந்தால், 1994ம் ஆண்டின் முற்பகுதியிலே, தான் வரைந்த போர்முறைத் திட்டத்தில் சிங்கள அரசு ஒரு பாரிய வெற்றியைப் பெற்றிருக்கும் அதாவது குடாநாட்டைப் பெரும் நாசத்துக்குள்ளாக்கியிருக்கும். இதை மனதில் வைத்தபடி தான், 1994 மார்ச் மாதத்திற்கு முன் புலிகளை அழித்து விடுவோம் என்று பூநகரித் தாக்குதலுடன் ‘முன்னாள் லெப். ஜெனரலாகி விட்ட’ சிசில் கூறியிருந்தார்.

ஆனால் ஆக்கிரமிப்பாளர்களின் சவால்களுக்கே சவால் விடும் தலைவரின் தனிப்பண்பும், புலிவீரர்களின் போர்த்திறனில் அவர் வைத்திருந்த பெரு நம்பிக்கையும் ஒன்று சேர்ந்து, “தவளை இராணுவ நடவடிக்கை” என்ற வடிவம் எடுத்தது. இது சிங்களப் படைத்துறை செயற்படுத் திவந்த போர்முறைத் திட்டத்தின் முதுகெலும்பையே முறித்து விட்டது.

பூநகரி கூட்டுத்தளத்தின் படைபலத்தைவைத்து ஒரு அரசியல் ரூபத்தின்மூலம் புலிகளுக்கெதிராகக் காய்நகர்த்த முயன்ற சிங்கள அரசு, இறுதியில் தோற்றுவிட்டது.

சிங்கள அரசின் சூழ்ச்சிகர அரசியல் காய்நகர்த்தலுக் கேற்றாற்போல், தலைவர் பிரபாகரன் அவர்கள் புலிகளின் தரப்பிலும் காய்களை நகர்த்தச் செய்தார். அதேவேளை கூட்டுத்தளத்தின்மீது புலி வீரர்களை நகர்த்தி, படைபலத்தை வைத்து சிங்கள அரசு செய்த அரசியல் பேரத்தைப் படைபலத்தைப் பயன்படுத்தியே வெற்றிகொள்ள முயன்றார் இறுதியில் வெற்றியும் பெற்றுவிட்டார். இந்த வெற்றி விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தையும் வழங்கிவிட்டது.

பூநகரி தாக்குதலில் புலிகள் இயக்கம் பெற்ற வெற்றி காரணமாகவும் அங்கிருந்து அவர்கள் கைப்பற்றிச்சென்ற ஆயுத தளபாடங்களின் ஆற்றல்கள் காரணமாகவும், வாடா தமிழீழத்திலுள்ள சிங்களப் படைமுகாம்கள் அனைத்துமே “அடுத்த தாக்குதல் தம்மீதுதான்” என்று அரண்டபடியுள்ளன.

சிங்கள தேசத்தின் பத்திரிகைகளும் அடுத்தது முல்லைத் தீவா..? மண்டைதீவா என்று ஊகித்து அஞ்சுமளவுக்கு, சிங்கள தேசத்தில் ஒரு பீதிநிலை காணப்படுகின்றது.

இந்தப் பீதிக்குக் காரணம், சிங்களப் படைகள்மீதான அவநம்பிக்கையேதான். இவ்விதம், தமது படையினர்மீதே சிங்கள மக்கள் பெரியளவில் அவநம்பிக்கைகொண்டது இதுதான் முதற்தடவை என்று கூறலாம்.

இந்த அவநம்பிக்கை நாளடைவில் இராணுவரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளையும் குழப்பங்களையும் சிங்கள அரசிக்குக் கொடுக்கும்.

இது ஒருபுறமிருக்க, புலோப்பளைச் சமரிலும் பூநகரிப் பெருந் தாக்குதலிலும் சிங்களப் படை, சக்திவாய்ந்த “T 55” ரக ராங்கிகளில் நான்கை இழந்துவிட்டது அத்துடன் சில கவசவாகனங்களையும் இழந்துள்ளது சிங்களப் படையின் கவசவாகனப் பிரிவு சந்தித்த இந்தப் பேரிழப்பு, தரைப் படையின் நகர்த்திறனைக் கணிசமாகப் பாதித்துவிட்டது எனலாம். இதேவேளை, நாகதேவன்த்துறையிலிருந்து கடற்புலிகள் கைப்பற்றிய நீருந்து விடைப்படகுகள், கடற்புலிகளின் நகர்த்திறனை அதிகரிக்கச் செய்துள்ளன.

பூநகரியில் கைப்பற்றிய படகில்

இவ்விதம் பூநகரிப் பெருந் தாக்குதலுடன் சிங்களப் படைகள், தரையிலும் கடலிலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன.

இந்த இராணுவ நெருக்கடிகளுக்கு சிங்கள அரசு எப்படி முகங்கொடுக்கப் போகிறது…?

இந்த உண்மை நிலையைப் புரிந்துகொண்ட புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதற்காக, எமது இளம் பரம்பரை எவ்வாறு செயற்படப் போகின்றது என்பவற்றில்தான், அடுத்த திருப்புமுனை தங்கியுள்ளது.

விடுதலைப்புலிகள் (மார்கழி – தை 1994)




# COP 26 காலநிலை மாநாடு: 'பூமியின் வெப்பநிலை உயர்வு 2.4 டிகிரி செல்சியசை நோக்கிச் செல்கிறது'

ஜார்ஜினா ரன்னர்ட் - 10 நவம்பர் 2021



**காலநிலை மாற்றம்**

காலநிலை மாநாட்டில் பூமியின் வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு வரும்போதும், புவியின் வெப்ப நிலை உயர்வைக் கட்டுப்படுத்தும் இலக்குக்கு அருகில் கூட உலகம் இல்லை என புதிய பகுப்பாய்வு ஒன்று கூறுகிறது.

பூமியின் வெப்பநிலை உயர்வு, தொழிற்புரட்சி காலத்துக்கு முந்தைய சராசரி வெப்பநிலையைவிட கூடுதலாக 2.4 டிகிரி செல்சியஸை நோக்கிச் செல்கிறது அது உலக நாடுகள் நிர்ணயித்த 1.5 டிகிரி செல்சியஸை விட மிக அதிகமென அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

COP26 காலநிலை மாநாட்டில் விவாதிக்கப்படும் பேசுபொருட்களின் நம்பகத்தன்மை, அவற்றை அமலாக்குதல், வாக்குறுதிகளை நிறைவேற்றுவது ஆகிய விவகாரங்களில் இடைவெளி உள்ளது என க்ளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர் என்கிற அமைப்பு கூறுகிறது. அதாவது சொல்லுக்கும் செயலுக்கும் பெரிய இடைவெளி உள்ளது என்கிறது அந்த அமைப்பு.

காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த கிளாஸ்கோவில் நடக்கும் COP26 உச்சிமாநாடு முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் நடந்த ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை கூட்டத்தில் காடழிப்பைக் கட்டுப்படுத்துதல் உட்பட பல பெரிய அறிவிப்புகள் வெளியாயின, அம்மாநாட்டில் காணப்படும் நேர்மறை எண்ணங்களுக்கு எதிராக எதார்த்த கணிப்புகள் உள்ளன.

காலநிலை மாநாடு இந்த வாரத்தோடு நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்புரட்சிக்குப் முந்தைய காலத்தை விட 2.0 டிகிரி செல்சியஸ் கூடுதலாக வெப்பமடைந்தால், 100 கோடி பேர் கடும் வெப்பத்தாலும், ஈரப்பதம் சார் பிரச்னைகளாலும் பாதிக்கப்படுவர் என எச்சரித்துள்ளது பிரிட்டனின் வானிலை அலுவலகம்.

க்ளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர் அமைப்பு, அரசாங்கங்கள் காலநிலை மாநாட்டுக்கு முன்பும், அம்மாநாட்டிலும் கொடுத்த வாக்குறுதிகளை பார்வையிட்டது. 2030ம் ஆண்டுக்குள் பூமியின் வெப்பநிலையை உயர்த்தும் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு இரு மடங்காக அதிகரிக்கும் என அவ்வமைப்பு முடிவுக்கு வந்துள்ளது.

புவியின் வெப்பத்தை 1.5 டிகிரி செல்சியசுக்குள் கட்டுப்படுத்தினால், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு மோசமான விளைவுகளை தவிர்க்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

2015ம் ஆண்டு பாரிஸில் நடந்த காலநிலை மாநாட்டில், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அபாயங்களைத் தடுக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதில் பூமியின் வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்துவதும் அடக்கம்.

**காலநிலை மாற்றத்தினால் அதிகரிக்கும் வெப்ப நிலை வரைபடம்**



Source: Climate Action Tracker BBC

உலக நாடுகளின் வாக்குறுதிகளை விடுத்து, கொள்கைகளை ஆராய்ந்தால், 2100ம் ஆண்டுக்குள் புவியின் வெப்பநிலை உயர்வு 2.7 டிகிரி செல்சியஸாக அதிகரிக்கும் என மதிப்பிட்டுள்ளது க்ளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர். இவ்வமைப்பை பாட்ஸ்டம் இன்ஸ்டிட்டியூட் ஃபார் கிளைமேட் இம்பேக்ட் ரிசர்ச் என்கிற ஜெர்மனியைச் சேர்ந்த நிறுவனம் உட்பட பல அமைப்புகளும் ஆதரிக்கின்றன.



**காலநிலை மாற்றத்தினால் உருகும் பனிப் பாறைகள்**

இந்தப் புதிய கணக்கீடு புவி மீது இலக்கு வைத்து வரும் எரிகல் போன்றது. இது ஒரு பேரழிவு தரும் அறிக்கை, கிளாஸ்கோவில் கூடியுள்ள அரசாங்கங்கள் உடனடியாக தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உலகின் பொதுவான எதிர்காலத்தைக் காப்பாற்றும் ஒப்பந்தத்தில் சமரசமின்றி தீவிரமாக செயல்பட வேண்டும் என கிரீன்பீஸ் இன்டர்நேஷனல் அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஜெனிபர் மார்கன் கூறினார்.

2015ம் ஆண்டில் பாரிஸ் காலநிலை உச்சிமாநாட்டிலிருந்து உலகின் பார்வை சற்றே மேம்பட்டுள்ளது, கிளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர் அமைப்பு அப்போது அரசின் கொள்கைகளை ஆராய்ந்து, புவி 3.6 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பமடையச் செய்யும் என்றே மதிப்பிட்டுள்ளது.

2030-ம் ஆண்டுக்குள் பசுமையில்ல வாயு உமிழ்வைக் குறைப்பதில் பெரிய முன்னேற்றம் இல்லாததற்கு அரசாங்கங்கள் வேகம் காட்டாததை க்ளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர் குற்றம்சாட்டுகிறது.

கார்பன் உமிழ்வு அளவில் நிகர பூஜ்ஜிய நிலையை அடைய அமெரிக்கா மற்றும் சீனாவின் புதிய வாக்குறுதிகள், வெப்பநிலை உயர்வு குறித்த தனது மதிப்பீடுகளை சற்று மேம்படுத்தியுள்ளன என்று கூறுகிறது அவ்வமைப்பு. ஆனால் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த பெரும்பாலான அரசாங்கங்கள் தீட்டியுள்ள திட் டங்களின் தரம் மிகவும் குறைவாக உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

நிகர பூஜ்ஜிய நிலையை அடைவதென்பது பசுமை இல்ல வாயு உமிழ்வை முடிந்தவரை குறைப்பது, பின்னர் மீத உமிழ்வுகளை சமன் செய்வது, உதாரணமாக மரங்களை நடுவதைக் கூறலாம். இது வளிமண்டலத்திலுள்ள கார்பன் டை ஆக்ஸைடை நீக்குகிறது.

உலக அளவில் 140 க்கும் மேற்பட்ட நாடுகள் நிகர பூஜ்ஜிய நிலையை அடைவதாக உறுதியளித்துள்ளன, இது உலகின் மொத்த உமிழ்வுகளில் 90 சதவீதத்தை உள்ளடக்கியது.

ஆனால் ஒரு சிலரிடம் மட்டுமே அவ்விலக்கை அடைவதற்கான திட்டங்கள் இருப்பதாக க்ளைமேட் ஆக்‌ஷன் டிராக்கர் கூறுகிறது. அவ்வமைப்பு 40 நாடுகளின் கொள்கைகளை ஆய்வு செய்தது. அதில் சிறு எண்ணிக்கையிலான கொள்கைகளே ஏற்றுக்கொள்ளத்தக்கது என மதிப்பிட்டுள்ளது.

காலநிலை மாற்றம் அது தொடர்பான வாக்குறுதிகள் மற்றும் கணிப்புகளுக்கு மத்தியிலான இடைவெளியை அதிகரிக்கும் முக்கிய விஷயமாக நிலக்கரி மற்றும் எரிவாயு உற்பத்தி இருக்கின்றன என அவ்வமைப்பு கூறியுள்ளது.

நன்றி: BBC Tamil


With Best Wishes From
KENNEDY LAW OFFICE
உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....
கெனடி சட்ட அலுவலகம்
☑ REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
☑ BUSINESS LAW வணிகச் சட்டம்
☑ CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
☑ FAMILY LAW குடும்பச் சட்டம்
☑ IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
☑ ODSP APPEALS
☑ SMALL CLAIMS
☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
☑ NOTARIZING & COMMISSIONING
W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com
2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
★ Massage Therapy
★ Physiotherapy
★ Orthopaedic
★ Acupuncture
★ Chiropractic
★ Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


சங்கத்தமிழ்
ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!
உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?
விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்
437.345.4203


NAM THAYAKAM
நம் தாயகம்
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)




# திருமலை சம்பூர்ப் படுகொலை 27.11.1985

27.11.1985 அன்று மூதூர்ப் பிரதேசத்தினைச் சுற்றிவளைத்த சிறீலங்கா சிங்கள இராணுவத்தினர் அங்கிருந்த இருபத்தொரு இளைஞர்களைக் கைது செய்தார்கள். பின்பு அவர்களைச் சம்பூர்ப் பிரதேசத்தில் வைத்துச் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தார்கள்.

# ஓட்டுசுட்டான் படுகொலை 27.11.1990

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவின் நிர்வாக மையமாக ஒட்டுசுட்டான் கிராமம் விங்குகிறது. இலங்கையிலுள்ள இந்துக்களின் தான்தோன்றீஸ்வரர் ஆலயங்களில் ஒன்றாக ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரமும் உள்ளது. இங்கு வாழும் மக்கள் இவ்வாலயத்தைச் சூழ்ந்தே செறிவாக வாழ்ந்து வந்தனர்.

மக்களின் பிரதான தொழில்களாக ஓடு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, விவசாயம் என்பன காணப்படுவதோடு, முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிக முதலீட்டையும் தொழில் வாய்ப்பையும் பெற்றுத்தருகின்ற தொழிலாகவும், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை உள்ளது. ஒட்டுசுட்டானின் மையப்பகுதி ஓர் சிறு நகரப் பண்புகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

27.11.1990 அன்று ஒட்டுசுட்டானில் பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயச் சூழலில் சிறீலங்கா சிங்கள விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் பன்னிரண்டு பொதுமக்கள் உடல்சிதறி உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தார்கள்.

**இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ஒட்டிசுட்டானைச் சேர்ந்த மகேந்திரனின் தங்கையான ஆ.சகிலா தெரிவிக்கையில்...**

"என்னுடைய அண்ணா 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபத்தோழாம் திகதி ஒட்டுசுட்டான் சிவன்கோயிலை அலங்கரிப்பதற்காக இரவு சென்றிருந்தார். அப்போது வானத்தில் உலங்கு வானூர்தி வட்டமிட்டதைத் தொடர்ந்து சிறீலங்கா விமானப்படையின் விமானங்கள் வந்து குண்டுத் தாக்குதலை நடத்தியது. அப்போது நாங்கள் எல்லோரும் வீட்டிலிருந்து சற்றுத்தொலைவிலிருந்த எங்களுடை உறவினர் ஒருவரின் வீட்டில் நின்றிருந்தோம். அப்போதுதான் அயலிலிருந்து ஒருவர் வந்து கோயிலடியில் குண்டு போட்டதால் அண்ணாவிற்குக் காயம் என்று சொன்றார்கள். அப்போது ஓடிச் சென்று பார்க்கும்போது அண்ணாவை முல்லைத்தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு போயிருந்தார்கள். அங்கு போனபோது ஒரு கால் இல்லாமலும் கையிற் காயத்துடனும் பார்த்தோம். அப்போது அண்ணா அழுதபடி நான் சுகமாகி விடுவேன் என்று சொன்னர். ஆனால் அண்ணா உயிரோடு வரவில்லை. அவருடைய இறப்பு எங்களாற் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அண்ணா இருந்திருந்தால் இப்படியாக நாங்கள் கஸ்ரப்பட வேண்டிய வந்திருக்காது. எங்களை நல்லபடியாகப் பார்த்திருப்பார். தற்போது நாங்கள் பெரும் கஸ்ரத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தச் சம்பவத்தில் பன்னிரண்டு பேர் இறந்ததுடன், பலர் காயமடைந்தும் இருந்தார்கள்."

**27.11.1990 அன்று ஒட்டுசுட்டான் படுகொலையில் கொல்லப்பட்டடோர் விபரம்**

1. ஆழ்வாப்பிள்ளை மகேந்திரன் (25)
2. தம்பிராசா செல்வராசா (23)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# விசுவமடுப் படுகொலை 05.11.1987

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் விசுவமடு அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயமாகும். இங்கு நெல், தென்னை போன்றவற்றுடன் மேட்டு நிலப்பயிர்களும் பயிரிடப்படுகின்றன. இவற்றிற்கான நீரினை விசுவமடுக்குளம் வழங்குகின்றது. இப்பிரதேசத்தின் சந்திப் பகுதி சிறிய நகரப் பண்பைக் கொண்டுள்ளது.

25.11.1998 அன்று பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை விட்டு மாணவர்கள் வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் சிங்கள இராணுவத்தினரால் ஆனையிறவிலிருந்து விசுவமடுப் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலில் பாடசாலையிலிருந்து வீட்டுக்குவந்து மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் அவ்விடத்திலேயே உயிரிழந்தான். மற்றைய எறிகணை விசுவமடு மகாவித்தியாலயத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்ததில், தனது மாமனாருக்கு மதிய உணவினைக் கொண்டு வந்த சிறுவன் காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தான். மேலும் இதனை அண்டிய பகுதியகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் இருவர் உயிரிழந்தார்கள். இச்சம்பவங்களில் மொத்தமாக ஆறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், பத்துப் பேர் காயமடைந்தனர்.

**25.11.1998 அன்று விசுவமடு படுகொலையில் கொல்லப்பட்டடோர் விபரம்**

1. சிவறஞ்சினி (15)
2. கிருஸ்ணபிள்ளை தர்மரத்தினம் (32)
3. ஜெயரட்ணம் வினோ (03)
4. முருகையா பிரகாஸ் (12)
5. யோகநாதன் அகிலேநாதன் (17)
6. இராசன் வசந்தகுமார் (27)

**காயமடைந்தவர்களின் விபரம்**

1. லக்சுமி (52)
2. சரஸ்வதி (41)
3. சிதம்பரநாதன் சிவானந்தன் (25)
4. சிதம்பரநாதன் மணிமேகலை (59)
5. செல்வராசா இராசம்மா (40)
6. பெருமாள் சாந்தகுமார் (16)
7. கோவிந்தசாமி (-)
8. கோவிந்தசாமி மகேஸ்வரி (-)
9. கிருஸ்ணன் குணரத்தினம் (-)
10. இராமையா சிவனம்மா (-)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மருத்தேவாலயப் படுகொலை 2011.1999



இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டத் தலங்களில் ஒன்றாகவும், புனித யாத்திரைத் தலமாகவும் மடுத்தேவலாயம் விளங்குகின்றது. மன்னார் மாவட்டத்தில் மடுப்பிரதேச செயலர்பிரிவில் இத்தேவாலயம் அமைந்துள்ளது. இலங்கையின் அனைத்துப் பகுதியிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனிதத் தலமாக மடுத்தேவாலயம் விளங்குகின்றது.

1990 ஆம் ஆண்டைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுமாதா திரும்பதியில் தஞ்சம் புகந்தனர்.

1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் திகதி பாலம்பிட்டி சின்னப் பண்டிவிரிச்சான் காட்டுப் பகுதியூடாக மடுநோக்கி முன்னேறிவந்த சிறீலங்கா சிங்கள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு முன்னேறினார்கள். இதனால் பாலம்பிட்டி தட்சணாமருதமடு மக்களும் இடம் பெயர்ந்து மடுப் பிரதேசத்திற் தங்கியிரந்தார்கள். பாலம்பிட்டிப் பிரதேச மக்களை இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி மடுத்தேவாலயத்திற் தங்கவைத்தார்கள்.

பெரியபண்டிவிரிச்சானிற் தங்கியிருந்த படையினர் இரவு 9:45 மணியளவில் டாங்கிகளிலிருந்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். முதல் இரண்டு எறிகணைகளும் மடுத் தேவாலயத்திற்கு முன்னிருந்த ஆலமரத்தில் பட்டுச் சிதறியது. இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. மூன்றாவது எறிகணை மடுத்தேவாலயத்தின் இருதய ஆண்டவர் ஆலயத்தின் மிது வீழ்ந்து வெடித்தது. இப்போது அந்த ஆலயத்தினுள்ளிருந்த குழந்தைகள், இளைஞர்



கள், யுவதிகள், முதியவரென முப்பத்தொரு பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்கள். அறுபதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காயமடைந்த மக்களில் ஒன்பது பேர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழ்ந்தார்கள்.

இறந்தவர்களின் இருபத்தேழு பேரின் உடல்களைத் தேவாலய ஆயர் வைத்திய அதிகாரிகள் முன்னிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று விசாரணையின் பின் மீண்டும் மடுத்தேவாலயத்திற்கு எடுத்துவந்து மடு சேமக்காலையில் அடக்கம் செய்தார். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் சேதமடைந்த மண்டபம் இன்றும் அப்படியே உள்ளது.

**இச்சம்பவத்தில் காயமடைந்த தெய்வசேகரம் அமரசிங்கம் இப் படு கொலைபற்றி கூறுகையில்:**

"அன்றைய தினம் 6:30 மணிக்குப் பின்னர் அப்பகுதியெங்கும் சரமாரியான துப்பாக்கிச் சத்தமும் எறிகணைவீச்சும் சத்தமும் கேட்டவண்ணமிருந்தது. மக்களனைவரும் ஆலயத்தில் உறங்கிக் கொண்டிருந்த வேளை சரியாக இரவு 9:45 மணியிருக்கும்

# மடுத்தேவாலயப் படுகொலை 20.11.1999



தேவாலயத்தில் நடைபெற்ற படுகொலையில் இறந்த மக்களைப் பார்வையிடும் மதகுருமார்.



சிறீலங்காப் படைகளின் எறிகணையால் சிதைக்கப்பட்ட தேவாலயத்தின் உட்பகுதி

முதலாவது எறிகணை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் விழுந்து வெடித் தது. அடுத்த எறிகணை ஆலயத் தின் முன் நின்ற ஆலமரத்தில் விழுந்து வெடித்தது. அதன் பின்னர் கடைசியாக ஏவப்பட்ட எறிகணை

கணவர் உட்பட பல உறவினர்கள் இறந்திருந்தார்கள். இதன்போது நாற்பத்தைந்து பேர்வரை இறந்தும் எழுபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் வரை காயமடைந்தும் இருந்தார்கள். இவ் எறிகணைத் தாக்குதலின் பின்னர் வேறெந்த வெடிச்



தனது நான்கு குழந்தைகளையும் சிங்களப் படைகளின் கோரத்தனத்திற்கு பறிகொடுத்த தாயாரின் துயரநிலை.

நான் இருந்த இடத்திற்கு மேலிருந்த இரும்புக் கம்பியில் வீழ்ந்து வெடித்தது. இதன் போது என்னைச் சுற்றியிருந்த எனது அம்மாவான சந்திரசேகரம் பூமணி, அக்காவான அம்பிகாவதி, இவரின் முத்தமகனான கஜானன் மற்றும் பெரியப்பாவின் மகன் மனைவி மற்றும் மகள் -

சத்தமும் இல்லாமல் ஒரே அமைதியாகக் காணப்பட்டது. எங்கள் மேல் வீசப்பட்ட எறிகணைகள் அனைத்தும் தேவாலயத்திற்கு முன்னாலிருந்த மடு அரச செயலகத்திலிருந்த இராணுவத்தினர் ஏவியதை நான் உட்பட பல மக்கள் கண்டோம். இதிலிருந்து இது ஒரு வேண்

டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட செயலாகவே கருதவேண்டியிருக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் பண்டிவிரிச்சானிலிருந்த ஒரு மதுபானச்சாலையை உடைத்து அங்கிருந்த மதுவை அருந்திய பின்னரே இச்செயலைச் செய்துள்ளனர். இச்சம்பவம் நடைபெற்ற பின்னர் எனது அண்ணாமார் ஏனையோர்களின் உதவியுடன் இரவு 10:00 மணியளவில் என்னை இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றி வவுனியா வைத்தியசாலையில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அதன்பின்னர் மயக்கமுற்ற நான் இருபத்தைந்து நாட்களுக்குப் பின்னர்தான் பழையபடி எனது சுயநினைவைப் பெற்றேன்."



மடுத்தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்ட சிறுவர்களின் உடல்கள்.

### 20.11.1999 அன்று மடுத் தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. சூரியகுமார் சுகந்தன் (22)
2. சூரியகுமார் சுகந்தி (23)
3. இந்தரமோகன் தட்சாயினி (13)
4. நிக்கலஸ்யூட் யாழினி (25)
5. நவரட்ணம் இராசேஸ்வரி (58)
6. கனகரத்தினம் வாரித்தம்பி (54)
7. காளிதாசன் செல்வகுமாரி (22)
8. கிரேசு செல்வராஜா (39)
9. கருணைராசா கபாஸ்கர் (15)
10. கருணைராசா தெய்வானை (49)
11. குணவீரசிங்கம் யோகேஸ்வரி (22)
12. குணவீரசிங்கம் லோகேஸ்வரி (10)
13. குணவீரசிங்கம் சுகன்யா (09)
14. குணவீரசிங்கம் சுவேனியா (20)
15. தர்மலிங்கம் தர்மநீதன் (10)
16. தர்மலிங்கம் சாந்தகீதன் (04)
17. தம்பாப்பிள்ளை திசவீரசிங்கம் (46)
18. திசைவீரசிங்கம் மதிராஜ் (03)
19. திசைவீரசிங்கம் அம்பிகாவதி (37)
20. முனியாண்டி உதயகுமார் (22)
21. முனியாண்டி செல்வம் (55)
22. முத்தையா சிவானந்தம் (26)
23. ஜெயராம் ஜெயசீலன் (18)
24. செல்வராசா நிறாஜ் (09)
25. செல்வராசா ரதன் (12)
26. வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (44)
27. சந்திரமேகான் பபிதரன் (06)
28. சந்திரமோகன் சுஜிதரன் (09)
29. சந்திரமோகன் சுதாகரன் (09)
30. சந்திரசேகரம் பூமணி (61)
31. சதாசிவம் ஜமுனன் (21)
32. சிவானந்தம் சுகந்தினி (22)
33. சிறிபாஸ்கரன் (03)
34. வாரித்தம்பி பவானி (17)
35. ஏகாம்பரம் ராமேஸ்வரி (52)

### காயமடைந்தவர்களின் விபரம்

1. சூரியகுமார் செல்வராணி (43)
2. இளையதம்பி உருக்குமணி (-)
3. இராமசாமி கேதீஸ்வரன் (24)
4. இராமலிங்கம் இந்திராணி (17)
5. இராமலிங்கம் தனலட்சுமி (52)
6. இரத்தினம் வநரத்தினராசா (46)
7. இரத்தினம் தனேஸ்வரன் (29)
8. இரத்தினம் விஜயலட்சுமி (17)
9. இரத்தினம் ரங்கம்மா (55)
10. ஈஸ்வரி (-)
11. உதயசீலன் (-)
12. நஷாந்தன் (-)
13. நவரத்தினராசா துஸ்யந்தினி (03)
14. நவரத்தினராசா தயாளினி (04)
15. நவரத்தினராசா மனோரஞ்சிதம் (43)
16. நவரத்தினராசா அகதீஸ்வரி (19)
17. நவரத்தினராசா சந்திரகாந்தன் (11)
18. கஜன் (03)
19. கனகரட்ணம் குமுதினி (13)
20. கந்தசாமி (-)
21. கார்த்திக் குமரன் (-)
22. கார்த்திக் சத்தியா (-)
23. கார்த்திக் சிவபாதமலர் (-)
24. கதிரவேலு சூரியகுமார் (-)
25. குமாரசாமி கேதீஸ்வரன் (26)
26. கிற்ஸ்சி ரஞ்சினி (37)
27. பூபாலசிங்கம் முகிலன் (09)
28. பூபாலசிங்கம் முத்துப்பிள்ளை (40)
29. பாலசுந்தரம் (-)
30. பவித்திரா (-)
31. பரமேஸ்வரி (-)
32. தயாநிதி (10)
33. தனுசன் (-)
34. தர்மலிங்கம் உதயகீதா (11)
35. தர்மலிங்கம் குமுதகீதன் (06)
36. தர்மலிங்கம் கமலாதேவி (33)
37. திருக்குமரன் (-)
38. மல்லிகாதேவி (34)
39. அம்பிகா (-)
40. அழகன் செல்வம் (43)
41. ஜோன் திவாகரன் (13)
42. யோகராசா நாகேந்திரன் (-)
43. யோகராசா பகீரதன் (-)
44. கோகுலசாரதி (59)
45. கேதீஸ்வரன் டினோசன் (03)
46. கேதீஸ்வரன் ஜெயந்திமலர் (29)
47. பெருமாள் ரவி (-)
48. மோகன் பஜாணன் (09)
49. செல்வன் கஜன் (04)
50. செல்லத்துரை சிவராசா (38)
51. செல்லத்துரை ராதாகிருஸ்ணன் (36)
52. சுஜி (-)
53. சந்திரசேகரம் அமரசிங்கம் (35)
54. சுகந்தினி (-)
55. சத்தியவாணி (-)
56. சதானந்தம் (-)
57. சறோஜினி (32)
58. சிந்துஜா (-)
59. சிவபாதசுந்தரம் சமலநாயகி (38)
60. சிவமலர் (28)
61. சிவசக்தி (-)
62. சிவராசா மல்லிகாதேவி (35)
63. சிவராசா வரம்சவல்லி (10)
64. சிறிபாஸ்கரன் கௌசல்யா (-)
65. சிறிபாஸ்கரன் சயந்தா (-)
66. சிறிபாஸ்கரன் சங்கீதா (-)
67. சிறிபாஸ்கரன் (29)
68. சிறிபாலசுந்தரம் (50)
69. சிறிதரன் (-)
70. வள்ளுவன் (-)
71. ரவி (-)
72. எஸ். சதானந்தன் (13)
73. ஏகாம்பரம் சிவராஜ் (-)
74. எப். உதயசுதா (12)

குறிப்பு: இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மாவீரர் நாளில் தேசியத் தலைவருக்காக...!




கார்த்திகை 27, தமிழ்மக்களின் விடுதலைக்காக தங்களது உயிர்களை ஆகுதியாக்கிய உன்னதமான மாவீரர்களை நினைவு கூர்ந்து உறுதியெடுக்கும் தேசியநாள். அந்நாளில், ஒவ்வொரு வருடமும் மாவீரர்துயிலும் இல்லங்களுக்குச் சென்று, மடிந்த வீரர்களின் கல்லறைகளில் கண்ணீருடன் நிற்கும் பெற்றோர்களின் கரங்களைப் பற்றி, மாவீரர்களின் கனவு நனைவாகும் என்ற ஆறுதல் வார்த்தைகளைக்கூறி, கனத்த மனங்களுடன் திரும்பும் வேளை, இன்னும் உங்களின் கனவை நனவாக்கவில்லையே என்ற உறுத்தல் மனதைக் குடையும்.

இன்றைக்கு முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களை, உங்களின் கனவை நனவாக்குவோம் என்றே விதைகுழிகளுக்குள் விதைத்துவிட்டோம். ஈழத்தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, கொள்கைக்காகப் போராடி மடிந்த இந்த மாவீரர்கள் தான் உண்மையான போராளிகள் என்பது தேசியத் தலைவனின் கருத்து. 2001ம் வருடம் தீச்சுவாலை எதிர்த்தாக்குதலுக்கு தயாராக இருந்தவேளை, களமுளைத் தளபதிகளுக்கான கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டிருந்தோம். அப்போது தலைவர் பிரபாகரன் அவர்கள் "உண்மையான போராளி என்றால் யார், அவர் தான் கொண்ட கொள்கையில் வென்றிருக்க வேண்டும் அல்லது அந்த கொள்கைக்காக வீரச்சாவடைந்திருக்க வேண்டும், அவர் தான் உண்மையான போராளி. எனவே நான் என்னை ஒரு உண்மையான போராளி என்று சொல்ல மாட்டேன். நான் என்னுடைய கொள்கையில் வெல்லவுமில்லை வீரச்சாவடையவுமில்லை" என்று கூறினார். அந்தக் கர்மவீரனின் எண்ணத்தில் உயர்ந்து நிற்பவர்கள்தான் மாவீரர்கள்.

தமிழ்மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் முத்துக்கள் இவர்கள். அவர்களின் தியாகம், உழைப்பு, கனவு எல்லாம் விடுதலை மீதும் அதை வழிநடாத்திய தலைவன் மீதும் கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடுகள். லெப் சங்கர் தொடக்கம் எத்தனை மாவீரர்களின் தியாகங்களைத் தாங்கியிருக்கிறது இந்த விடுதலைப்போராட்டம். துப்பாக்கிச் சன்னம் துளைத்து விழுந்த வேளையிலும் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தை எடுத்திட்டுப் போங்கோ' எனக் கூறி வீரச்சாவடைந்த லெப் சீலன், காந்தியவழியில், நிராகாரம் கூட அருந்தாமல் உண்ணாவிரதமிருந்து தியாகமரணமடைந்த தியாகி திலீபன், எதிரியின் குகைக்குள் கரும்புலியாய் வெடித்த கரும்புலி மில்லர், என எத்தனை எத்தனையோ தியாகங்களின் அடித்தளத்தில் வளர்க்கப்பட்டது இந்தப் போராட்டம். தமது வாழ்க்கையை அர்ப்பணித்த எல்லாப் போராளிகளும் 'நான் வீரச்சாவடைந்தாலும் எனது தலைமுறை போராடும்' என்ற ஒரே நம்பிக்கையில்தானே போர்க்களம் போனார்கள். அதே நம்பிக்கையோடுதானே விதைகுழியில் தூங்குகின்றார்கள். ஒவ்வொரு போராளியையும் விதைக்கும் போது 'நெஞ்சு கனக்கும் தாயகக்கனவுடன் பிரிந்து செல்லும் இவனின் கனவை நனைவாக்குவோம்' என விதைகுழி மீது உறுதியெடுத்துத்தானே விதைத்தோம்.

அவர்களின் தியாகங்கள் அளப்பரியவை. வர்ணிக்க முடியாதவை. தற்துணிவான வீரம்மிக்க செயல்களின் கதாநாயகர்கள் தான் மாவீரர்கள். எப்படி இவர்கள் இவ்வாறு தமது உயிரைத் தியாகம் செய்யத் துணிந்தார்கள். ஒரே விடயந்தான், இனத்தின் விடுதலை வேண்டுமாயின் போராடியேதான் ஆகவேண்டும் என்ற முடிவில் தெளிவாக இருந்தார்கள் அதற்காக எந்தக் கடினங்களையும் தாங்கும் துணிவுடன் செயற்பட்டார்கள். 'சத்தியத்திற்காகச் சாகத் துணிந்து விட்டால் ஒரு சாதாரண மனிதப்பிறவியும் சரித் திரத்தைப் படைக்கமுடியும்' என்ற தலைவனின் வழியில், சரித்திர புருஷர்களாக சத்தியத்தின் வழி நின்று தமது வாழ்வை அர்ப்பணித்த அவர்களின் நினைவு எழுச்சி தினத்தின் கனதி கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

தலைவராலும் தமிழ்மக்களாலும் உன்னதமாக மதிக்கப்படும் மாவீரர்களுக்காகக் கொண்டாடப்படும் மாவீரர்நாள் வெறும் அடையாள நிகழ்வோ, கேளிக்கை நிகழ்வோ அல்ல. வணங்குதலுக்குரிய, போற்றுதலுக்குரிய நன்நாள். தலைவரால் தேசிய நாளாகவே பிரகடனப்படுத்தப்பட்ட புனிதநாள்.

தமிழீழத்தின் புனிதநாளான மாவீரர்நாள், நினைவு எழுச்சி நாளாகத் தேசமெங்கும் பரந்து நிற்கும். களமும் புலமும் ஒரே குடையில் இணைந்து நின்று அந்த நாளை வர வேற்கும். தமிழீழத்தின் ஒவ்வொரு இடமும் புனிதமாக, மாவீரர் நினைவுகளைத் தாங்கி அலங்கரிக்கப்பட்டிருக்கும். வீதிகளும் வெளிகளும் பாதாகைகளுடன் நிமிர்ந்து நிற்க, தென்றலோடு கலந்துவரும் மாவீரர் கீதங்கள் நினைவு களை மீட்டி, உணர்வுகளை உரசிச் செல்லும். காற்றுக்கூட அவர்களின் நினைவைச் சுமந்துவரும். துயிலுமில்லங்களில், அவர்களின் கல்லறை கண்ணீரில் நனைந் திருக்கும். வித்தாகிப்போன ஒவ்வொரு ஆத்மாவின் பெயரி லும் தனது சத்திய உரையை வழங்கும் தலைவன், நெஞ் சோடு நிறுத்தி உறுதியெடுப்பார். நிசப்தமாக ஏற்றப்படும் விளக்குகளின் ஒளிவெள்ளத்தில் பிரகாசிக்கும் அவர்களின் கல்லறை மீது ஒவ்வொரு தமிழனும் மானசீகமான உறுதி யெடுப்பான் "உங்கள் கல்லறை மீது எங்கள் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்". வித்தாகிப்போன அந்த ஆத்மாக்கள் அன்றைய உறுதி மொழிகளில் அமைதியாக உறங்கும்.

தற்போது ஈழத்தில் தமிழினம் கொடியவனின் கரங்களுக்குள் சிறைப்பட்டிருந்தாலும் ஆறாத வடுக்களுடன் அவல நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தாலும் இனத்தின் சுதந்திரத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் போராடி மடிந்த மாவீரர்களை நினைவுகூரத் தயாராகி, வரப்போகும் கார்த்திகையை எதிர்பார்த்து நிற்கிறார்கள். போற்றப்பட்டு வந்த துயிலுமில்லங்களைக் கூட இடித்தழித்திருக்கிறது போர்த் தர்மமும் மனிதாபிமானாமும் அற்ற சிங்கள இராணுவம். அடக்குமுறைச்சிறையில் இருந்தாலும், ஈழமக்கள், அமைதியாக ஆத்மார்த்தமாக வீடுகளில் நினைவுகூருவார்கள் என்பதில் ஐயமில்லை. மாவீரர்களின் நினைவுக்கான எந்தச் சுவடும் தமிழீழத்தில் இல்லை என்று சிங்களம் இறுமாப்புடன் இருந்தாலும், மக்கள் தமது மனங்களில் ஏந்தி மாவீரச் செல்வங்களை வணங்குவார்கள் என்பது திண்ணம்.

ஆனால், விடுதலைப்போராட்டத்தின் அடுத்தக்கட்டத்தைச் சுமக்கவேண்டிய புலம்பெயர்தேசம் குழப்பங்களில் சிக்கித் தவிக்கின்றது. தலைவனின் வழிநடத்தலில் ஒன்றுபட்டு நின்ற தேசம் இன்று பிரிவுகளாக நின்று மாவீரர் தினத்தை நடாத்துமளவிற்குப் பிளவுபட்டு நிற்கின்றது. கொள்கைகள் கோட்பாடுகளில் முரண்பாடுகள் வரலாம். எங்களுக்காக மடிந்துபோன தியாகிகளான மாவீரர்களை நினைவு கூருவதிலுமா இழுபறி? ஆளாளுக்கு ஒரு மாவீரர் தினம். அதற்கான பாரிய விவாதங்கள், உரையாடல்கள் என மாவீரர்தினம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் முடிவின்றி நீண்டுகொண்டே செல்கின்றன. மாவீரர்களின் தியாகங்கள், அவர்களின் வரலாறுகள் பற்றிய உரையாடல்கள், செய்திகள் பரிமாறப்படுவதை விட, முரண்பாட்டின் விவாதங்களே மிகவும் பிரதானப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது தானா தலைவனிடத்தில் இதுவரையும் நாம் கற்றுக்கொண்டது. மாவீரர் தினத்தில் கூட ஒன்றிணைய முடியவில்லையென்றால் நாம் எங்கே சென்று கொண்டிருக்கின்றோம் எமது போராட்டம் எங்கே செல்கின்றது. ஒற்றுமையாக முந்நகர்த்தப்பட வேண்டிய போராட்டம், உள்முரண்பாடுகளில் சிதைந்துபோகின்றது. இதனால் எத்தனை தமிழ்மக்கள் திசைதெரியாத குழப்பதோடு தவிக்கிறார்கள், பலர் ஒதுங்கிக் கொண்டு செல்கின்றார்கள். இழுத்த இழுப்பிற்கெல்லாம் எல்லாமக்களும் இழுபடுவார்கள் என்று நினைப்பது தவறானது.

தலைவரின் தலைமையில் பயணித்தவர்கள் இன உரிமைப் போராட்டத்தில் செலுத்தும் கவனத்தை விட விடுதலைப்புலிகளின் உரிமை யாருக்கு என்னும் தனி உரிமைப் போராட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதைப்போல தெரிகின்றது. மிகவும் கட்டுக்கோப்பான விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெயரால் அடையாளங் காணப்பட்டவர்கள், இன்று தங்களிற்குள்ளேயான தனிப்பட்டதாக்குதல்கள், வன்முறைகள், வசவுகள் என்ற வளையத்திற்குள் சிக்கி அமைப்பினதும் தலைவரினதும் கௌரவத்தை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவையே மாவீரர் நாள் குழப்பங்களுக்கும் காரணமாகிவிட்டன. இவர்கள் யாரும் தங்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்த முடியாது. குடும்பத்தலைவர் இருக்கும் போது ஒழுங்காக இருப்பதை விட அவர் வீட்டில் இல்லாத போதும் ஒழுங்காக இருப்பது தான் உன்னதமான ஒழுக்கம். விடுதலைப்புலிகளின் பெயரால் செய்யப்படும் ஒவ்வொரு விடயத்தாலும் அவமானப்படுவது நீங்கள் யாருமல்ல, 'தலைவர்தான்' என்பது கூடப் புரியவில்லையா?. இந்த மாபெரும் இயக்கம் பிரபாகரன் என்னும் ஒற்றைச் சொல்லின் ஆளுமையின் வெளிப்பாடு. அதைச்சுற்றித்தான் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டனர். அதை தலைவர் இலகுவாக கட்டியெழுப்பிவிடவில்லை. எத்தனையோ அர்ப்பணிப்புகள் தியாகங்களின் அடித்தளத்தில் தான் கட்டியெழுப்பினார். இதனால் அவரின் தலைமையின் கீழ் செயற்பட்டவர்கள் என்பதன் அடிப்படையில் அதை போட்டு உடைக்கும் உரிமை யாருக்கும் இல்லை.

தமிழீழம் என்ற ஒற்றைக் கனவுக்காக மடிந்துபோன ஆத்மாக்களிடம், 'எங்களுக்காக நீங்கள் ஆகுதியானீர்கள். ஆனால் உங்களை எங்களால் ஒன்றுபட்டு வணங்க முடியவில்லை' என எவ்வாறு கூறமுடியும். அவ்வாறு கூறின் நெஞ்சிலே நெருஞ்சி முள்ளாள் குத்துவது போலாகாதா? உங்களிடம் தாழ்வான வேண்டுகோள் ஒன்றுதான். தயவுசெய்து தலைவரையும் மாவீரர்களையும் அவமானப் படுத்திவிடாதீர்கள். உங்களின் அணிப்பலத்தைக் காட்டுவதற்கான குறியீடாகவோ ஆதாரமாகவோ இந்தப் புனித நாளைப் பயன்படுத்தாதீர்கள். உங்கள் முரண்பாடுகளினால் மக்களைச் சோர்வடையச் செய்யாமல் ஒருமைப்பாட்டுடன் ஒரே வழியில் பயணிப்போம் என இந்த மாவீரர் தினத்திலாவது அவர்களின் கல்லறைகளின் மீது சத்தியம் செய்யுங்கள்.

முரண்பாடுகளில் சிதைக்கப்படும் இன்னொரு முக்கியமான புனிதம் 'தலைவரின் மாவீரர் நாள் உரை நேரம்'. வருடத்தில் ஒரு தடவைதான் தலைவர் தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பார். ஒவ்வொரு மாவீரர் தினத்திலும் தலைவர் தனது உரையில் கடந்த ஒருவருடத்தின் அடைவுகள், சிங்களத்தின் கொடூரங்கள், தனது நகர்வுகள், தொடர்ந்து என்ன செய்யப் போகின்றேன் என்பதைப் பதிவு செய்வார். எனது தனிப்பட்ட பார்வையில், "அந்தப்புனிதமான தினத்தில், தான் கடந்த வருடத்தில் என்ன செய்தேன், இனி என்ன செய்யப்போகின்றேன் என்பதை ஆத்மார்த்தமாக மாவீரர்களிடம் கூறும் நிகழ்வாக அல்லது சத்தியம் செய்யும் உரையாகத்தான் தலைவர் கருதியதாகவே" நான் நினைக்கின்றேன். எனவே அவர் உரையாற்றும் நேரம் முக்கியமானது, பெறுமதிவாய்ந்தது. எப்போதும் தலைவர் சொல்லுக்கு முன் செயல் இருக்க வேண்டும என விரும்புவார். வெற்று வார்த்தைகளை விட செயற்திறன்மிக்க செயற்பாடுகளைத்தான் வரவேற்பார். அதில் ஒன்றாகவே அவரது மாவீரர்தின உரையும் அமையும்.

கடந்த பலவருடங்களில், அந்த நேரத்தில் எத்தனை யோ அபத்தங்கள் நடந்தேறிவிட்டன. ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள், அவற்றில் முரண்பாடான கருத்துக்கள். தயவு செய்து அந்த நேரத்தை களங்கப்படுத்தாதீர்கள். தலைவர் மாவீரர் தின உரையாற்றுவாரா! ஆற்றமாட்டாரா! என்ற விவாதத்திற்குள் நான் வரவில்லை. ஆனால் வருடத்தில் ஒரு தடவை மட்டுமே உரை நிகழ்த்தும் அந்த நேரம் தலைவருக்கு மட்டுமே உரியது. அவர் செய்யும் சத்திய உரை அது. தலைவரைத்தவிர யாராலும் அந்த நிமிடங்களுக்கு வலுச் சேர்க்க முடியாது. அந்த மாபெரும் தலைவன், தான் செய் தவற்றையும் செய்யப்போவதையும் தன்னை நம்பி வீரச் சரடைந்த மாவீரர்களுடனும் தன்னை நேசித்த மக்களுடனும் பரிமாறும் நிமிடங்கள்.

பெறுமதியான அந்த நிமிடங்களில் கண்டிப்பாக ஏதோ ஒரு உரையை வாசித்தே தீர வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் விதிக்கப்படவில்லை. அவை சம்பிரதாயமான உரைகளை வாசிப்பதற்கான நிமிடங்களும் அல்ல. எனவே, அந்த நிமிடங்கள் தலைவருக்குரியவை என்றே விட்டுவிடுங்கள். அதுதான் தலைமைக்கு கொடுக்கும் மரியாதை. தலைவருக்குரிய நிமிடங்கள் மௌனமாகவே கரையட்டும். அந்த நேரத்தில் மாவீரர்களை மௌனமாக வணங்கி நிற்கும் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் தலைவர் நிசப்தமாக வலம்வருவார். அற்புத வீரனின் நினைவுகளுடன் கலந்திருக்கும் சிறப்பு நேரமாக இருப்பதுதான் பெறுமதியானது. அந்த நேரத்தில் தலைவனின் சிந்தனைகளைக் காற்றோடு கலக்கவிடுங்கள். அதில் மக்கள் இணைந்திருக்கட்டும். அந்த உணர்வுகளுடன் அவர்கள் மாவீரர்களின் கல்லறைகளில் விளக்கேற்றி, அந்த ஆத்மாக்களோடு உறுதியெடுப்பார்கள். அதன் பிற்பாடு உங்களின் அறிக்கைகளை வாசியுங்கள்.

மாவீரர் நாள் என்ற புனிதநாளிலாவது தலைவரின் பேரால் ஒன்றிணையுங்கள் என்பதுதான் விடுதலையை வேண்டி நிற்கும் மக்களின் விருப்பம். இலக்கும் அதற்கான பாதையும் தெளிவாக இருந்தால் முரண்பாடுகள் அர்த்தமில்லாதவை. பிளவுபட்டு நின்று எந்த முடிவையும் எட்ட முடியாது. ஒரு கணம் மாவீரர்களின் தியாகத்தை மட்டும் எண்ணிப் பாருங்கள். தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களைக் கடந்து இணைந்து நில்லுங்கள். தலைவர் பிரபாகரன் அவர்களின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அவருடைய ஆளுமையும் தமிழினத்தை என்றைக்கும் வழிநடாத்தும். தலைவரின் இடமும் உரையாற்றும் நேரமும் அவருக்கு மட்டுமே உரியவை. இதனை மனதில் நிறுத்தி, அவரின் சிந்தனைகளை பின்பற்றிச் செயற்படுவது தான் தலைவருக்கு கொடுக்கும் அதி உச்ச கௌரவம்.

நன்றி – அபிஷேகா



# தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று சத்தியம் செய்வோம்

சொரிந்த மேகக் கண்ணீரால்
நிலமூறிச் சிதம்பிக் கிடக்கிறது.
இப்போது மழையில்லையாயினும்
எப்போதும் உடைப்பெடுக்கலாம் என்பதான
மப்பும் மந்தாரமுமான வானம்.
மயிர்த்துளையூடு புகம் குளிர்காற்று
கூதல் தரவில்லை எமக்கு
மாறாய் நெருப்பாய்த் தகிக்கிறது தேகம்.
பிள்ளைகளின் முகம் தெரியுமெனும்
நம்பிக்கையில்
மணிக்கதவம் தாள்திறக்கும் பொழுதுக்காக
கல்லறைகளுக்கு முன்னே காத்திருக்கிறோம்.
துயிலுமில்லப் பிரகாரமெங்கும்
திரண்டிருக்கிறது தெய்வங்களின் சுற்றம்.
பயிர்களைக் காணவும் பேசவுமென்று
விளைந்து கிடக்கும் விடுதலை வயிலில்
விதைத்தவர் கூடியுள்ளோம்.
கையில் பூவுடனும் சுடருடனும்
நீண்டு கிடக்கிறது கிரியைக்கானவரிசை
கபாடம் திறந்ததும் கண்திறப்பார்களே
குழியிருந்து வெளியே வருவார்களே
புன்னகைப்பார்களே
பின்னர் பேசுவார்களே
கொண்டு வந்தீர்களா என்று கேட்பார்களே.
சென்றவருடம் வந்து திரும்பியபோது
அடுத்தவருடம் வரும்போது
அதனுடன் வருவோமென்றல்லவா
சொல்லித் திரும்பினோம்?
இப்போது என்ன சொல்லப்போகிறோம்?
இந்த வருடமும் வரிசைகட்டி விளக்கேற்றி
வாச மலர் தூவி
அந்தப் பாடலையும் படுவதற்கான
சம்பிரதாயக் கிரியைகளுக்காகவா இந்தக் கியூ?
குற்றமிழைத்தவர்களாகக் குறுகி
வெற்றுக் கைகளுடன் போவது எத்தனை
வெட்கம்?
சுடரேற்றித் திரும்பும்போதுதான்
அவர்கள் வாய்திறப்பார்கள்
சுட்டெரிக்கப் போகிறது அந்தச் சுடுகேள்வி.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
எதிரொலிக்கப் போகும் அசரீரிக்கு
எங்களிடம் என்ன பதில் உண்டு?
மாவீரர் நாள்
சம்பிரதாயங்களுக்குள் இறுகிய
சடங்குநாளல்ல.

திருவண்ணாமலைச் சோதிப்பெருநாளல்ல
இத்தனை பேரையுமா இழந்தோமென்று
இரங்கியழும் நாளுமல்ல.
இன்னும் சொல்வதானால்
அது அவர்களுக்கான நாளல்ல
எங்களுக்கான நாள்.
துயிலுமில்ல வாசல் கடக்கும் ஒவ்வொரு
தடவையும்
உள்ளே ஏதொ ஊதிப்பெருக்கிறதே
அதற்கான நாள்.
கல்லறைகளில் வெய்யில்
வழிக்காணும் போது
ஒடிப்போய் கூரைவிரிக்கச் சொல்கிறதே
அதற்கான நாள்.
எத்தனை பிள்ளைகளை
எத்தனை எத்தனை விதமாய்க்
கொடுத்தோம்.
நரம்புகளில் நஞ்சு ஊறியதாய்
மேனியெங்கும் கந்தகம் பூசியதாய்
கூட்டியள்ளி வந்த சதைக்குவியலாய்
வகைமாதிரிக்கு எத்தனை
வழியிற்கொடுத்தோம்.
மௌனத்தில் உறைந்துகிடக்கிறது
பிள்ளைகளின் தொட்டில் பரப்பு.
நேரம் நொடிகளாய்க் கரைய
சுற்றம் விளக்கேற்றத் தொடங்கிறது.
மகனே!
மகளே!
சூழலில் வழிகிறது பிரிவின் கனதி.
கருவறை தாங்கிய உறவல்லவா?
அது பிள்ளையின் திருமுகம் தேடுகிறது.
மமமொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதிடு
நெஞ்சுருக்கி உள்ளே நெருப்பேற்றி
விடுகின்ற
அந்தப் பாடலும் தொடங்கிறது.
இனித்தான் கல்லறைக் கதவுகள் திறக்கும்.
இனித்தான் விழிமலர்த்தி
வெளியேவருவார்கள்.
அம்மா!...அப்பா!... எனத் தொடங்கி
தோழரே!...தோழியரே!...என நீண்டு
வழக்கத்திலுள்ள அத்தனை உறவும் சொல்லி
அசரீரிபோல அழைப்பது கேட்கும்.

வழிமூடி விதிர்விதிர்த்து நிற்பவர் முன்னே
அவர்கள் வருவார்கள்
வந்து தொடுவார்கள்
கட்டி அணைப்பார்கள்
பழையன இரைமீட்டிச் சரிப்பார்கள்.
எங்கே தமிழீழம்?
என்னாச்சு தமிழீழம்?
திரும்பும் போதுதான் கேட்பார்கள்
இம்முறையும்.
பதிலற்றாவராகப் பந்த மேற்றப்போவது
எத்தனை பாவம்
எத்தனை குற்றம்.
காட்சிக்கு வைக்கப்பட்டவையல்ல
இந்தக் கல்லறைகள்.
இவை சாட்சிக்கு வைக்கப்பட்டவை என்பதை
கணக்கில் எடுக்கவும்.
தாகம் சுமந்தவரின் வாசலில் நின்று
சத்தியம் செய்யும் போது
உண்மைமனிதராய் ஒளிரவேண்டும்.
அழகான கவிதைகளும் பாடல்களும்
அனல்மூட்டும் பேச்சுக்களும் அல்ல
அவர்கள் வேண்டி நிற்பது.
அழுதழுது விதைத்த அழகு மேனிகளின்மீது
உறுதியெடுத்ததை நினைவிற்கொள்வோம்.
உயிராய் வழியனுப்பி
சடலமாய் வெளியில் எடுத்த
காலத்தை நினைவிற்கொள்வோம்.
தீராக்கனவுகளுடன் திரிந்த காலத்தை
இன்று தொலைத்தா விட்டோம்?
சகல ஊத்தைகளையும் ஊரஞ்சிக்கழுவி
உண்மைமனிதராய் கல்லறைகளுக்கு முன்னே
நிற்போம்.
அவர்கள் முகம் பார்த்து முறுவல் செய்வோம்.
உங்கள் கனவுகளை நெஞ்சில் புதைத்தே
உறுதிசெய்வதாய் சொல்வோம்.
தாய் மீதும்
தமிழ் மீதும்
தலைவன் மீதும்
உங்கள் கல்லறை மீதும் கனவின் மீதும்
சொல்லும் உறுதியுடன்
தொடருமெம் பயணமெனச்சொல்லி
வெளியே வருவோம்.
சுமைகுறைந்தது போலவும்
நமக்கு நாமேபுதியவர் போலவும் தெரிகிறதே.
இதுதான் வழி
இனித்தான் பயணம்.

உலைக்களம் – வியாசன்

## சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."




**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipulanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# தாகம்

(41 பக்கம் பார்க்கவும் ) நாற்காலியிலிருந்து அம்மாவிற்கு பத்திரிகை படித்துக் காட்டத் தொடங்கினார். அப்போதெல்லாம் தங்கச்சியின் வேலைகளில் பாதி குறைந்து விட்டது. அவள் ஒரு சிட்டுக்குருவியைப் போல் உற்சாகமாக இருந்தாள். சின்னவன் வீட்டையேசுற்றிச் சுற்றி வந்தான். அம்மாவை சிரிக்கவைப்பதற்காக அவளுடன் கேலியாகவும் இனிமையாகவும் கதைப்பான். அம்மா நெடுகவும் மகனின் தலையை அவன் தலைமுழுவதும் பேன் இருப்பது போன்று தடவிக்கொண்டே இருப்பாள்.

இப்போதெல்லாம் இராணுவத்தினர் வெளியே வர முடியாது. முகாம் வாசலில் அவர்களை மறித்து போராளிகள் காவல் நின்றவர். எல்லா இடங்களிலும் சண்டைகள் அடிக்கடி நடத்தன.

சில வேளைகளில் மெல்லிய இசை சோகமாகப் பரவும், சில போராளிகளின் உடல்கள்...., வீதிகளில் வலம் வரும், அந்த நேரங்களில் சின்னவனின் உள்ளம் துடிக்கும்.

“தங்கச்சி - இந்தத் தேசம் தன்னைவிடுவிக்க போராடுது - இதில் வாழுற நாங்கள் என்ன செய்யிறம். சின்னப்பிஞ்சுகள் எல்லாம் எங்களுக்காகச் சாகேக்கை நாங்கள் மட்டும் வாழ வேணும் எண்டு நினைக்கிற நினைப்பே தவறெல்லே” சின்னவன் அடிக்கடி இந்த வார்த்தைகளை சொல்லத் தொடங்கினான். தங்கச்சிக்கு எல்லாமே விளங்கியது.

சின்னவன் பழையபடி வீட்டுக்கு வராமல் விடத் தொடங்கினான். தங்கச்சிக்கு பழையபடி வேலைகள் அதிகமாயின. கடலிலிருந்து பீரங்கிப் படகு ஒன்று கண்டபடி குண்டகளை வீசிக் கொண்டிருந்த ஒரு மாலை நேரம், அப்பா சின்னவனை அழைத்தார்.

“நான் இன்னும் கொஞ்ச நாளைக்குத் தான் இருப்பன் போலக் கிடக்குது. எனக்கு கொள்ளி வைக்க என்றாலும் நிற்பியா” என்றார் அப்பா. அவருக்குத் தெரியும் அவன் வெளிக்கிட்டுடுவான் என்று நாடிருக்கும் நிலையில் இவன் வீட்டுக்கை நிற்கிறதையும் அவர் விரும்பவில்லை. ஆனாலும் மகனின் கையால் - தான் எரியவேண்டும் என்று எங்கள் தேசத்து எல்லா அப்பாக்களையும் மாதிரி அவரும் விரும்பினார்.

சின்னவன் “சரி“ என்றான். விலகிச் சென்று அம்மாவிற்கு அருகில் இருந்தான். சில வருடங்களுக்கு முன் உயர்ந்து வளர்ந்து கம்பீரமாக நின்ற அப்பா. படுக்கையில் விழுந்து இன்று சாவுடன் போராடிக் கொண்டிருந்தார். சின்னவனின் நெஞ்சம் அழுதது.

இரண்டு மூன்று நாட்களாக சின்னவன் வீட்டுக்கு வரவில்லை. தங்கச்சி நிம்மதி இல்லாமல் தவித்தாள். மூன்றாம் நாள் இரவு சின்னவன் வந்தான். “தான் எங்கேயோ அவசரமாக போக வேண்டும்“ என்று சொன்னான். அண்ணன் ஆபத்தை தேடி போகப்போறான் என்பது தங்கச்சிக்குத் தெரியும். அவள் மௌனமாக நின்றாள். அம்மாவிற்கு விருப்பமில்லை. அப்பாவிற்கு ஏதும் என்றாலும் சின்னவன் அருகில் நிற்கவேண்டும் என்று அம்மா நினைத்தாள்.

“அம்மா, பயப்பிடாதையாணை, அப்பாக்கு ஏதுமெண்டா நான் கேள்விப்பட்டவுடன் ஓடிவந்திடுவன் - நாலஞ்சு நாளில் எப்பிடியும் வந்திடுவன்” சின்னவன் அம்மாவிடம் கெஞ்சிக் கேட்டான். அம்மா மௌனமாகிவிட்டாள். அவளுக்கு ஏதோ மனதில் சரியாக இல்லை. மகனின் குரலை இன்னொரு தரம் கேட்க வேண்டும் போல் இருந்தது.˙ தூர இடத்திற்கு போறப்பிள்ளை பின்னால் கூப்பிடக்கூடாது“ அவள் மனது சொல்லியது.

நாட்கள் சென்றன — நாலு அல்லது ஐந்து நாளில் திரும்புவதாக சொல்லிவிட்டு சென்ற சின்னவன் ஒரு மாதமாகியும் இன்னும் வரவில்லை.

அப்பாவின் உடல் நிலை மிகமோசமாகியது — தங்கச்சி தவித்தாள். “எனக்கு கொள்ளி வைக்கிறன் என்றவன் எங்க போட்டான்” அப்பா இரவிலும் புலம்பத் தொடங்கினார்.

அண்ணை வந்திடுவார் - அண்ணை இண்டைக்கு வந்திடுவார்“ என்று தங்கச்சி திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள். விடாமல் மழைபெய்து கொண்டிருந்த ஒரு அருவருப்பான இரவு நேரம் - அப்பா கண்ணை மூடிக் கொண்டார்.

அம்மா தவித்தாள், தன் வாழ்வின் ஒரு பாதியாகிய கணவனின் இழப்பு அவளை நன்றாகவே பாதித்தது. சாவீட்டு சடங்குகள் எல்லாமே முடிந்தன. அப்பா செத்து ஒரு வாரமாகியும் சின்னவன் வரவே இல்லை.

அம்மாவும் - தங்கச்சியும் சின்னவனை காணாமல் தவித்தார்கள். இரவுகளில் கதவு தட்டும் ஓசை கேட்கும் - தங்கச்சி எழுந்தோடுவாள் “அண்ணா“ என்று கொண்டே கதவைத் திறப்பாள். வீட்டு முற்றத்தில் நெடுகவும் கிடக்கும் முற்றத்தில் நெடுகவும் கிடக்கும் சொறி நாய் ஆறுதலாக விலகிச் செல்லும். தங்கச்சி வெறுப்புடன் படுக்கையில் சரிவாள்.

“அண்ணை நாளைக்கு வந்து விடுவார்“ தனக்குள் சொல்லிக் கொள்வாள். அன்று காலையில் வழமைக்கு மாறாக தங்கச்சி வானொலிச் செய்தி கேட்டாள். செய்தி சொல்பவன் அர்த்தமில்லாமல் ஏதேதோ எல்லாம், செல்லிக்கொண்டிருந்தான் - இடையில் “சின்னவன் என்றழைக்கப்படும், சின்னராசனை திருக்கோணமலை நகரில் வைத்து படையினர் கைது செய்யச் சென்ற சமயம் அவர் சயனைட்...“ தங்கச்சி ஓடினாள்.

“அம்மா... அண்ணை...” அவள் அறிவிழுந்து போனாள். ஊரும் சொந்தங்களும் கூடின. அம்மாவால் வேதனையை தாங்க முடியாமல் இருந்தது. அவள் அழுதாள் எல்லாத் தாய்மாரைப் போலவும். தனது பிள்ளையின் படத்தை பார்த்து அழுவதற்கு அவளால் முடியாது. தனது மகனை கட்டி அணைத்து அழுவதற்கு அவளின் உடல் கூட அவளுக்கு இல்லை. அம்மா அழுதாள் - தன் துயரங்கள் அனைத்தையும் அழுதழுது கண்ணீரில் கரைத்தாள்.

அம்மா சுவரில் பொருத்தப்பட்டிருந்த சின்னவனின் படத்தை நோக்கி விழிகளை திறந்தபடி இருந்தாள்.

தங்கச்சி பாவம் - அவளுக்கு இப்போதும் வேலைகள் அதிகம். இரவில் கதவில் தட்டும் சந்தம் கேட்கும். அரைத் துாக்கத்தில் அண்ணன் வந்துவிட்டான் என்று எழுவாள். கதவை திறந்ததும் அந்தக் கிழண்டிப் போன சொறி நாய் அறுதலாக விலகிப் போகும் அண்ணைன் எனி வரவே மாட்டான் என்ற உண்மை மனதை உறுத்தும். அழுவாள் - இயலுமட்டும் இழுவாள்.

அம்மாவிற்கு வெளிச்சமும் இருட்டும் தெரியாது. எந்த நேரமும் கவரைப் பார்த்து வழித்துக் கொண்டிருப்பாள்.

அம்மாவிற்கு நம்பிக்கை.

என்றாவது ஒரு நாள் - ஒரு ஒளிப் பொட்டு... ஒரு ஒளிக்கீறல்... தெரியும்.

அம்மாவிற்கு மகளைப் பார்க்கவேண்டும்.

♦♦♦

முற்றும்

விடுதலைப்புலிகள் - ஐப்பசி — கார்த்திகை 1991










விக்னேஷ்.அ

# இந்து மத கடவுளான நடராஜர் சிலை ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையத்தில் உள்ளது ஏன்?



(இணையதளத்திலும் சமூக ஊடகங்களிலும் பல தவறான கூற்றுகள் அறிவியல் ரீதியான காரணங்கள் எனும் பெயரில் உலா வருகின்றன. அவற்றில் சிலவற்றுக்கான உண்மையான காரணங்கள் என்ன என்பதை விளக்கி Myth Buster எனும் பெயரில் பிபிசி தமிழ் தொடராக வெளியிடுகிறது. அந்தத் தொடரின் முதல் பாகம் இது.)

ஜெனீவா அருகே சுவிட்சர்லாந்து - பிரான்ஸ் எல்லையில் அமைந்துள்ள ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் (CERN) உலகின் மிகப்பெரிய மற்றும் நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை மிகவும் நுட்பமான அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆய்வு செய்கிறது.

"நம்மைச் சுற்றியுள்ள பொருட்கள் அனைத்தையும் உருவாக்கும் துகள்களின் அடிப்படை கட்டமைப்புகளை நாங்கள் ஆய்வு செய்கிறோம்," என்கிறது அந்த நிறுவனத்தின் இணையதளம்.

“கடவுள் துகள்கள்“ என்று பரவலாக அறியப்படும் “ஹிக்ஸ் போஸான்“ துகள்கள் இருப்பது வெறும் அனுமானமாக இருந்த சூழலில், ஹிக்ஸ் போஸான்ஸ் அளவில் நிறையுடைய துகள்கள் இருப்பதை கண்டறிந்த ஆய்வுகள் இங்குதான் செய்யப்பட்டன.




இந்த சிலை 2004ஆம் ஆண்டு ஜூன் 18 அன்று அங்கு நிறுவப்பட்டது. ஆர்குட், ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடகங்கள் நிறுவப்பட்ட ஆண்டும் அதுதான்.

ஹிக்ஸ் போசான்களை ஏன் கடவுள் துகள்கள் என்று கூறக்கூடாது என்பது இந்தத் தொடரின் அடுத்த பாகத்தில் விளக்கப்படும்.

அறிவியல் ஆராய்ச்சியில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இத்தகைய ஆய்வு நிறுவனத்தின் வளாகத்தில் நடராஜர் சிலை ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

இதுவரை கடந்துள்ள 16 ஆண்டுகளில், இணைய வசதிகள் பலரையும் சென்று சேர்ந்துள்ளதால் சமூக ஊடகங்களின் பரவல் அதிகமாக அதிகமாக அந்த சிலை அங்கு ஏன் வைக்கப்பட்டுள்ளது என்று பரப்பப்படும் போலியான காரணங்களும் அதிகமாகி வருகின்றன.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் போலியான காரணங்கள் என்ன, அந்த சிலை அங்கு நிறுவப்பட்டுள்ளதன் உண்மையான காரணம் என்ன என்பது கீழே விளக்கப்பட்டுள்ளது.




**சமூக ஊடகங்களில் கூறப்படும் காரணம் என்னென்னெ?**

இந்து கடவுளான நடராஜர் சிலை அணுவின் அமைப்பை விளக்கும் வகையில் உள்ளதைக் கண்டு வியந்த விஞ்ஞானிகளால், மிகப்பெரிய நடராஜர் சிலை ஒன்றை ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவன வளாகத்தின் நடுவில் வைக்கப்பட்டுள்ளது என்பது ஒரு கூற்று.

"சிதம்பரம் நடராஜர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்தத் தாண்டவம் என்ற கோலம் “காஸ்மிக் டான்ஸ்“ என்று பல வெளிநாட்டு அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. அணுவின் அசைவும் நடராஜரின் நடனமும் ஒன்றாக கருதபடுகிறது. ஒட்டு மொத்த அண்டத்தின் குறியீடாக நடராஜர் அமைந்துள்ளார்," என்பதை குறிப்பிடவே சுவிட்சர்லாந்தின் ஐரொப்பிய ஆராய்ச்சி கூடத்தில் நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளது என்பது இன்னொரு கூற்று.

இதே போன்ற உறுதிசெய்யப்படாத மற்றும் அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்படாத எண்ணற்ற காரணங்கள் சமூக ஊடகங்களிலும் இணையதளங்களிலும் பல ஆண்டுகளாக உலாவி வருகின்றன.

**சிலையை செய்தவர் என்ன சொல்கிறார்?**

கூடுதலாக இன்னொரு சுவாரசியமான தகவல் இந்த சிலையைச் செய்தவர் ஒரு தமிழர். அதுவும் அவர் ஒரு கடவுள் மறுப்பாளர்.

டெல்லியில் உள்ள இந்திய அரசின் நிறுவனமான “சென்ட்ரல் காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் எம்போரியம்“ 1998இல் அளித்த ஆர்டரின்பேரில் தாம் இந்திய வெளியுறவுத் துறைக்கு சிலையைச் செய்து கொடுத்ததாகக் கூறுகிறார் கும்பகோணத்தில் சிற்பக்கூடம் நடத்தி வந்த சிற்பி ராஜன்.



1980களில் இருந்தே பல ஆண்டுகளாக டெல்லி சென்று கண்காட்சி உள்ளிட்டவற்றில் கலந்து கொண்டு, அந்த நிறுவனத்துடன் தொழில் ரீதியான தொடர்பில் இருந்த தமக்கு, அந்நிறுவனம் மூலம் இந்திய வெளியுறவுத் துறைக்காக அந்த சிலை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது என்று அவர் கூறுகிறார்.

என் நம்பிக்கைக்கும் தொழிலுக்கும் தொடர்பு இல்லை என்று கூறும் ராஜன், இந்த சிலை நிறுவப்பட்டதற்கான காரணமாகப் பகிரப்படும் தவறான தகவல்களை தானே பல முறை கடந்து வந்துள்ளதாகக் கூறுகிறார்.

தான் தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில் தலித் தொழிலாளர்கள் பலரையும் சிலை செய்ய பயன்டுத்தியிருக்கிறார் சிற்பி ராஜன்.

**உண்மையான காரணம் என்ன?**

இந்தியா மற்றும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனம் இடையில் 1960களில் ஏற்பட்ட தொடர்பு பல்லாண்டுகளாக நீடித்து வருவதைக் கொண்டாடும் வகையில் இந்தியா அளித்த பரிசுதான், 39 மற்றும் 40 என எண்ணிடப்பட்ட கட்டடங்களுக்கு இடையே உள்ள சதுக்கத்தில் நிறுவப்பட்டுள்ள நடராஜர் சிலை என்கிறது அந்த ஆய்வு மையத்தின் அலுவல் பூர்வ இணையதளம்.



நடனமாடும் நிலையில் உள்ள சிவன் இந்து மதத்தில் நடராஜர் என்று அழைக்கப்படுவதாகவும், நடனத்தின் மூலம் சிவன் பிரபஞ்சத்தை ஆக்கவும், இயக்கவும் அழிக்கவும் முடியும் என்பது இந்து மதத்தில் நம்பிக்கையாக உள்ளது என்றும் அந்த இணையதளம் கூறுகிறது.

“காஸ்மிக் டான்ஸ்“ என்று வழங்கப்படும் நடராஜரின் பிரபஞ்ச நடனத்தை துணை அணுத்துகள் அல்லது அணுவகத்துகளின் (Sub atomic particles) நகர்வுடன் உருவகப்படுத்தும் வகையிலேயே இந்திய அரசு இந்த சிலையைத் தேர்வு செய்தது என்று கூறுகிறது ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிறுவனத்தின் கேள்வி - பதில் பக்கம் ஒன்று.

இந்து மதத்தில் நம்பிக்கையாக கருதப்படுகிறது என்று கூறப்படும் மேற்கண்ட காரணங்களே, அறிவியல் ரீதியாகவும் உண்மையானவை எனும் தவறான கூற்றுடன் இணையம் மூலம் பரவி வருகிறது.

நன்றி: தமிழ் பிபிசி

# 2008 ஆம் ஆண்டு தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய மாவீரர் நாள் உரை...



தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
நவம்பர் 27, 2008.
எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று மாவீரர் நாள்.

தமிழீழத் தாய்நாட்டின் விடிவிற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்து, எமது இதயமெல்லாம் நிறைந்து நிற்கும் எம்முயிர் வீரர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்கும் புனித நாள்.

ஆண்டாண்டு காலமாக அந்நிய ஆதிக்கப் பிடிக்குள் அடங்கிக்கிடந்த எமது தேசத்தை, ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடிபணியாத அடங்கா மண்ணாக மாற்றிவிட்ட எமது வீரமறவர்களைப் பூசித்து வணங்கும் திருநாள்.

எமது தேசம் விடுதலை பெற்று, எமது மக்கள் சுதந்திரமாக, தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற சத்திய இலட்சியத்திற்காக மடிந்த எமது மான வீரர்களை எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

எமது மாவீரர்கள் இந்த மண்ணை ஆழமாக நேசித்தார்கள். தாயக விடுதலைக்காகத் தமது கண்களைத் திறந்த கணம் முதல் நிரந்தரமாக மூடிய கணம் வரை அவர்கள் புரிந்த தியாகங்கள் உலக வரலாற்றில் ஒப்பற்றவை. எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.

இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன. அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது. இந்த மண்ணிலேதான் எமது இனம் காலாதிகாலமாக,கொப்பாட்டன், பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறது. எமது இனச் சரித்திரம் நிலைபெற்ற இந்த மண்ணை ஆழமாகக் காதலித்து, இந்த மண்ணிற்காகவே மடிந்து, இந்த மண்ணின் மடியிலேயே எமது மாவீரர்கள் படுத்துறங் குகிறார்கள். அவர்கள் பள்ளி கொள்ளும் இந்த மண் எமக்கேயுரித்தான மண். எமக்கே சொந்தமான மண். இந்த வரலாற்று மண்ணை ஆக்கிரமித்து, அடக்கியாள சிங்களம் திமிர்கொண்டு நிற்கிறது தீராத ஆசை கொண்டு நிற்கிறது.

மனித துயரங்களெல்லாம் அடங்காத, அருவருப்பான ஆசைகளிலிருந்தே பிறப்பெடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்தும் விடுபட முடியாது. மண் ஆசை பிடித்து, சிங்களம் அழிவு நோக்கிய இராணுவப் பாதையிலே இறங்கியிருக்கிறது. உலகத்தையே திரட்டி வந்து எம்மோடு மோதுகிறது. இராணுவ வெற்றி பற்றிய கனவுலகில் வாழ்கிறது. சிங்களத்தின் இந்தக் கனவுகள் நிச்சயம் கலையும். எமது மாவீரர் கண்ட கனவு ஒருநாள் நனவாகும். இது திண்ணம்.

எனது அன்பான மக்களே!

என்றுமில்லாதவாறு இன்று தமிழீழத் தேசம் ஒரு பெரும் போரை எதிர்கொண்டு நிற்கிறது. இப்போர் வன்னி மாநிலமெங்கும் முனைப்புப்பெற்று உக்கிரமடைந்து வருகிறது.

சிங்கள அரசு இராணுவத்தீர்வில் நம்பிக்கைகொண்டு நிற்பதால், இங்கு இப்போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து விரிவாக்கம் கண்டு வருகிறது. தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள இராணுவ இறையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம். இந்த நோக்கத்தைச் செயற்படுத்தி விடும் எண்ணத்தில், தனது போர்த்திட்டத்தை முழுமுனைப்போடு முன்னெடுத்து வருகிறது. தனது முழுப் படை பலத்தையும் ஆயுத பலத்தையும் ஒன்றுதிரட்டி, தனது முழுத் தேசிய வளத்தையும் ஒன்றுகுவித்து, சிங்கள தேசம் எமது மண் மீது ஒரு பாரிய படையெடுப்பை நிகழ்த்தி வருகிறது. சிங்கள இனவாத அரசு ஏவிவிட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து, எமது விடுதலை வீரர்கள் வீராவேசத்தோடு போராடி வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளும் தமிழ் இன அழிப்புப் போருக்கு முண்டுகொடுத்து நிற்க, நாம் தனித்து நின்று, எமது மக்களின் தார்மீகப் பலத்தில் நின்று, எமது மக்களின் விடிவிற்காகப் போராடி வருகிறோம்.

இன்று எமது விடுதலை இயக்கம் மிகவும் கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம். எமது பலத்திற்கு மிஞ்சிய பாரிய சக்திகளையெல்லாம் நாம் எதிர்கொண் டிருக்கிறோம். வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திக ளோடு நேரடியாக மோதியிருக்கிறோம். அலையலையாக எழுந்த எதிரியின் ஆக்கிரமிப்புக்களை எல்லாம் நேருக்கு நேர் நின்று சந்தித்திருக்கிறோம். பெருத்த நம்பிக்கைத் துரோகங்கள், பெரும் நாசச் செயல்கள் என எமக்கு எதிராகப் பின்னப்பட்ட எண்ணற்ற சதிவலைப் பின்னல்களை எல்லாம் தனித்து நின்று தகர்த்திருக்கிறோம். புயலாக எழுந்த இத்தனை பேராபத்துக்களையும் மலையாக நின்று எதிர்கொண்டோம். இவற்றோடு ஒப்புநோக்குகையில், இன்றைய சவால்கள் எவையும் எமக்குப் புதியவையும் அல்ல, பெரியவையும் அல்ல. இந்தச் சவால்களை நாம் எமது மக்களின் ஒன்றுதிரண்ட பலத்துடன் எதிர்கொண்டு வெல்வோம்.

சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதன்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண் பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்ந்த மண். இந்த மண்ணிலேதான் எமது ஆதிமன்னர்கள் இராச்சியங்களும் இராசதானிகளும் அமைத்து அரசாண்டார்கள். எமது இன வேர் ஆழவேரோடியுள்ள இந்த மண்ணிலே, நாம் நிம்மதியாக, கௌரவமாக, அந்நியரின் அதிகார ஆதிக்கமோ தலையீடுகளோ இன்றி, எமது வாழ்வை நாமே அமைத்து வாழ விரும்புகிறோம். ஆங்கிலேய காலனியாதிக்கம் அகன்று, சிங்கள ஆதிக்கம் எம்மண் மீது கவிந்த நாள் முதல், நாம் எமது நீதியான உரிமைகளுக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் போராடி வருகிறோம்.

சுயநிர்ணய உரிமைக்கான எமது இந்த அரசியல் போராட் டம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துச் செல்கிறது. இந்த நீண்ட படிநிலை வரலாற்றில், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு வடிவங்களாக எமது போராட் டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டு வந்திருக்கிறது. ஆரம்பத்தில் அமைதியாக, மென்முறை வடிவில், ஜனநாயக வழியில் அமைதி வழிப்போராட்டங்கள் வாயிலாக எமது மக்கள் நீதிகேட்டுப் போராடினார்கள். அரசியல் உரிமை கோரி, தமிழ் மக்கள் தொடுத்த சாத்வீகப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு ஆயுத வன்முறை வாயிலாக மிருகத்தனமாக ஒடுக்க முனைந்தது. அரச ஒடுக்குமுறை கட்டுக்கடங்காமல் உக்கிரம் அடைந்து, அதன் தாங்க முடியாத கொடுமைகளை எமது மக்கள் சந்தித்தபோதுதான், வரலாற்றின் தன்னியல்பான விதியாக எமது விடுதலை இயக்கம் பிறப்பெடுத்தது. சிங்கள இனவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்திலிருந்து எமது மக்களைப் பாதுகாக்கவே நாம் ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயுத வன்முறை வழியை நாம் விரும்பித் தேர்வு செய்யவில்லை. வரலாறுதான் எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது.

தவிர்க்கமுடியாத தேவையின் நிர்ப்பந்தமாக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட போதும், நாம் எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குப் போரை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வுகாணவே விரும்புகிறோம். இதற்கு எமது விடுதலை இயக்கம் என்றுமே தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு என்றுமே எதிரானவர்கள் அல்லர். அதேநேரம், நாம் சமாதானப் பேச்சுக்களிற் பங்குபற்றத் தயங்கியதும் இல்லை. சமாதான வழிமுறை தழுவி, எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க, திம்புவில் தொடங்கி, ஜெனீவா வரை பல்வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுக்களில் பங்குபற்றி வந்திருக்கிறோம். எமது மக்களின் தேசியப் பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வுகாண நாம் முழுமனதுடனும் நேர்மையுடனும் செயற்பட்ட போதும் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியிலேயே முடிந்தன. சிங்கள அரசுகளின் விட்டுக்கொடாத கடும்போக்கும், நாணயமற்ற அரசியல் அணுகுமுறைகளும் இராணுவ வழித் தீர்விலான நம்பிக்கைகளுமே இந்தத் தோல்விகளுக்குக் காரணம்.

பிரமிப்பூட்டும் போரியற் சாதனைகளைப் படைத்து, சிங்கள ஆயுதப் படைகளின் முதுகெலும்பை முறித்து, படைவலுச் சமநிலையை எமக்குச் சாதகமாகத் திருப்பியபோதும், நாம் நோர்வேயின் அனுசரணையிலான அமைதிப் பேச்சுக்களிற் கலந்துகொண்டோம். போருக்கு முடிவுகட்டி, ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த அமைதிப் பேச்சுக்களில் நேர்மையுடனும் பற்றுறுதியுடனும் பங்குகொண்டோம். ஆயுதப் படைகளின் அத்துமீறிய செயல்களையும் ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் பொறுத்துக்கொண்டு, அமைதி பேணினோம். இத்தனையையும் நாம் செய்தது, சிங்கள இனவாத அரசு எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நீதி செய்யும் என்ற நம்பிக் கையினால் அன்று. சிங்கள அரசின் சமாதான முக மூடியைத் தோலுரித்துக்காட்டி, சமாதானத்தில் எமக்குள்ள பற்றுறுதியை உலகத்திற்கு வெளிப்படுத்தவே நாம் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் அரங்கேற்றப்பட்ட இந்த அமைதிப் பேச்சுக்கள், தமிழ் மக்களின் அன்றாட அவசர வாழ்க்கைப் பிரச்சினை களையோ இனப்பிரச்சினையின் மூலாதாரப் பிரச்சினை களையோ தீர்ப்பவையாக அமையவில்லை. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, தமிழர் தேசத்தையும் அனைத்துலக சமூகத்தையும் ஏமாற்றுவதற்கே சிறிலங்கா அரசு இப்பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்தியது. பேச்சு என்ற போர்வையில், சிங்கள அரசு தமிழர் தேசம் மீது ஒரு பெரும் படையெடுப்பிற்கான ஆயத்தங்களைச் செய்தது. போர் ஓய்வையும் சமாதானச் சூழலையும் பயன்படுத்தி, தனது நலிந்து போன பொருளாதாரத்தை மீளக்கட்டி, தனது சிதைந்துபோன இராணுவப் பூதத்தை மீளவும் தட்டியெழுப்பியது. பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போர் ஒத்திகைகளைச் செய்தது. தமிழர் தேசம் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, சிங்கள தேசம் போர்த் தயாரிப்பு வேலைகளிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணித்தது.

இதேநேரம், சமாதான முயற்சிகளின் காவலர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திய உலக நாடுகளில் ஒரு பகுதியினர் அவசரப்பட்டு அதிரடி நடவடிக்கையில் இறங்கியமை, சமாதான முயற்சிகளுக்கே ஊறுவிளை விப்பதாக அமைந்தது. எமது சுதந்திர இயக்கத்தை இந் நாடுகள் ஒரு பயங்கரவாதக் குழுவாகச் சிறுமைப்படுத்திச் சித்திரித்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களின் வரிசையில் பட்டியலிட்டு, எம்மை வேண்டத்தகாதோராக, தீண்டத்தகாதோராக ஒதுக்கி ஓரங்கட்டி, புலம்பெயர்ந்து

வாழும் எம்மக்கள் மீது வரம்பு மீறிய வரையறைகளை விதித்து, கட்டுப்பாடுகளைப் போட்டு, எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக அவர்கள் முன்னெடுத்த அரசியற் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டன. தாம் வாழும் நாடுகளின் அரசியல் சட்டவிதிகளுக்கு அமைவாக, நீதிநெறி வழுவாது எம்மக்கள் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளைக் கொச்சைப்படுத்தி சிங்கள அரசின் இன அழிப்புக்கு ஆளாகி, மனிதப் பேரவலத்திற்கு முகம் கொடுத்து நின்ற தமது தாயக உறவுகளைக் காக்க எமது மக்கள் முன்னெடுத்த மனிதநேய உதவிப் பணிகளைப் பெரும் குற்றவியற் செயல்களாக அடையாளப்படுத்தி, தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் தமிழின உணர்வாளர்களையும் கைது செய்து, சிறைகளிலே அடைத்து, அவமதித்தன. இந்நாடுகளின் ஒரு பக்கச் சார்பான இந்த நடவடிக்கைகள் பேச்சுக்களில் நாம் வகித்த சமநிலை உறவையும் சமபங்காளி என்ற தகைமையையும் வெகுவாகப் பாதித்தன. இது சிங்கள தேசத்தின் இனவாதப் போக்கை மேலும் தூண்டிவிட்டது. சிங்கள இனவாத சக்திகள் உசாரடைந்து, எமக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தின. இது சிங்கள தேசத்தை மேலும் இராணுவப் பாதையிலே தள்ளிவிட்டது.

சிங்கள தேசம் சமாதானக் கதவுகளை இறுகச் சாத்திவிட்டுத் தமிழர் தேசத்தின் மீது போர் தொடுத்தது. அனைத்துலகத்தின் அனுசரணையோடு கைச்சாத்தான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறிந்தது. அப்போது சமாதானம் பேசிய உலக நாடுகள் ஒப்புக்குத்தானும் இதனைக் கண்டிக்கவில்லை கவலை கூடத் தெரிவிக்கவில்லை. மாறாக, சில உலகநாடுகள் சிங்கள தேசத்திற்கு அழிவாயுதங்களை அள்ளிக்கொடுத்து, இராணுவப் பயிற்சிகளையும் இராணுவ ஆலொசனைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றன. இதனால்தான் சிங்கள அரசு தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போரைத் துணிவுடனும் திமிருடனும் ஈவிரக்கமின்றியும் தொடர்ந்து வருகிறது.

இன்று சிங்கள தேசம் என்றுமில்லாதவாறு இராணுவ பலத்திலும் இராணுவ அணுகுமுறையிலும் இராணுவ வழித் தீர்விலும் நம்பிக்கைகொண்டு செயற்படுகிறது. தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்கத்தை நிலை நாட்டி, ஆயுத அடக்குமுறையின் கீழ் தமிழர்களை ஆட்சிபுரிய வேண்டும் என்ற அதன் ஆசை அதிகரித்திருக்கிறது. இதனால் போர் தீவிரம் பெற்று, விரிவுபெற்று நிற்கிறது. இந்தப் போர் உண்மையில் சிங்கள அரசு கூறுவது போல, புலிகளுக்கு எதிரான போர் அன்று. இது தமிழருக்கு எதிரான போர் தமிழ் இனத்திற்கு எதிரான போர் தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட போர் மொத்தத்தில் இது ஓர் இன அழிப்புப் போர்.

இந்தப் போர் எமது மக்களைத்தான் பெரிதும் பாதித்திருக்கிறது. போரின் கொடூரத்தை மக்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, மக்கள் மீது தாங்கொணாத் துன்பப்பளுவைச் சுமத்தி, மக்களைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகத் திருப்பிவிடலாம் என்ற நப்பாசையிற் சிங்கள அரசு செயற்பட்டு வருகிறது. பாதைகளை மூடி, உணவையும் மருந்தையும் தடுத்து, எமது மக்களை இறுக்கமான இராணுவ முற்றுகைக்குள் வைத்துக்கொண்டு, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும் எறிகணை வீச்சுக்களையும் நடாத்தி வருகிறது. சொந்த நிலத்தை இழந்து, அந்த நிலத்தில் அமைந்த வாழ்வை இழந்து, அகதிகளாக அலையும் அவலம் எம்மக்களுக்குச் சம்பவித்திருக்கிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை சதா துன்பச் சிலுவையைச் சுமக்கின்ற மக்களாக எம்மக்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். நோயும் பிணியும் உடல்நலிந்த முதுமையும் சாவுமாக எம்மக்களது வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது. எமது மக்களின் உறுதிப்பாட்டை உடைத்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எமது எதிரியான சிங்கள அரசு இன்று எம்மக்கள் மீது எண்ணற்ற கொடுமைகளைப் புரிந்து வருகிறது. பெரும் அநீதிகளை இழைத்து வருகிறது. உலகில் எங்குமே நிகழாத கொடூரமான அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறது. எமது தேசத்தின் மீது ஒரு பெரும் பொருண்மியப்போரை தொடுத்து, எம்மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து அவர்களது நாளாந்த சீவியத்தைச் சீர்குலைக்கின்ற செயலிலே இறங்கியிருக்கிறது. சிறிலங்கா படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழீழ நிலப்பரப்பில் மாதந்தோறும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போகின்றனர் கொல்லப்படுகின்றனர். சிங்களப் பகுதிகளில் தமிழர் காணாமல் போவதும் கொல்லப்படுவதும் வழமையான நிகழ்ச்சியாகி விட்டது.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழர் பகுதிகளிலே ஒரு மறைமுகமான இன அழிப்புக் கொள்கை இன்று வேகமாகச் செயற்படுத்தப்படுகிறது. சாவும் அழிவும் இராணுவ அட்டூழியங்களும் சொந்த மண்ணிலேயே சிறைப்பட்ட வாழ்வுமாக எம்மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரம் மிகக்கொடியது. கைதுகளும் சிறை வைப்புக்களும் சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் கொலைகளும் காணாமல் போதல்களும் புதைகுழிகளுக்குள் புதைக்கப்படுவதுமாக ஒரு நச்சு வட்டத்திற்குள் எமது மக்களது வாழ்வு சுழல்கிறது. இருந்தபோதும், எமது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும் செய்துவிடமுடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது. எம்மக்கள் துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள். அழிவுகளையும் இழப்புக்களையும் நித்தம் சந்தித்து வாழ்பவர்கள். இதனால் அவர்களது இலட்சிய உறுதி மேலும் உரமாகியிருக்கிறது. விடுதலைக்கான வேகம் மேலும் வீச்சாகியிருக்கிறது.

பெரும் போருக்கு முகம் கொடுத்தவாறு, நாம் இத்தனை காலமாக இத்தனை தியாகங்களைப் புரிந்து போராடி வருவது எமது மக்களின் சுதந்திரமான, கௌரவமான, நிம்மதியான வாழ்விற்கே அன்றி வேறெதற்காகவும் அன்று. உலகத் தமிழினத்தின் ஒட்டுமொத்தப் பேராதரவோடு நாம் இந்தப் போராட்டத்தை நடாத்தி வருகிறோம். அதுமட்டுமன்று, எமது போராட்டம் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கோ அவற்றின் புவிசார் நலன்களுக்கோ பொருளாதார நலன்களுக்கோ குறுக்காக நிற்கவில்லை. எமது மக்களது ஆழமான அபிலாசைகளும் எந்தவொரு தேசத்தினதும் எந்த மக்களினதும் தேசிய நலன்களுக்குப் பங்கமாக அமையவில்லை. அத்தோடு இந்த நீண்ட போராட்ட வரலாற்றில், நாம் திட்டமிட்டு எந்தவொரு தேசத்திற்கு எதிராகவும் நடந்துகொண்டதுமில்லை.

எமது விடுதலை இயக்கமும் சரி எமது மக்களும் சரி என்றுமே உலக நாடுகளுடனும் எமது அண்டை நாடான இந்தியாவுடனும் நட்புறவை வளர்த்துச் செயற்படவே விரும்புகிறோம். இதற்கான புறநிலைகளை உருவாக்கி, நட்புறவுப் பாலத்தை வளர்த்துவிடவே சித்தமாக இருக்கிறோம். எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி, காத்திரமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குக் காத்து நிற்கிறோம். எம்மை தடைசெய்துள்ள நாடுகள், எமது மக்களது அபிலாசைகளையும் ஆழமான விருப்பங்களையும் புரிந்துகொண்டு, எம்மீதான தடையை நீக்கி, எமது நீதியான போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டுமென அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

இன்று இந்திய தேசத்திலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அங்கு அடங்கிக்கிடந்த எமது போராட்ட ஆதரவுக்குரல்கள் இன்று மீளவும் ஓங்கி ஒலிக்கின்றன. எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற ஏதுநிலைகள் வெளிப்படுகின்றன. கனிந்து வருகின்ற இந்தக் கால மாற்றத்திகேற்ப, இந்தியப் பேரரசுடனான அறுந்துபோன எமது உறவுகளை நாம் மீளவும் புதுப்பித்துக்கொள்ள விரும்புகிறோம். அன்று, இந்தியா கைக்கொண்ட நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் தலையீடுகளும் ஈழத்தமிழருக்கும் அவர்களது போராட்டத்திற்கும் பாதகமாக அமைந்தன. இனவாத சிங்கள அரசு தனது கபட நாடகங்களால் எமது விடுதலை இயக்கத்திற்கும் முன்னைய இந்திய ஆட்சிப்பீடத்திற்கும் இடையே பகைமையை வளர்த்து விட்டது. இந்தப் பகைப்புலத்தில் எழுந்த முரண்பாடுகள் மேலும் முற்றிப் பெரும் போராக வெடித்தது. இதன் ஒட்டுமொத்த விளைவாக எமது மக்கள் பெரும் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்ற காரணத்தினால்தான் எமது இயக்கத்திற்கும் இந்திய அரசிற்கும் பிணக்கு ஏற்பட்டது. எனினும், இந்தியாவை நாம் ஒருபோதும் பகை சக்தியாகக் கருதியதில்லை. இந்தியாவை எமது நட்புச் சக்தியாகவே எமது மக்கள் என்றும் கருதுகிறார்கள். எமது தேசியப் பிரச்சினை விடயத்தில் இந்தியப் பேரரசு ஒரு சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

காலமும் கடல் கடந்த தூரமும் எம்மைப் பிரிந்து நிற்கின்ற போதும், எமது மக்களின் இதயத்துடிப்பை நன்கறிந்து, தமிழகம் இந்தவேளையிலே எமக்காக எழுச்சிகொண்டு நிற்பது தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது விடுதலை இயக்கத்திற்கும் பெருத்த ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எம்மக்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி, அன்புக்கரம் நீட்டும் தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் இந்தியக் தலைவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே எமது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேநேரம், எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்திற்கு ஆதரவாக வலுவாகக் குரலெழுப்புவதோடு, இந்தியாவிற்கும் எமது இயக்கத்திற்கும் இடையிலான நல்லுறவிற்குப் பெரும் இடைஞ்சலாக எழுந்து நிற்கும் எம்மீதான தடையை நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

எனது அன்பான மக்களே!

சிங்கள அரசியல் உலகத்தில் பெரும் மாற்றங்களோ திருப்பங்களோ நிகழ்ந்து விடவில்லை. அங்கு அரசியல், போராகப் பேய் வடிவம் எடுத்து நிற்கிறது. அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானைப் போற்றி வழிபடும் அந்தத் தேசத்திலே இனக்குரோதமும் போர் வெறியும் தலைவிரித்தாடுகின்றன. அங்கு போர்ப் பேரிகைகளைத்தான் எம்மால் கேட்க முடிகிறது. போரை கைவிட்டு, அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்குமாறு அங்கு எவரும் குரல் கொடுக்கவில்லை. சிங்களத்தின் அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் வரை, பத்திரிகையாளர்களிருந்து பாமர மக்கள் வரை போருக்கே குரல் கொடுக்கிறார்கள்.

தமிழர் தேசம் போரை விரும்பவில்லை. வன்முறையை விரும்பவில்லை. அகிம்சை வழியில் அமைதி வழியில் நீதி வேண்டி நின்ற எம் மக்களிடம் சிங்கள தேசம்தான் போரைத் திணித்திருக்கிறது. எமது பிராந்தியத்தைச் சேர்ந்த சார்க் நாட்டுத் தலைவர்கள் கொழும்பிலே கூடியபோது, எமது தேசத்தின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி நாம் அறிவித்த பகைமைத் தவிர்ப்பையும் ஏற்க மறுத்து, அதனை ஏளனம் செய்து போரைத் தொடர்ந்து நிற்பதும் சிங்கள தேசம்தான். ஏற்றுக்கொள்ளவே முடியாத அவமதிப்பூட்டும் நிபந்தனைகளை விதித்துப் போரைத் தொடர்வதும் சிங்கள தேசம்தான்.

சிங்கள தேசம் ஒரு பெரும் இன அழிப்புப் போரை எமது மண்ணிலே நிகழ்த்தி வருகிறது. இந்த உண்மையை மூடிமறைத்து, உலகத்தைக் கண்கட்டி ஏமாற்ற சிங்கள அரசுகள் காலங்காலமாகப் பல்வேறு அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வருகின்றன. வட்டமேசை மாநாட்டில் தொடங்கி, இன்று அனைத்து கட்சிக் கூட்டம் என இந்த ஏமாற்று நாடகத்தின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட்டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்கவில்லை. மாறாக, சிங்கள தேசம் தனது படைக்கல சக்தியால் தமிழர் நிலங்களைப் பற்றியெரிய வைத்திருக்கிறது. தமிழரது அமைதியைக் கெடுத்து, அவர்களது நிலத்தில் அமைந்த வாழ்வை அழித்து, அவர்களை அகதிகளாக அலைய வைத்திருக்கிறது. தமிழரின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தமிழர் தேசத்தை இரண்டாகப் பிளந்து, அங்கு தமிழர் விரோத ஆயுதக்குழுக்களை ஆட்சியில் அமர்த்தி, இராணுவப் பேயாட்சி நடாத்துகிறது. புலிகளைத் தோற்கடித்த பின்னர்தான் தமது தீர்வுத்திட்டத்தை அறிவிப்போம் எனக்கூறிக்கொண்டு, போரை நடாத்துகிறது. தமிழர்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றொழித்த பின்னர், சிங்களம் யாருக்கு தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் உண்மையான பிரதிநிதிகளை, அவர்களது பேரம் பேசும் சக்தியை அழித்துவிட்டு, எப்படிச் சிங்களம் தீர்வை முன்வைக்கப்போகிறது? தமிழரின் வரலாற்றுச் சொத்தான தாயக நிலத்தையே ஏற்க மறுக்கும் சிங்களம், எப்படி எமது மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை முன்வைக்கப்போகிறது?

தமிழரின் தேசியப் பிரச்சினை விடயத்தில், சிங்களம் அடக்குமுறை என்ற ஒரே பாதையில்தான் சென்றுகொண்டிருக்கிறது. இராணுவ வன்முறைப் பாதையைக் கைவிட்டு, சிங்களம் நீதி வழங்கும் என எமது மக்கள் வைத்திருந்த சிறிய நம்பிக்கையும் இன்று அடியோடு அழிந்துவிட்டது. சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம் இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறுவதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.

பூமிப்பந்திலே ஈழத்தமிழினம் ஒரு சிறிய தேசமாக இருக்கின்றபோதும் நாம் பெரும் வலிமை வாய்ந்த ஒரு சக்திமிக்க இனம். தன்னிகரற்ற ஒரு தனித்துவமான இனம். தனித்துவமான மொழியையும் பண்பாட்டு வாழ்வையும் வரலாற்றையும் கொண்ட ஒரு பெருமைமிக்க இனம். இப்படியான எமது அருமை பெருமைகளையெல்லாம் அழித்து, தமிழீழ தேசத்திலே தமிழரின் இறையாண்மையைத் தகர்த்துவிட்டு, இராணுவப் பலத்தாற் சிங்களம் தனது இறையாண்மையை திணித்துவிடத் துடிக்கிறது. தமிழரின் சுதந்திர இயக்கம் என்ற வகையில், நாம் எமது மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பிற்கோ சிங்கள ஆதிக்கத்திற்கோ என்றுமே இடமளிக்கப் போவதில்லை.

எத்தனை சவால்களுக்கு முகம்கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக் கொள்வோமாக.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்”

வே. பிரபாகரன்
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.



**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com


விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203






www.itouchcarwash.com
I TOUCH CAR WASH LTD
Professional Auto Detailing
HAND CAR WASH

WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved

புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca
ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான திருத்த வேலைகளையும் தரமான முறையில் திருத்திக்கொள்ள நாங்குகள்
Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us

Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6

HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end products on all our vehicles

BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS




காத்திருக்கும்
கண்களும்
ஏங்கித் தவிக்கும்
நெஞ்சங்களும்
பார்த்திருப்பது
உந்தன்
மீள் வரவைத்தான்

ஆயிரம்
தடைகள் வரினும்
அலையெனப்
பகை வரினும்
அசையாது, அஞ்சிடாது
ஓயாது அலையாய்
மூசியெழும்
தமிழர் தேசிய இனத்தின்
விடுதலைச் சூரியன் நீ

ஒற்றை
உரைக்காய்
காத்திருந்த
தேசங்களும்
உந்தன்
அறிவைப் பார்த்து
மெய்சிலிர்த்த
தலைவர்களும்
தங்கள்
தேசப் படைகளுக்கு
கற்பிப்பது உந்தன்
போர்க் கலைப்
பாடங்களைத்தான்

அடுத்து எங்கே
அடிவிழும்
அடுத்து எங்கே
இடி விழும் என்று
அஞ்சித் திகைத்த
பகைவனும்
எல்லாம் முடிந்து
விட்டதாக
உன்போல்
உடலங்காட்டிச்
சொல்லியும்
நம்ப மறுத்து
உன் பாதையின்
தடம் தெரியாது
உன் பயணத்தின்
விடை தெரியாது
இன்றும் அஞ்சித்
திரிகின்றான்.

தமிழர் தேசத்தை
உலக வரைபடத்தில்
அழகாய் வரைந்த
எங்கள் தேசத்தின்
விடுதலைப் பேரொளியே
காலச் சூரியன்
மீண்டும்
உதிக்கும் என்று
நம்பிக்கையோடுதான்
காத்திருக்கின்றது
உலகத் தமிழினம்.
அதுவரை ஓயாது
அலைகள் மட்டுமல்ல
உந்தன் மூச்சும்தான்...




GTA CHIROPRACTIC CENTRE
We are specialized in
• Motor Vehicle Accidents
• Slip & Fall
• WSIB
• Extended Health Care
• Sports Injuries
• Physiotherapy
• Chiropractic
• Orthotics Shoes
• Massage Therapy
• Acupuncture
Health is Wealth
Pathmaraj (Pat) Pathman
Tel: 416-321-0482 Cell: 416-528-5318
Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com


R.S தங்கப் பட்டறை
நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்
குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்
திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்
பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்
தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough


FRONTLINE COMMUNITY CENTRE
குடிவரவாளர்களுக்கான சேவைகள்
பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு
வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை
பொதுவான திட்டங்கள்
மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்
வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்
முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்
தன்னார்வத் தொண்டாற்றல்
(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9
Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/


Nickon Photo & Video
Digital Album
நிக்கொன் போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio




# எல்லாளன் குளம்

## ஒரு வரலாற்றுக் குறிப்பு




இலங்கையின் வரலாற்று மரபு பதியப்பட்டுச் சென்ற முறையில் ஏற்பட்ட பிறழ்வினால் பல பின்விளைவுகள் உருவாகியுள்ளன. வில்லியம் கைகர் குறிப்பிட்டது போன்று இலங்கையின் வரலாற்று மரவில் (மகாவம்சத்தில்) பதியப்பட்டவற்றை விட விலக்கப்பட்டுள்ளவையே இன்று இத்தீவின் பிரச்சினைகளுக்கு முக்கியமானவையாகும் என்பது இங்கு நோக்கத்தக்கது. பதியப்பட்டுச் சென்றவற்றுள் கூட இனங்காணப்பட்டு எவ்வழியிலேனும் தீர்வு காணமுடியாத வகையில் உள்ள சம்பவத் தொடர்களும், இடையீடுகளும், அடையாளம் காணப்படமுடியாத வகையில் அமைந்த ஆட்சியாளர்களது பெயர் வடிவங்களும் இன்று இலங்கையின் வரலாற்றுப் பிரச்சினைகளுள் தீர்க்கப்பட முடியாதவையாக உள்ளன. G.C மென்டிஸ் போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இப்பிரச்சினைகள் தொடர்பாக நன்கு ஆராய்ந்தள்ளனர். இவ்வாறான வரலாற்றுச் சிக்கல்கள் இலங்கை வரலாறு பொறுத்து தோற்றம் பெற்றதற்கான பிரதான ஆடிப்படையாக அமைந்தது பாளி மொழியே. வரலாற்று மரபு பாளி மொழியில் பதிவு செய்யப்பட்டமையே முதலாம்தர சிக்கல்களைத் தோற்றுவித்த காரணியாயிற்று.

பௌத்த மதத்தின் செல்வாக்கினூடாக இம் மொழி இலங்கையில் தனக்குரிய தளத்தினை அமைத்துக்கொள்ள விழைந்த நிகழ்வு காலப்போக்கில் இங்கிருந்திருக்கக் கூடிய பிற வழிபாட்டு மொழிகளிடையே (Religious Languages) பிளவினை ஏற்படுத்தி நின்று, அதன் தொடர்ச்சியாக இனங்களுக்கிடையேயான பிறழ்வாகவும் உருவாக வழி அமைத்தது. இதன் விளைவாக பாளி மொழிக் குடும்பத்துடன் சம்பந்தப்படாத பிற சுதேச மொழிவழிப் பெயர்கள்-இடங்கள்-கடவுளர்கள் ஆகியன பாளிமொழியில் பதிவுசெய்யப்பட்ட மொழி வழக்கினின்றும் மாறறம் செய்யப்பட்டோ அல்லது உருக்குலைக்கப்பட்டன என்பது தெளிவாகின்றது. (ஒரு வேளை பாளி மொழியின் இயல்பு காரணமாகவும் அவ்வாறு ஏற்பட்டதாகக் கொள்ள முடியும்.)

இப்பின்னணியிலேயே கிறீஸ்துவுக்கு முற்பட்ட — பிற்பட்ட காலகட்டங்களில் அனுராதபுரத்தில் அதிகாரத்திலிருந்த திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்கள் பெரிதும் திரிபுப்படுத்தப்பட்ட வகையில் பாளி மொழியில் வரலாற்று மரபின் கண் இணைக்கப்பட்டது. (கி. பி. 4ம் நூற்றாண்டில் முதன் முதலாக "தீபவங்ஸ" என்ற வரலாற்று மரபு பதிவுசெய்யப்பட்டது) இவ்வாறு இணைக்கப்பட்ட திராவிட வம்ச ஆட்சியாளர்களது பெயர்களையோ-சாதனைகளையோ சமகால சாசன வழக்கினூடுதன்னிலும் அடையாளம் கண்டகொள்ள பிரச்சினை இன்று வரைக்கும் தொடர்வதனைக் காண்கிறோம்.

கிறீஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் ஏறத்தாழ 88 வருடங்களாத் திராவிட வம்ச ஆட்சியாளர்கள் ஆனுராதபுரத்தில் இடைவிட்டு ஆட்சியை நடாத்தியிருந்தமையை இப்பாளிப்பதிவு நிரலிலிருந்தே கண்டகொள்கிறோம். ஆனால் அவ்வாட்சியாளர்களது பெயர்கள் வேறு எவ்விடத்திலுமே அடையாளம் கண்டுகொள்ளமுடியாத வகையில் திரிபுபடுத்தப்பட்டு பெயர் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சமகாலத் தமிழகத்தில் சங்ககால குறுநில மன்னர் பலரது பெயர்கள் (சங்க இலக்கியங்கள் வாயிலாக தொல்லியற்சான்றுகள் வாயிலாக மேலும் உறுதிசெய்யப்பட்டு விட்டன. ஆனால் ஈழத்துப் பாளிப் பெயர்கள் மாத்திரம் இன்னும் தெளிவாக அடையாளம் காணமுடியாதுள்ளது என்று சிந்தித்தால் இது இலங்கை மரபில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்றுப் பிறழ்வினையே வெளிப்படுத்தி நிற்கும். வட இந்தியப் பேரரசனான அசோகன் தனது 2வது, 13 வது கிர்னார் பாறைப் பிரகடனங்களில் தனது பேரரசின் அயல்நாடுகளாக "சேர, சோட, பாட,



சத்தியபுத்ரோ, கேரளபுத்ரோ, தம்மிர பருணி" என பிராகிருத மொழியில் வரைந்துள்ளமையைக் காண்கின்றோம். இப்பெயர் வரிசையில் அடையளம் காணப்பட்டாதிருந்த "சத்திய புத்ரோ" என்பவர்களை சங்ககாலத்து குறுநில மன்னர் பரம்பரையில் ஆட்சிபுரிந்த ஆதியமான் நெடுமான் ஆஞ்சியுடன் ஆய்வாளர் அடையாளம் கண்டுள்ளனர். அம் மன்னனுடைய நாணய வெளியீடு ஒன்றும் "சத்தியபுத்ர" என்ற பொறிப்புடன் அண்மையில் தமிழகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டமையானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இம் மன்னனே "நெடுங்காலம்" வாழ்வதற்கான நெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்துப் புகழ் பெற்றான். எனவும் குறுப்பிடப்படுகின்றது. தமிழக நிலை இவ்வாறாயின் இலங்கையின் இந்நிலைக்குக் காரணம் என்ன? பாளி மொழியை பதிவேட்டு மொழியாகப் பயன்படுத்தியமையா? இதுவே திராவிட மன்னர்களது பெயர் வடிவத்தின் குழப்பத்திற்குக் காரணமா? அனுராதபுரத்தில் 44 வருட காலம் ஆளமையுடனும் சாதனைகளுடனும் ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனது பெயர் எவ்வாறு இலங்கை வரலாற்று மரபில் சிதைவுற்றது? அவனது சாதனைகள் யாவுமே பதிவு செய்யப்படாமல் மறைக்கப்பட்டே விட்டன. இந்நிலையில் இக்கட்டுரையின் நோக்கமானது எல்லாளனுடைய பெயரில் குடாநாட்டின் கண் எள்ள வடமராட்சிப் பரப்பில் காணப்படும் ஒரு குளத்தின் பெயர், பின்பு கிராமத்தின் பெயராக மாற்றம் பெற்றுக் காணப்படுவதனை எடுத்துக்காட்டுவதாக அமையும். "எலாரா" என்று பாளி மொழியில் பதியப்பட்ட மன்னனை "எல்லாளன்" என்றும் "ஈழராசா" என்றும் எமது ஆய்வாளர் சிலர் அடையாளம் கண்டுள்ளனர். இருப்பினும் அம்மன்னனது பெயரில் உள்ள ஒரு நீர்ப்பாசன நிறுவனத்தின் பெயர் பின்னர் கிராமத்தின் பெயராகமாற்றம் பெற்றுக்கொண்டிருந்தமையை இச்சிறு கட்டுரை முதன் முதலாக வெளிப்படுத்த எத்தனிக்கின்றது.

வடமராட்சிப் பரப்பில் உள்ள உடுப்பிட்டி பிராந்தியத்தில் உள்ளடக்கப்பட்ட ஒரு பழைமையான கிராமமாகக் காணப்படுவது எள்ளன் குளமாகும். எள்ளன் குளம் என்ற பெயர் அக்கிராமத்தின் மத்தியிலுள்ள ஒரு சிறிய நீர்ப் பாசனக் குளத்துக்குரிய தாக வழங்கி, பின்னர் கிராமத்தின் பெயராக மாற்றமடைந்ததது. எள்ளன் குளம் என்ற பதமானது எல்லாளன் குளம் என்ற அதன் பழைய பெயர்வடிவிலிருந் தே மருவியதாகக் கொள்ள வேண்டம். மொழியல் ரீதியாகவும் அவ்வழக்கினுடைய மரூவு நிலை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. (வடமராட்சியில் உள்ள "கங்குண்டான்" என்ற கிராமத்தின் பெயர் "கங்கை கொண்டான்" என்ற அதன் ஆரம்பப் பெயர் வழக் கினின்றும் மரூவியதை தோம்புப் பதிவுகள் உறுதிப்படுத்தியுள்ளமை இங்கு எடுத்துக் காட்டத்தக்கது.) எனவே எல்லாளன் குளம் என்பதையே தற்காலத்தில் நாம் வழங்கும் எள்ளன் குளம் என்ற பதம் உணர்த்தி நிற்கின்றதென்றால் அது தவறாகாது.

எள்ளன் குளம் என்ற கிராமம் மிகவும் பழைமை வாய்ந்த ஒரு பரப்பாகும். இங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் ஆதிக்குடியிருப்பு ஒன்றினது தொடர்ச்சியை இனங்காணத்தக்க வகையில் சான்றுகளை உள்ளடக்கியுள்ளன. இடுகாடும் குளமும் இணைந்த வகையில் அருகருகே அமைந்து காணப்படுகின்ற ஒரு பண்பு அதன் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். மேட்டு நிலப்பயிர்ச் செய்கையும், நெற்செய்கையும் இங்கு தனித்துவமானவை. எள்ளன் குளத்தின் மத்தியில் "கொல்லன் பனையடி" என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு திட்டி அதன் எல்லா மண்படை அடுக்குகளிலும் ஏராளமான கீச்சுக் (Iron Slag) கிட்டங்களைக் கொண்டிருப்பது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இதுவே அங்கு தொடர்ச்சியான ஒரு விவசாயக் குளக் குடியிருப்பின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் மூலமாகவும் அமைகிறது. (இதனுடைய தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகவே இன்று உடுப்பிட்டியின் இரும்பு உலோகத் தொழில்நுட்பமும் தரமும் அமைந்து காணப்படுவதையும் மனங்கொள்ளல் நன்று.)

எள்ளன் குளத்தில் பெருங்கற் கால மக்களின் முதுமக்கட்தாழி அடக்கமுறை பயிலப்பட்டிருந்த தற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. மனித சாம்பலும் - எலும்புத்துண்டுகளும் நிறைந்த பெரிய ஒரு மட்கலம் அங்குள்ள இடுகாட்டின் மத்தியில் கிணறு தோண்டப்பட்ட போது வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு நாச்சிமார் கோவில் பிரகாரம் இடுகாட்டுடன் மருவிக் காணப்படுவது எள்ளன் குளக் கிராமத்தின் பழைமையை உறுதிசெய்வதாக உள்ளது. இங்கு இற்றைவரைக்கும் வேள்வி-யாகங்கள் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டு வருவதனையும் காணலாம்.

எள்ளன் குளத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை இலங்கையின் பெருநிலப்பரப்பில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பொற்றிருந்த குளநீர்ப்பாசன சமூகப் பின்னணியில் வைத்து ஆராய்வதற்கு இடமளிக்கக்கூடிய வகையில் சான்றுகளைக் கையாளும் வாய்ப்புக்கள் மிகவும் ஆதிகம் என்றே குறிப்பிடவேண்டும். இங்கிருந்து சேகரிக்கப்பட்ட மண்பாண்டங்கள் பெருமளவுக்கு தனிக்கறுப்பு வர்ணத்தில் பளபளப்புத் தன்மையுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (உடுப்பிட்டியில் இற்றைவரைக்கும் தனிக்கறுப்பு வர்ணத்திலான பானை வகைகளே உற்பத்தி செய்யப்பட்டு வருவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.)

கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இராசரட்டைப் பிராந்தியத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் சில "வபிகமிக" என்ற பதத்தினையும் குறித்துள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். குளர்சொந்தக்காரர்களையே அப்பதப்பிரயோகம் குறித்தது என்பது ஆய்வாளரின் பொதுவான முடிபாகும். அந்தவகையில் எள்ளன் குளம் என்ற பெயரும் அரசமட்டத்துடன் எடுத்துக்காட்டக் கூடியதாய் உள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இலங்கையில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் குளச்சொந்தக்காரராகக் காணப்பட்டவர் பெருமளவுக்கு அரச குடும்பத்துடன் இணைந்தவராகவே காணப்பட்டனர். அந்த வகையில் எள்ளன் குளம் என்ற பெயர்தொடர் குடாநாட்டின் கண் உருவாக்கப்பட்டிருந்த அரசமட்டத்திலான நீர்பபாசன நிறுவனமாக விளங்கியிருந்தது என நிறுவலாம். அவ்வாறு நிறுவும் பட்சத்தில் எதிர்காலத்தில் எல்லாளன் என்ற புகழ்பூத்த தமிழ் மன்னனுடைய ஆட்சிக்காலத் தொடர்புகளை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் பிணைத்துப் பார்ப்பதற்கு வழி பிறக்குமல்லவா?

கார்த்திகை 1994 - எரிமலை


மாவீரம்
https://maaveram.tv/
@maaveeram1
Instagram
நேரடி இசை
நிகழ்வு
தமிழீழ
வேட்கைக்கான
இசையாயுதம்
வீரவணக்கம்
வீரவேங்கை
NOV 21
2021
@
6:00 PM
5637 Finch Ave., E.
Scarborough ON

2022ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.com
thamilarvanikam@gmail.com

# தாகம்

அம்மாவின் கைகளில் படம் இருந்தது.

அழகான சட்டமிடப்பட்டு, சிரித்த படி, கையிற்கு அளவான அளவில்.

அம்மாவின் மகனுடையதுதான்.

அம்மா — கைகளால் தடவினாள். கண்ணை வெட்டி, வெட்டி எதிர்பார்ப்போடு பார்த்தாள்.

படத்தில் தூசு பட்டிருப்பது போலவும் - அது அழிந்து விட்டால் தெரிந்துவிடும் போலவும் அம்மா அடிக்கடி தடவினாள்.

"அம்மம்மா படத்தில் சித்தப்பா சிரிச்சபடி இருக்கிறார்" அமுதா காதிற்குள் கத்தினாள்.

அம்மா திரும்பவும் தடவினாள்.

மங்கலாக. . . ., ஒரு ஒளிப்பொட்டாவது . . .

"அவன் கெட்டிக்காரன், சாகேக்கையும் வீர மாய்த்தான் செத்தவன்" அருகிலிருந்த சின்னம்மா மெதுவாக அடைத்த குரலில் முணுமுணுத்தாள்."

என் மகன் எப்படி இருப்பான்.

அம்மா இயன்றமட்டும் உற்றுப்பார்த்தாள்.

வெறும் இருளாக. . . .,

எதுவுமே அற்ற சூனியாமாக. . .,

அந்தப்படத்தை கவரில் சாய்த்து வைத்து விட்டு அந்தத் திசையை நோக்கிய வழிகளைத் திறந்தபடி. . . அம்மா. . .

"என்றாவது ஒரு நாள் ஒரு ஒளிக்கீறல் - என் மகனின் உருவம் என் மனதில் படிய வேண்டும்" அவள் ஏக்கத்துடன் காத்திருக்கத் தொடங்கினாள்.

சரியாக 14 வருடங்கள் இருக்கும்.

அப்போது தான் அம்மாவிற்கு சாதுவாக பார்வை மங்கத் தொடங்கி இருந்தது. அப்பாவின் வருமானம் வீட்டிற்குப் பொதுமாக இருந்தது. ஆனாலும் சிறிது வறுமை தலைகாட்டி இருந்தது. பெரிய ராசன் எப்போதும் எங்காவது வேலை தேட வேண்டும் என அலைந்து கொண்டிருந்தான். சின்னவன் தான் அம்மாவிற்கும் தங்கச்சிக்குமாக வீட்டில் நின்றான்.

"என்ர பார்வை போறதுக்கிடையில் என்ர பிள்ளையள் வாழுறதை நான் பார்க்க வேண்டும்" அம்மா பழங்காலத்து கிழவிகளை போன்று புலம்பத் தொடங்கினாள்.

"அது பிரச்சனை இல்லையணை கண்ணாடி போட்டால் எல்லாஞ் சரிவரும்" பிள்ளைகள் அம்மா விற்கு ஆறுதல் சொன்னார்கள். அம்மா வைத்தியசாலைப் படிகளில் ஏறி இறங்கத் தொடங்கினாள். சின்னவன் யாழ்ப்பாணத்தின் பெரிய வைத்தியரிடம் அம்மாவைக் கூட்டிப் போனான்.

பரிசோதனைகள் முடிந்தன.

"தம்பி, அம்மாவை வெளியில் விட்டுட்டு நீர் மட்டும் வாரும்" டாக்டர் சின்னவனை தனியாக அழைத்துச் சென்றார்.

"அம்மாவிற்கு எனி கண் சரிவராதப்பன்"

சின்னவனுக்கு நெஞ்சத்தில் நெருடியது. எனி அம்மா வாழும் காலமனைத:தும் கண் தெரியாதவளாகவே வாழப்போகிறாள் - இன்னும் சில நாட்களுக்கு அம்மா பிள்ளைகளைப் பார்ப்பாள் - உலகத்தைப் பார்ப்பாள் அதன் பின்பு. . . சின்னவன் வாடிய முகத்துடன் வெளியே வந்தான்.

"என்னவாம்"

"கண்ணாடி போட்டா — எல்லாஞ் சரிவருமாம்" சின்னவன் அம்மாவின் முகத்தைப் பார்க்காமல் நிலத்தை பார்த்தபடியே சொன்னான்.

அம்மாவிற்கு கண்ணாடி பொருத்தமாகவே இருந்தது.

எல்லாம் தெளிவாகத் தெரியுதென்றாள்.

சின்னவன் முன்னுக்கு நின்றான். அவனுக்கு அப்போது பதினெட்டு வயதுதான் இருக்கும். உருண்டை முகம், கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், சாதுவான மங்கிய நிறம், எவரையுமே கவர்ந்துவிடும் சிரிப்பு. ராசனும், தங்கச்சியும் வந்தனர் - அப்பாவும் வந்தார். அந்த இனிய மாலையிலேயே தந்தையின் காதிற்குள் சின்னவன் சொன்னான்.

"அப்பா — அண்ணைக்குக் கெதியா கல்யாணத்தை — பேசுங்கோ"

♦♦♦

அம்மாவிற்கு மிக விரைவாகவே பார்வை மங்கிக் கொண்டவந்தது. அவள் கண்ணாடியை கழற்றி எறிந்து விட்டாள். ராசனின் திருமணம் நடந்தது. அம்மாவிற்கு வெறும் நிழலுருவங்கள் மட்டும் சாதவாகத் தெரிந்தன. விரைவிலேயே வெறுமையான இருள் அவள் கண்களிற்குள் குடிபுகுந்து கொண்டாது.

"அம்மா கண்போனா என்னம்மா, உனக்கு நானிருக்கிறன் தானே. என்ன வேணும் சொல்லு" சின்னவன் தாயை அமைதிப்படுத்து வான்.

"எனக்கு உன்னைப் பார்க்கத் தான்ரா கண் வேணும்" அம்மாவின் கண்கள் கண்ணீரை மறக்காமல் சிந்தும்.

நாட்கள் சென்றன. பனைமரம் போல உறதியாக நின்ற அப்பா படுக்கையில் விழுந்தார். அவரின் ஒருபக்கத்து காலும், கையும் இழுத்துக் கொண்டது. வைத்தியர்கள் கையை விரித்தனர். அப்பா படுக்கையில் கிடந்தார். வீட்டில் வறுமை மெதுவாகத்தவழத் தொடங்கியது.

பெரிய ராசன் - வேலை தேடி வெளிநாட்டுக்குப் பயணமானான்.

♦♦♦

அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எல்லா வேலையையுமே சின்னவனே செய்யவேண்டி இருந்தது. தங்கச்சி சின்னப்பிள்ளை — அவள் பள்ளிக்கூடம் போனாள். சின்னண்ணனுக்கு வேலைகளில் உதவினாள்.

நாட்கள் வருடங்களாகிக் கொண்டிருந்தன. நாட்ட நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. சின்னவனுக்கு அம்மாவையும் - அப்பாவையும் கவனிப்பதே முழு வேலையாய்ப் போய்விட்டது.

வீதிகளில் மனித உயிர்கள் காரணமற்று விழத் தொடங்கின. தமிழீழ தேசம் எங்கும் ஆயுதங் தரித்த பேய்கள் கொடிய ஆட்சி நடத்தத் தொடங்கின.

இரவுகள் பயங்கரமாகின. . . .,

"அம்மா நாங்கள் வீடுகட்ட வேணும், நல்லா வாழ வேணும் எண்டு சிந்திக்கிறம் ஆனா ஒரு இரவில எங்கட வீடு எரிஞ்சு போகுது. நாங்கள் காலங்காலமாக சேர்த்த சொத்துகள் களவாடப் படுகுது. ஏன். . . எங்கட மானம் போய் உயிர் கூடப் போகுது. இதுக்கிள்ளை இதைப்பார்த்துக் கொண்டு தான் நாங்கள் வாழ வேணுமோ" சின்னவன் அம்மாவிடம் குமுறிக்கொண்டிருந்தான்.

"அதுக்கு நாங்கள் என்ன மோனை செய்யேலும்" அம்மா கட்டிலில் இருந்து எழுந்திருத்தபடியே கேட்டாள்.



அம்மாவிற்கு வெளிச்சமும் — இருட்டும் தெரியாது,
எந்த நேரமும் சுவரைப்பார்த்து விழித்துக் கொண்டிருப்பாள்.
அம்மாவிற்கு நம்பிக்கை,
என்றாவது ஒரு நாள் — ஒரு ஒளிப்பொட்டு......
ஒரு ஒளிக் கீறல்...... தெரியும்.
அம்மாவிற்கு மகனைப் பார்க்க வேண்டும்......

"நாங்கள் போராடவேணும்மா"

அம்மா திகைத்துப்போய் இருந்தாள். கதவுக்கு அருகில் நின்ற தங்கச்சி நிலம் பார்த்தாள் - கால்களில் விழிநீர்கள் பட்டு தெறித்தன.

"அண்ணை உன்னை விட்டிட்டு என்னால் இருக்கேலாது" அவள் மனது துடித்தது.

சின்னவன் அடையிடையே வீட்டுக்கு வராமல் விடத் தொடங்கினாள். வேலைகளில் பாதியை தங்கச்சி செய்யத் தொடங்கினாள்.

நாட்கள் சென்றன.

சின்னவன் அடிக்கடி வீட்டுக்குவராமல் விடத் தொடங்கினாள். தங்கச்சி அதிகமாக வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். இளவயதின் ஆரம்பத்தில் அவள் கால்வைத்திருந்தாள். படிப்பை விட வேலைகள் அவளுக்கு அதிகமாக இருந்தது.

அப்பா சாய்வு நாற்காலியிலேயே தொடர்ந்து இருந்தார்.

அம்மா எல்லாவற்றிற்குமே அவளை எதிர் பார்த்திருந்தாள்.

சின்னவன் வீட்டுக்கு வராமலே போனான். சில நாட்கள் சென்றன. "சின்னவனை இராணுவத்தினர் கைதுசெய்து விட்டார்கள்" என்று தூரத்து உறவு முறையான ஒருவர் வந்துசொன்னார்.

சின்னவன் சிறையில் இருந்தான்.

படுக்கையில் அப்பா தவிப்புடன் கிடந்தார்.

கண்களை இழந்து அம்மாவீட்டில் மகனை நினைத்து அழுதபடியே இருந்தாள். தங்கச்சி தனியாக நின்றாள். வீட்டில் அவள் நிற்க வேண்டி இருந்தது. அதே நேரம் சின்னண்ணனை சிறையிலிருந்து விடுவிக்கவும் வேண்டும். அலைந்தாள், சிஙகளச் சட்டங்களும் சிறகைளும் தமிழர்களுக்கு இலகுவாக இருக்க வில்லை. ஒரு நாள் சிறைக்கதவுகளுக்கு உள்ளே அண்ணனைப் பார்த்தாள். அவன் மெலிந்திருந்தான். ஒழுங்கில்லாததாடி வளர்த்திருந்தான். தங்கச்சி அழுதாள்.

"அண்ணனை கைதியாப் பார்க்கிறதிலை வெக்கப்பட்ட மாட்டாய் என நினைக்கிறன்" என்றான் சின்னவன்.

"நான் வெக்கப்படேலை ஆனால் அப்பாவும் - அம்மாவும் நானும் தனிச்சுப் போனம்"

"நான் வீட்டிலை இருந்திருந்தா இது நடந்திருக்காது எண்டு நினைக்கிறியா - இஞ்சைபார் தானாவது என் இனத்திற்காக போராட வேண்டும் என்டு சிந்திச்சனான், ஆனால் இந்தச் சிறையில் பலர் - தமிழர்களாக பிறந்ததுக்காகவே சிறை இருக்கினம்."

சின்னவன் சொன்னது உண்மை தான். அதன் பின்பும் சில தடைவகள் தங்கச்சி சின்னவனைப் பார்த்துக் கதைத்தாள். ஒவ்வொரு முறையும் கண்ணீரோடு பிரிந்தாள்.

மூன்று வருடங்கள் சிறையின் வெறுப்பூட்டும் வாழ்விலிருந்து சின்னவன் விடுவிக்கப் பட்டான். கொடிய சிறை அவன் உடலிலும் மனதிலும் பலவடுக்களை விதைத்து விட்டு வெளியே விட்டது. அதே நேரம், அவன் மனதில் மேலும் உறுதியையும் - தெளிவையும் அதே சிறையே விதைத்தது.

♦♦♦

வீட்டில் மீண்டும் மகிழ்ச்சி பரவத் தொடங்கியது. அப்பா சாய்வு (32 பக்காம் பார்க்கவும்)

தியாகத்தின்
சிகரங்கள்..!
வீர யாகத்தின்
அகரங்கள்...!!
காற்றோடு
கலந்தவர்கள்...!
வீர காவியம்
ஆனவர்கள்...!!

நெருப்பாற்றில்
குளித்தவர்கள்...!
வரலாற்றில்
நிலைத்தவர்கள்...!!
மரணத்தை வென்ற
மாவீரர்...!
தமிழ் மானத்தைக்
காத்த புலிவீரர்...!!

மாவீரச்
செல்வங்களே...!
உங்களின்
கல்லறைகள் கூட
பகைவனைப்
பயமுறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
அழிக்கிறான்...!?
உங்களின்
நினைவுநாள் கூட
எதிரிக்கு உறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
தடுக்கிறான்...!?

உங்களின் தியாகத்
தீயில்தான்...
இன்னும் நாம்
குளிர்காய்கிறோம்!
இவ்வளவு இழந்த
பின்னும்...
இன்னும் நாம்
உயிர்
வாழ்கிறோம்!!

இனியும் நீங்கள்
எங்களுக்காய்
உங்கள்
ஆத்மாக்களை
எழுப்பாதீர்கள்!
நிம்மதியாய்
உறங்குங்கள்...!
உங்கள் கனவுகள்
உறங்காது!

# தமிழீழ விடுதலைக்கு விதையான தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 40 ஆயிரம் வரையிலான மாவீரர்கள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள். இந்த விடுதலைக்கான போராட்டத்தில் தமிழக மக்களின் பங்களிப்புக்கள் மறக்கமுடியாதவை.



ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் விடுதலைப் புலிகளைப் பாதுகாப்பதற்காகவும் எத்தனையோ தமிழக உறவுகள் தங்கள் அற்புதமான உயிர்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள். அப்துல் ரவூப், முத்துக்குமார் என 20ற்கும் மேற்பட்டவர்கள் தங்களைத் தீக்கிரையாக்கி தமிழர்களின் உரிமைக்காக உயிர்விட்டிருக்கும் அதேவேளையில், களத்தில் ஆயுதம் தாங்கிப்போராடியும் தமிழக இளைஞர், யுவதிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்திருக்கின்றார்கள். இறுதிவரையான போரில் எத்தனை தமிழக மாவீரர்கள் விதையானார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை. எனினும், ஒரு கரும்புலி, இரு பெண் மாவீரர்கள் உட்பட 14 தமிழக மாவீரர்களின் விபரங்கள் கிடைத்துள்ளன.

அவற்றை இங்கே தருகின்றோம்....

### வீரவேங்கை பத்மநாபன்

இயற்பெயர்: பி.பத்மநாபன்
ஊர்: திருச்சி, தமிழகம்.
வீரப்பிறப்பு: 27.07.1963
வீரச்சாவு: 16.03.1988 (தமிழகத்தின் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் போது)

### வீரவேங்கை சுனில்

இயற்பெயர்: கதிரவன்
ஊர்: தமிழகம்.




வீரச்சாவு: 11.04.1988 (முல்லைத்தீவு ஒட்டங்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்)

### லெப். இனியன் [றஸ்கின்]

இயற்பெயர்: முத்தையா இராமசாமி
ஊர்: தூத்துக்குடி, கன்னியாகுமாரி, தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 23.07.1962
வீரச்சாவு: 11.12.1991 (மன்னார் மருதமடு வேப்பங்குளம் பகுதியில் சிறீலங்கா படையினருடனான சமரில்)
துயிலுமில்லம்: ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

### 2ம் லெப். உதயசந்திரன்

இயற்பெயர்: சேதுபாண்டித்தேவர் ராமமணி சேகரன்மகாதேவர்
ஊர்: திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 05.05.1969
வீரச்சாவு: 09.06.1992 (மன்னார் சிறுநாவற்குளத்தில் சிறீலங்கா படையினர் மீதான அதிரடி தாக்குதலின் போது)

### கடற்புலி கப்டன் ஈழவேந்தன்

இயற்பெயர்: துரைராசன் குமரேசன்
ஊர்: தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 25.05.1969
வீரச்சாவு: 20.11.1992 (தமிழீழக் கடற்பரப்பில் நடந்த மோதலில்)
துயிலுமில்லம்: எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### லெப். சச்சு

இயற்பெயர்: அன்ரனி சிறிகாந்த்
ஊர்: பியர், இந்தியா.
வீரப்பிறப்பு: 04.09.1975
வீரச்சாவு: 20.12.1992 (மன்னார் நானாட்டன் மாதிரிக்கிராமம் படை முகாம்களுக்கிடையில் அமைந்துள்ள காவலரண்கள் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

### கரும்புலி லெப். செங்கண்ணன்

இயற்பெயர்: தனுஸ்கோடி செந்தூரபாண்டியன்
ஊர்: சாத்தூர், சிவகாசி (தமிழகம்)
வீரப்பிறப்பு: 25.01.1975



வீரச்சாவு: 11.11.1993 (யாழ். பலாலி படைத்தளத்தினுள் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவு)
துயிலுமில்லம்: உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### வீரவேங்கை மணியரசி

இயற்பெயர்: செல்லத்துரை கமலாதேவி
ஊர்: தமிழகம்.
வீரப்பிறப்பு: 02.02.1977



வீரச்சாவு: 19.04.1996 (யாழ். தென்மராட்சி கோட்டத்தை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட சூரிய கதிர்-2 நடவடிக்கைக்கு எதிரான சமரில்)
துயிலுமில்லம்: ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

### கப்டன் குணதேவன் [லக்ஸ்மணன்]

இயற்பெயர்: அம்மனாரி தென்னரசு
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 01.01.1966
வீரச்சாவு: 13.05.1996 (அம்பாறை 11ம் கொலனியில் அமைந்திருந்த காவல்துறை நிலையம் மீதான தாக்குதலின்போது)

### கப்டன் பெரியதம்பி [விஸ்ணு]

இயற்பெயர்: சிவானந்தம் முகேஸ்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 31.05.1975



வீரச்சாவு: 19.05.1996 (திருகோணமலை கீலக்கடவெல படைமுகாம் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

### கப்டன் குற்றாளன்

இயற்பெயர்: கந்தையா கலைச்செல்வன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 08.08.1969
வீரச்சாவு: 16.07.1996 (மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு)

### மேஜர் குருசங்கர்

இயற்பெயர்: பழனியாண்டி மகேந்திரன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 18.04.1973



வீரச்சாவு: 25.07.1996 (முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

### வீரவேங்கை சுதா

இயற்பெயர்: வீரப்பன் இலட்சுமணன்
ஊர்: தஞ்சாவூர், தமிழ்நாடு
வீரப்பிறப்பு: 28.10.1980
வீரச்சாவு: 05.07.1999 (மன்னார் பள்ளமடு பகுதியில் சிறீலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது.)
துயிலுமில்லம்: கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

### மேஜர் உமா

இயற்பெயர்: வேலுச்சாமி இந்துமதி
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 27.05.1972
வீரச்சாவு: 11.12.1999 (கிளிநொச்சி பரந்தன் பகுதியில் ‘ஓயாத அலைகள் 03’ நடவடிக்கையின்போது)
துயிலுமில்லம்: விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.


எங்கள் தோழர்களின் புதைகுழியில்
மண்போட்டுச் செல்கின்றோம்...
இவர்கள் சிந்திய குருதி - தமிழ்
ஈழம் மீட்பது உறுதி..




விழியில் சொரியும் அருவிகள்
எமை விட்டுப் பிரிந்த குருவிகள்...
பகைவன் கப்பலை உடைத்தனர்
எரிமலையின் வெடியாய் வெடித்தனர்...
வீரவேங்கை
ராசன்
சிவலிங்கம்
விக்கினேஸ்ரன்
யாழ் மாவட்டம்.
19.10.2000 1474

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 2007ம் ஆண்டு மாவீரர் தின உரையில் ஆற்றிய கருத்துக்கள் இன்றும் வரலாற்றுப் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. மீண்டும் இலங்கைத் தீவு மகிந்த குடும்ப ஆட்சி அதிகாரத்திற்குள் சென்றுள்ள நிலையில், அந்த உரையில் இருந்து இன்றைய காலத்திற்குப் பொருத்தமான பகுதிகளை மட்டும் இங்கு தேர்ந்தெடுத்துத் தருகின்றோம்.**

# மகிந்த அரசு
# தமிழின அழிப்புப்போரைக் கைவிடப்போவதில்லை

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும், தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே இனவாத விசத்தினுள் மூழ்கிக்கிடக்கிறது. சிங்கள இனவாத விசம் இன்று மிருகத்தனமான வன்முறையாகக் கோரத்தாண்டவமாடுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வன்முறை அகன்ற அகிம்சை

தருகிறது.

இப்படியான அநீதியில் அமைந்த அந்நியத் தலையீடுகள், காலங்களை விழுங்கி நீண்டுசெல்லும் எமது போராட்டத்திற்குப் புதியவை அல்ல.

★★★★

தமிழரது தேசியப் பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொட்டு நிற்காத, தமிழரின் அரசியல் அபிலாசைகள் எதையும் பூர்த்திசெய்யாத அந்த அரைகுறைத் தீர்வைக்கூடச் செயற்படச் சிங்



வழியிலும், ஆயுதவழியிலும் தமிழர் நீதி கேட்டபோதும் சிங்கள உலகிலே சிறிதளவும் மனமாற்றம் நிகழவில்லை. எத்தனையோ இழப்புக்கள், எத்தனையோ அழிவுகள், எண்ணற்ற உயிர்ப்பலிகள் நிகழ்ந்த போதும் சிங்களத் தேசம் மனந்திருந்தவில்லை. தொடர்ந்தும், அது வன்முறைப் பாதையிலேயே பயணிக்கிறது. அடக்குமுறையாலும் ஆயுதப்பலத்தாலும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே அது விரும்புகிறது.

★★★★

எமது பிராந்தியத்திலே உலகப் பெருவல்லரசுகளின் இராணுவ, பொருளாதார, கேந்திர நலன்கள் புதைந்து கிடப்பதை நாம் நன்கு அறிவோம். அந்த நலன்களை முன்னெடுக்க உலக வல்லரசுகள் முனைப்புடன் முயற்சிப்பதையும் நாம் விளங்கிக் கொள்கிறோம். இதற்கு இலங்கைத்தீவில் நெருக்கடி நிலை நீங்கி, சமாதானமும் நிலையான நல்லாட்சியும் தோன்ற அனைத்துலக நாடுகள் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். இதேநேரம் பேரினவாதச் சிங்கள அரசு உலக நாடுகளின் நலன்களையும் அவை எமது பிராந்தியத்திற் பதிந்திருப்பதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிக்கிறது. போலியான, பொய்யான பரப்புரைகள் வாயிலாக உலக நாடுகளைத் தமது வஞ்சக வலைக்குள் வீழ்த்தி, தமிழரது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் திருப்பி விடுகின்ற கைங்கரியத்தைச் செய்து வருகிறது.

சிங்கள அரசின் வஞ்சக வலைக்குள் வீழ்ந்து, உலக நாடுகள் எமது பிரச்சினையில் எதிர்மறையான தலையீடுகளைச் செய்வதுதான் எமக்கும் எமது மக்களுக்கும் வருத்தத்தையும் ஏமாற்றத்தையும்

களப் பேரினவாதிகள் அன்று அனுமதிக்கவில்லை. சிங்களத் தேசம் பற்றியும் அதன் நயவஞ்சக அரசியல் பற்றியும் நாம் நன்கு அறிவோம். எமக்கு அது பற்றிய நீண்ட பட்டறிவும் கசப்பான வரலாறும் இருக்கின்றன. எனவேதான், நாம் அன்று இந்தியாவுடன் பல்வேறு தடவைகள் பல்வேறு இடங்களிற் பல்வேறு மட்டங்களில் நடந்த பேச்சுக்களின்போது, சிங்களப் பேரினவாதம் பற்றி அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறினோம். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டுவருவது சிங்கள அரசின் நோக்கமன்று, தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, தமிழரின் வளங்களை அழித்து, தமிழரை அடிமைகொண்டு, அழித்தொழிப்பதுதான் சிங்கள அரசின் நோக்கம் என்பதை அன்று இந்தியாவிற்கு எடுத்துரைத்தோம்.

இதனால், தமிழ் மக்கள் தமது மண்ணிலேயே பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் சந்தித்தனர். அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது. சிங்கள அரசின் சாதுரியமான, சாணக்கியமான, பரப்புரைகளுக்குப் பலியாகி, சமாதான முயற்சிகளுக்குப் பாதுகாவலனாக நின்ற நாடுகளே, எமது விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்

**இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்துகொள்ளப் போவதில்லை.**

டிருக்கின்றன. இதில் வேதனையான, ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்னவென்றால் ஒரு காலத்தில் எம்மைப் போன்று தமது சுதந்திரத்திற்காகப் போராடிய தேசங்களும் எம்மைப் பயங்கரவாதிகளாகப் பட்டஞ்சூட்டியமைதான்.

★★★★

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறை மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை மகிந்த அரசு இனியும் உணர்ந்துகொள்ளப்போவதில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப்பிடிக்கவேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துச் சிங்களமயமாக்கி விடவேண்டும் என்ற ஆதிக்கவெறியும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து அகன்றுவிடப்போவதில்லை. தொடர்ந்தும் கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டி, உலகெங்கிலிருந்தும் அழிவாயுதங்களையும் போராயுதங்களையும் தருவிக்கவே மகிந்த அரசு முனைப்புடன் செயற்படுகிறது. எனவே, மகிந்த அரசு தனது தமிழின அழிப்புப்போரைக் கைவிடப் போவதில்லை.

★★★★

தமிழரின் தேசியப் பிரச்சினையை நீதியான முறையிற் சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்கான அரசியல் நேர்மையும் உறுதிப்பாடும் தென்னிலங்கையில் எந்த அரசியற் கட்சியிடமுமில்லையென்பது கடந்த அறுபது ஆண்டுகளில் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருக்கிறது. தமிழரின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் தென்னிலங்கைக் கட்சிகள் தயாரில்லையென்பதும்

இன்று சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என ஆளும்கட்சி அடம்பிடிப்பதும் தீர்வுத்திட்டமே வேண்டாம் என மஞ்சள், சிவப்புக் கட்சிகள் பிடிவாதமாக நிற்பதும் கடந்தகால நிலைப்பாடுகளிலிருந்து குத்துக்கரணம் அடித்து, அரசின் போர் நடவடிக்கைக்கும் ஆதரவு, சமாதான முயற்சிகளுக்கும் ஆதரவு எனப் பிரதான எதிர்க்கட்சி எதையும் தெளிவாகக் கூறாது இழுவல் மொழியில் நழுவிக் கண்ணாம்பூச்சி விளையாடுவதும் இதனைத்தான் தெளிவுபடுத்துகின்றன.

இதன்மூலம் சிங்கள அரசியற் கட்சிகள் அனைத்தும் அடிப்படையில் தமிழின விரோதப் பேரினவாதக் கட்சிகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான இனவாதக் கட்சிகளிடமிருந்து யாரும் தீர்வை எதிர்பார்த்தால், அது அரசியல் அசட்டுத்தனமேயன்றி வேறொன்றுமன்று.

★★★★

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னமும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக்காகப் போராடிய கிழக்குத்திமோர், மொன்ரிநீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்துகொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. இருப்பினும், எமது தேசியப் பிரச்சினையிற் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும், நடவடிக்கைகளும் எம்மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எம்மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்துபோயிருக்கிறது.

இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கிறது.


(ஈழத் தமிழரின் மரபு வழித் தாயகம்)
தமிழீழம்
தமிழீழத் தலைநகர் - திருகோணமலை
தமிழீழ மாவட்டங்கள்
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. முல்லைத்தீவு
04. வவுனியா
05. மன்னார்
06. திருகோணமலை
07. மட்டக்களப்பு
08. அம்பாறை
தமிழீழ நிர்வாக வலயங்களும் நகரங்களும்
01. நல்லூர் - நல்லூர்
02. வரணி - கொடிகாமம்
03. கரைச்சி - கிளிநொச்சி
04. பூநகரி - பூநகரி
05. முல்லைத்தீவு - தண்ணீரூற்று
06. மாங்குளம் - மாங்குளம்
07. மாந்தை - உயிலங்குளம்
08. மடு - மடுறோட்
09. வவுனியா - ஓமந்தை
10. குச்சவெளி - திரியாய்
11. திருகோணமலை - திருகோணமலை
12. மூதூர் - கிளிவெட்டி
13. வாகரை - மாங்கேணி
14. வெல்லாவெளி - பேராறு
15. மட்டக்களப்பு - கரடியன் ஆறு
16. அக்கரைப்பற்று - பாலமுனை
17. பொத்துவில் - பொத்துவில்
18. அறுவாக்காடு - பொம்பரிப்பு
19. புத்தளம் - புத்தளம்
20. சிலாபம் - சிலாபம்
தமிழீழத் தேசியச் சின்னங்கள்
வட மண்டலம்
வன்னி மண்டலம்
மேல்மண்டலம்
நடு மண்டலம்
முத்து மண்டலம்
சிங்களநாடு
கிழக்கு மண்டலம்
தென் மண்டலம்
TAMIL EELAM
வெளியீட்டுப் பிரிவு
அனைத்துலகத் தொடர்பகம்

# துயர் பகிர்வு



மண்ணில்
06.03.1951

விண்ணில்
11.11.2021

## திருமதி. கனகலிங்கம் செங்கமலம்

குப்பிழான், தமிழீழம் [பிறப்பிடம்], கல்வியங்காடு மற்றும், Toronto, CA [வதிவிடம்]

யாழ். குப்பிழானைப் பிறப்பிடமாகவும், யாழ். கல்வியங்காடு மற்றும், கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செங்கமலம் கனகலிங்கம் அவர்கள் 11-11-2021, புதன்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அருளம்மா தம்பதிகளின் அன்பு மகளும்,

காலஞ்சென்ற கந்தையா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும்,

சிவலிங்கம் கணேசம்மா, அருளம்பலம் பூமணி தம்பதிகளின் அன்பு பெறாமகளும்,

கனகலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும்,

சந்திரசேகரம் (அப்பன்-ஜேர்மனி), பவிதா (பவி-லண்டன்) மற்றும் காலஞ்சென்றவர்களான ஞானசேகரம் (ஞானம்), சர்வேஸ்வரி (தேவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

அமிர்தா, கவிதா, அஜந்தன், நிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயரும்,

கணேசலிங்கம் (ராசன்), கிருஷ்ணகோபால் (அப்பன்), தர்மி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

மகாலிங்கம் (மகா), பரமலிங்கம் (அச்சா) ஆகியோரின் அண்ணியும்.

பத்மாவதி (பத்மா), சாந்தகுமாரி (சாந்தா), ஜீவா ஆகியோரின் மைத்துனியும் மற்றும் ஜெயராணி (சந்திரா), பராசக்தி (பரா) ஆகியோரின் சகலியும்,

கீர்த்திகா, லக்ஷிகா, திலீபன், அர்ச்சனா, தமிழினி, இலக்கியா, ஆதவன், ஒவியா, ஆர்த்திக், சுருதிகா, சிறிநிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியை விபரம்**

**நிகழ்வு இடம்:** **Chapel Ridge Funeral Home & Cremation Centre**
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 Canada

| | | |
|---|---|---|
| **பார்வைக்கு:** | **ஞாயிறு, 14.11. 2021** | **நேரம்: மாலை 06:00 மணி – 09:00 மணி** |
| | **திங்கள், 15.11.2021** | **நேரம்: மதியம் 12:00 மணி – 12:30 மணி** |
| **கிரியை:** | **திங்கள், 15.11.2021** | **நேரம்: மதியம் 12:30 மணி – மதியம் 02:00 மணி** |
| **தகனம்:** | **திங்கள், 15.11.2021** | **நேரம்: மதியம் 02:30 மணி** |

**தகன இடம்:** **Highland Hills Crematorium**
12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

தொடர்புகளுக்கு

**கனகலிங்கம்(கணவர்): 416.840.2692, அமிர்தா(மகள்): 416.274.4135**

**கவிதா(மகள்) : 647.762.2056, அஜந்தன் (மகன்): 647.608.6794, நிசாந்தன் (மகன்): 647.864.7426**

**– நண்பர்கள் –**

# தாயகக் கனவுக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்!



## லெப். சங்கர்
(முதல் மாவீரர்)

லெப. சங்கர் அல்லது சுரேஷ் என அழைக்கப்பட்ட செல்வச்சந்திரன் சத்தியநாதன், வடமராட்சி கம்பர்மலையை சேர்ந்தவர்.

1961.06.19 ஆம் நாள் பிறந்தவர். தனது 16 ஆவது வயதில் -1977 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைய விரும்பி செல்கிறார். போராட்ட வாழ்வின் கடின தன்மையை கருத்தில் கொண்டு சிறியவரான சங்கரை, தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்து கல்வியைத் தொடருமாறு அனுப்பிவிடுகிறார்.

போராளி கனவை சுமந்த சங்கர் மீண்டும் அடுத்த ஆண்டு - 1978 இல் திரும்ப செல்கிறார். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரானர். 1979 இல் பயிற்சியை பெறுகிறார். அதே ஆண்டு தேடப்படு வோரில் ஒருவராகிறார்.

1981 இல் நவீன ஆயுதத்தைப் பெறுகிறார். அத்துடன் தாக்குதல் குழு ஒன்றுக்கும் பொறுப்பாளராகிறார். 1982 ஆடி இரண்டாம் நாள் முதல் தாக்குதலை நெல்லி யடியில் தலைமையேற்ற நடத்தினார். இதில் 4 பொலிஸார் கொல்லப்பட்டு, ஆயதங் களும் கைப்பற்றப்பட்டன. இதே ஆண்டு தலைவர் பிரபாகரனிற்கு முதன்முறையாக மெய்ப்பாதுகாவலராக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சங்கரே.

இராணுவ முற்றுகைக்குள் இருந்து சங்கர் தப்பியபோது சூட்டுக்கு இலக்காகி வயிற்றில் காயமடைகிறார். தமிழ்நாட்டுக்கு மருத்துவத்திற் காக கொண்டு செல்லப் பட்டபோதும் மலனின்றி 1982.11.27 அன்று தாயகத்தின் முதல் வித்தாக தலை வனின் மடியிலேயே உயிர் சாய்ந்தார்.



## லெப். சீலன்
(முதல் தளவதி)

லெப். சலன் அல்லது ஆசிர் என்று அறிப்பட்டு தலைவர் பிரபாகரனால் இதையச் சத்திரன் என்றும் விளிக்கப்பட்டவர் ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி.

தமிழர் தலைநகர் திருகோணமலையே இவரின் பிறந்த இடம். 1960.12.11 அன்று பிந்தார். 1978 இல் பாடசாலை நிகழ்வில் ஏற்பட இருந்த சிங்கக்கொடி யை பொஸ்பரஸை பயன்படுத்தி ஏற்றியபோதே எரிய வைத்தார்.

கைது செய்யப்பட்ட சாள்ஸ் அன்ரனி, இராணுவ, பொலிஸ் எந்திரங்களால் சித்திர வதைக்கு உள்ளானான். மீண்டு வந்த விடதலைப் புலியானான். ஆரம்பம் முத லே பயிற்சி, சண்டையில் சிறந்து விளங்கியதால் புலிகளின் சண்டை அணிக்கு இவரே தளபதி - புலிகளின் முதல் தளபதி.

1981 இல் புலிகளின் முதல் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இரு வரையும் வீழ்த்தியவர் சாள்ஸ் அன்ரனியே. 1982 இல் காரைநகர் தாக்குதல், பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றார்.

சாள்ஸ் அன்ரனி மறைந்திருந்த இடம் காட்டிக் கொடுக்கப்பட்டது. இராணுவம் முற்றுகையிட்டது. முற்றுகையை உடைத்து நண்பர்களுடன் வெளியேறிய போது சீலன் காயமடைகிறார். தன்னிடம் இருந்த ஆயுதத்தை காப்பாற்றவும், எதிரிகளிடம் பிடிபடாமலும் இருக்க தன்னை சுட்டக் கொல்லுமாறு பணிக்கிறார். தளபதியின் கட்டளை துயரத்துடன் நிறைவேற்றப்படுகின்றது. 1983.07.15 ஆம் நாள் முதல் தளபதி தாய் மண் மீட்புக்கு தன்னை உரமாக்கினான்.



## கப்டன் ஜோன்சன்
(முதல் இஸ்லாமிய தமிழர்)

கப்டன் ஜோன்சன் என அழைக்கப்பட்ட ஜுனைதீன், விடுதலைப் போராட்டத் திற்காக புலியாக தன்னை அர்ப்பணித்த முதல் இஸ்லாமியத் தமிழர். மட்டக் களப்பு ஓட்டமாவடியில் 22.08.1963 ஆம் நாள் பிறந்தார். ஜீனை தீன். 'தமிழீழ விடுதலை நாகங்கள்' (நாக படை) என்ற அமைப்பை நடத்தினார். கிழக்கு மாகாணத்தில் தாக்குதல்களை நடத்தி அதிர்வலைகளை ஏற்படுத்தினார்.

பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளால் நாக படை இயங்குநிலையை இழக்கவே. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னையும் நண்பர்களையும் இணைத்துக் கொண்டார். இந்தியாவில் புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாமில் ஆயதப் பயிற் சியைப் பெற்றார். இஸ்லாமிய தமிழன் என்பதில் பெருமை கொண்ட ஜுனைதீன் தலைவர் பிரபாகரனை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார்.

1985 இல் குரநகர் பொலிஸ் நிலையம், கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் களில் ஈடுபட்டு திறமையை வெளிப்படுத்தியிருந்தார். பின் மட்டக்களப்பில் இயங்கினார்.

நண்பருடன் மோட்டார் சைக்கிளில் ஆதித்திய மலைக்கு சென்றபோது பொலிஸார் மறைந்திருந்து தாக்கி ஜோன்சனைக் கைது செய்து கொழும்பு பனாகொட சிற றையில் அடைத்தனர். அங்கிருந்து தப்பித்தபோது 1985.11.30 அன்று இராணுவத் தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தாய் மண்ணுக்கு முதல் இஸ்லாமிய தமிழ் மாவீரனாக விதையானார்.



## கப்டன் மில்லர்
(முதல் கரும்புலி)

மில்லர் என அழைக்கப்பட்ட வல்லிபுரம் வசந்தன் யாழ்ப்பாணம் கரவெட்டி -துன்னா லையை சொந்த இடமாகக் கொண்டவர். 1996.01.01 ஆம் நாள் பிறந்த வசந்தன். 1983 இல் விடுதலைப் புலிகளுக்காக இணைய முயன்றார். ஆதரவாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டார். புலிகளின் நம்பிக்கையைப் பெற் றதும் வாகன ஓட்டியாக கடமையைத் தொடங்கினார்.

பயிற்சி முகாமில் மில்லர் என்ற பெயர் சூட்டப்பட்டது. பல தாக்குதல்களில் பங்கேற்ற மில்லர். இராணுவம் மேற்கொண்ட ஒப்ரேஷன் லிபரேசன் தாக்குதல் முறியடிப்பிலும் ஈடுபட்டிருந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியைக் கைப்பற்றிய இராணுவம் அங்கு முகாம் அமைத்து நின்றது. இராணுவப் பிடியில் இருந்து வடமராட்சியை மீட்க விடுத லைப் புலிகள் கரும்புலித் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர்.

திட்டம் தயாரானது. கரும்புலிகள் எனத் தனியான பிரிவு அப்போது இருக்கவில்லை. கரும்புலியாக யார் செல்வது என்ற கேள்வி எழப் பலர் முன்வந்தனர். அடம்பிடித்து வாய்ப்பை பெற்றுக்கொண்டான். முன்னரும் கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்த முயன்றிருந்தார் மில்லர். எனவே அவருக்கே வாய்ப்பு சென்றது.

சக்கை (வெடிமருந்து) நிரப்பிய சென்ற மில்லர். இலக்கை நோக்கி செலுத்தி தம்பிப்பதே திட்டம். சில வேளைகளில் இலக்குப் பிசகவும் வாய்ப்பு இருக்கும். இதனால் பிரதான முகாம் வரை சென்று மோதி அழித்தார் மில்லர். 1987.07.05 அன்று வருங்கால சந்ததிக்காக தன்னையே நெருப்பாக்கிய மில்லர்தான் முதல் கரும்புலி மாவீரர்.



## லெப். கேணல் திலீபன்
(முதல் அகிம்சை மாவீரர்)

லெப். கேணல் திலீபன் என அறியப்பட்டவரின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். ஊரெழுவைச் சேர்ந்தவர். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத் துவபீட மாணவரான பார்த்தீபன், விடுதலைப் புலிகளில் இணைந்து திலீபன் என பெயர் சூடிக்கொண்டார்.

போர்க் களங்களில் பங்கெடுத்தவர். கூரிய அரசியல் சிந்தனை கொண்ட வராக இருந்தார். களத்தில் காயமடைந்து அகற்றப்படவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பு வகித்தார். விடுதலைப் புலிகள் பல துறைகளில் சிறக்க வழியமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாற அகிம்சை ஆயுதத்தை கையில் எடுத்து உணவு, தண்ணீரை ஒறுத்து நல்லூரில் சத்தியப்போர் புரிந்தார். ஆனால் கொடுங்கோலர் களிடம் இந்தப் போராட்டம் எடுபடவில்லை. இலட்சியத்தில் உறுதியாக இருந்த திலீபன் 12 நாள் பட்டினித் தீயில் தன்னை எரித்து 1987.09.26 அன்று உயிர் நீத்தார். இவரே தாயக விடுதலைக்காக வீழ்ந்த முதல் அகிம்சை மாவீரர்.



## 2 ஆம் லெப். மாலதி
(முதல் பெண் மாவீரர்)

மாலதி என அறியப்பட்ட பேதுரு சகாயசீலி மன்னார் ஆட் காட்டி வெளியை சேர்ந்தவர். 1967.01.04 ஆம் நாள் பிறந்தவர் 1984 இல் தன்னை விடுதலைப் போராட்டத் தில் இணைத்துக் கொண்டார்.

பயிற்றிகள் முடித்து புலி வீராங்களையானவர் இராணுவத் துக்கு எதிராகப் பல சண்டைகளில் பங்கெடுத்தார். இந்திய இராணுவத்துக்கு எதிராக 1987 ஒக்ரோபரில் கோப்பாயில் பெரும் தாக்குதலைப் புலிகள் தொடங்கினர். அதில் பங் கெடுத்தார். இந்தத் தாக்குதலில் மாலதி, 2ஆம் லெப். மாலதி யாக 1987.10.10 அன்று வீரச்சாவடைந்தார். இவரே தமிழின விடுதலைக்காகப் பலியான முதல் பெண் மாவீரர்.







## மேஜர் காந்தரூபன் கப்டன் கொலின்ஸ் கப்டன் வினோத்
(முதல் கடற்கரும்புலிகள்)

மேஜர் காந்தரூபன் என அழைக்கப்பட்டவர் யோகராசா கோணேஸ்வரன் (வல்வெட்டித்துறை) என்ற இயற்பெய ருக்கு உரியவர். இதேபோன்று கப்டன் கொலின்ஸின் இயற் பெயர் பர்ணாந்து சில்வஸ்டார் (மன்னார்), கப்டன் வினோத் வேலுப்பிள்ளை திலகராசா (வல்வெட்டித்துறை).

வெவ்வேறு காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர்கள். கடற்புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் உள்வாங்கப்பட்டார்கள். கடற்படையின் கப்பல்கள். படகுகள் மீனவர்களுக்கும், தாயகத்துக்கும் பெரும் தொந் தரவளிக்க, தரையில் நடத்தப்படுவது போன்று, கடலிலும் கரும்புலித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டது.

கேணல் சங்கர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டு திட்டமும் தீட்டப்பட்டது. வலவெட்டித்துறையில் அழிப்புக்கு கட்டளையிட்டுக் கொண்டிருந்த எடித்தாரா கப்பலை 10.01.1990 ஆம் ஆண்டு தாக் கியழித்து முதல் கடற்கரும்புலி வீர மறவர்களாகினர்.



## கப்டன் அங்கையற்கண்ணி
(முதல் பெண் கடற்கரும்புலிகள்)

அங்கையற்கண்ணி என அறியப்பட்டவர் துரைிங்கம் புஸ் பகலா, யாழ்ப்பாணம்-மண்கும்பானில் 1973.05.10 ஆம் நாள் பிறந்தவர். குடும்பம் ஏழ்கையில் வாடியபோதும் விடு தலை வேட்கையால் களமாடப் புகுந்தார்.

கடற்புலிகள் பிரிவில் 3 ஆவது அணியில் பயிற்சி பெற்று பல கடற்சண்டைகளில் ஈடுபட்டார். கரும்புலியாக அனுமதிக்கக் கோரி தலைவருக்கு கடிதமும் எழுதினார். கடற்கரும்புலி களுக்கான அடிப்படை பயிற்சியின்போது 35 கிலோமீற்றர் தூரம் 8 மணி நேரம் நீந்தினார்.

காங்கேசன்துறையில் தரித்து நின்ற கட்டளைக் கப்பல், டோறாப்படகு மீதான தாக்குதலில் கடற்கரும்புலியானார். 1 6.08.1994 ஆம் ஆண்டு கடலில் காவியமான அங்கையற் கண்ணியே முதல் பெண் கடற்கருப்புலியாவார்.



## மேஜர் யாழினி
(முதல் பெண் தரைக் கரும்புலிகள்)

மேஜர் யாழினி இவரின் இயற்பெயர் சிவசுப்பிரமணியம் ராகினி. யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1975.05.03 அன்று பிறந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் விடுதலைப்புலி யானார். புகழ்பெற்ற மணலாறு களமுனையில் சாதித்தவர். கரும்புலி அணிக்குச் சென்றவர். சூரியக் கதிர் நடவடிக்கையில் சிறந்த வேவுப் போராளியாகவும் தன்னை நிருபித்தார்.

பெரும் சமர்களில் முக்கயமான ஜெயசிக்குறு சண்டையில் எதிரி யின் இலக்கை அழித்து 1997.06.10 ஆம் நாள் முதல் பெண் தரைக் கரும்புலியாக தாய் மண்ணுக்கு உரமானார்.





## கேணல் ரூபன் லெப். கேணல் சிரித்திரன்
(முதல் வான் கரும்புலிகள்)

1990களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தார்கள். வான்புலிகள் கட்டமைப்பு உருவாக் கப்பட்டபோது உள்வாங்கப்பட்டவர்கள். தலைவரின் மெய்ப்பாதுகவலர்களாகவும் - நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் இருந்தனர். இறுதியுத்த காலத்தில் விமானங்களில் ஏறி பல தாக் குதல்களை நடத்தினர். இறுதிக் கட்டமாக 2009.02.20 அன்று வான் கரும்புலிகளாகி வரலாறாகினர்.

# நவம்பர் ~ 27
# மாவீரர் நாள்



விடுதலை

எங்களின் உயிர்மூச்சு - எதிரி
வெல்லுவான் என்பது வெறும் பேச்சு
ஒரு தரம் தானே வரும் சாவு - இதை
உணர்ந்திடு; விடுதலை புயல் ஆகு...!